6}

ஸ்ரீ:

{ விஜய ஹு
ஆனி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

{ JUNE 1953
{ VOL 12 NO 6.

783
N53-12.6
199538

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1. திருமங்கையாழ்வார் வைபவம் [ஸ்ரீ. உப. ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் தேசிகசதர்சநவிஜயத்வஜ புத்தங்கோட்டகம், ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	...	158
2. திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. வித்வான் திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]	...	161
3. பரதாழ்வான் புகழ் [ஸ்ரீ. உப. வித்வான் முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, உப அத்யக்ஷர் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	...	165
4. ஜடபரத உபாக்யானம் ஸ்ரீ. உப. ஒரகடம் வே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்.]	...	169
பக்திகொண்டு பரமனையாண்ட பரகால நாயகி ஸ்ரீ. உப. ஈ. தே ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	...	173
அல்லிக்கேணியில் அழகியசிங்கர் [ஸ்ரீ. உப. V. K. பார்த்தஸாரதி ஐயங்கார், அட்வோகேட், திருவல்லிக்கேணி.]	...	176
செய்திகள்	...	182
8. திருப்பாவை [ஸ்ரீ. உப. பந்தல்குடி, ரே, திருமலை ஐயங்கார், தமிழ்வித்துவான், கார்யதர்சி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், அம்பத்தூர்.]	...	183
9. ஸ்ரீரங்கசடகோபயோகி தசகம் [ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	...	186
10. ஸ்ரீநிவாஸகவிக்ருதமாராதனம் [ஸ்ரீ. உப. R. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் சீப் ஜட்ஜ், புதுக்கோட்டை.]	...	

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ௵ ஆனி ௴ { ஸஞ்சிகை 6

27 JUN 1953

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம்
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் வைபவம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

திருமங்கையாழ்வாருடைய அர்ச்சாவதார பக்தியின் பெருமை

		(பாசுரங்கள்)
திருப்பாணாழ்வார்	,,	10
தொண்டரடிப்பொடியாழ்வார்	,,	55
முதலாழ்வார்கள் (ஒவ்வொருவரும்)	,,	100
குலசேகரன்	,,	105
ஆண்டாள்	,,	173
திருமழிசைப்பிரான்	,,	216
பெரியாழ்வார்	,,	473
நம்மாழ்வார்	,,	1296
திருமங்கையாழ்வார்	,,	1253

திருமடலின் கண்ணிகளின் ஸங்கியை அதிகம். மற்றை ஆழ்வார்கள் சிற்சில திவ்யதேசங்களை மாத்திரம் சிற்சில விருத்தங்களுடைய சிற்சில பாசுரங்களினால் அநுபவித்தார்கள்.

திருமங்கையாழ்வாரோவெனில் :—'நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்' என்றிருந்த தம்மை அந்தமில் பேரின்பத்தடியரோடு துல்யராகத் திருத்திப் பணிகொண்ட வெம்பெருமானிடத்திலுண்டான பக்தியின் பரீவாஹமாகப்பாடினவராகையினாலே அவ்வெம்பெருமானுடைய பரத்வ, ஸௌலப்ய, ஸௌசீல்யாதி கல்யாண குணங்களைப் பேசுவதில் அளவிறந்த ஆஸ்தையினால் ப்ரியனான பர்த்தாவினிடத்தில் அதிக ப்ரீதியையுடையபதிவ்ரதை பர்த்தாவுக்கு ப்ரியங்களான பற்பலசித்ராங்கங்களினாலும் பற்பல பக்ஷ்யவர்க்கங்களினாலும் பர்த்தாவை உபசரித்து உகப்பிப்பதுபோல இவ்வாழ்வாரும் தமிழ்பாஷையில் ப்ரஸித்தங்களான ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் முதலான பலவித கவிதைகளினாலும் ஸரள, ம்ருதுள, ஸூக்தி ஸந்தர்ப்பங்களினாலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாசுரங்களினாலும் அவ்வெம்பெருமான் திருவுள்ளமுகக்கும்படி செய்ததினால் மற்றையாழ்வார்களைக்காட்டிலும் இவருடைய அர்ச்சாவதாரபக்தி அதிகையாகிறது.

இத்திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் 'ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின்போவதே' என்று அருளிச்செய்திருப்பது போன்ற பாசுரங்களைக்கடாக்ஷித்த ஸ்ரீதேசிகன் 'திருமங்கையாழ்வார் தம்மை ஈச்வர விஷயத்தில் தேஹாத்மவாதியாக அருளிச்செய்வர்' என்று த்வயாதிகாரத்தில் அருளிச்செய்தார். இவ்வாழ்வார் லோகோபகாரார்த்தமாக அதிகமான பாசுரங்களை அருளிச்செய்ததைத் திருவுள்ளம்பற்றி 'வையமெல்லாம் மறைவிளங்க வாள் வேலேந்தும் மங்கையர்கோன்' என்று இவ்வாழ்வார்விஷயத்தில் மாத்திரம் அருளிச்செய்தார்.

ஆஸ்திக்யாதிசயம்

இப்படி ஸர்வேச்வரனுடைய அநுக்ரஹலப்தமான திவ்யஜ்ஞானத்தினால் சித் அசித் ஈச்வர தத்வத்ரயங்களினுடைய யாதாத்ம்ய ஜ்ஞானத்தை உடைய இவ்வாழ்வார் பகவத் ஸ்வரூபரூபகுணாதி விஷயங்களில் தெளிவை உடையவராகயிருப்பதுபோல 'கூடினேன் கூடி இளையவர் தம்மோடு' என்றும் 'ஆவியே யமுதே...பழுது போயொழிந்தன நாள்கள்' என்றும் சொன்னபடியே தாம் செய்த பாபங்கள் விஷயத்திலும் அதற்குப் பலனான நரகாநுபவ விஷயத்திலும் தெளிவை உடையவராயிருக்கையாலும், 'மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்'—என்கிறபடியே நச்வரமான தேஹமிருக்கும்போதே அந்த பாபங்களுக்கு ப்ராயச்சித்தத்தைப்பண்ணிக்கொள்ள வேணுமென்கிற ஆஸ்தையினாலே அந்த ப்ராயச்சித்தங்களைக் குறித்து ஆராய்ந்தவிடத்தில், பாபங்களுக்கு ப்ராயச்சித்தங்களாக பெரும்பாலும் சொல்லப்படுகிற 'ப்ராஜாபத்ய க்ருச்ரம்' 'சாந்த்ராயணம்' முதலியவைகளும் 'தீர்த்தயாத்ரையும்' ,ஜவஹூவ வஸீ்யஷ-ியாத்ரா வ்ருவ்ருஜாஹெ்ஹுவாயநழ | ஷெவதாராபந-ஹெுதி ஷீ்ரு ஶ-ூஜீரு வதநாநி ஷடீ [௬] ||'

'வ்ருதம நாஸ்தி தபொ நாஸ்தி ஹொ௨௦

𑌨𑍈𑌵 𑌚 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨 𑌦𑌾𑌤-
𑌵𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌤𑍍 ॥’

—(ஆபஸ்தம்பஸ்ம்ருதி)

என்று நான்காவது வர்ணத்து மனிதர்களுக்கு நிஷேதிக்கப்பட்டிருப்பதினாலே ஸர்வமனுஷ்யாதிகாரமான ஶரணாகதியை ‘நானே நாநாவித நரகம்புகும் பாவம் செய்தேன்’ என்று சொல்லப்பட்ட ஸகல பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாக அநுஷ்டித்தருளினார்.

இதனாலிவ்வாழ்வாருடைய ஆஸ்திக்யத்தின் பெருமை வெளியிடப்பட்டதாகிறது.

இங்கு–பெரிய திருமொழி முதல் பத்தில்–

‘சூதினைப்பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக்கண்டவா திரிந்த தொண்டனேன் நமன் தமர் செய்யும் வேதனைக்கொடுங்கி நடுங்கினேன் வேலை-வெண்டிரை யலமறக் கடைந்த நாதனே வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.’

‘வம்புலாம் கூந்தல்......யெற்றிவைத்தெரியெழுகின்ற செம்பினாலியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற்கஞ்சி நம்பனே வந்துன் திருவடியடைந்தேன்’

‘இடும்பையா லடர்ப்புண்டிடுமினோ துற்றென் றிரந்தவர்க்கில்லையேயென்று நெடுஞ் சொலால் மறுத்த நீசனேனந்தோ நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை-கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர்கொடுமிறைக்கஞ்சி நடுங்கி நான் வந்துன் திருவடியடைந்தேன்’

என்பவை முதலிய பற்பல பாசுரங்களில் தாம் அநுஷ்டித்த பாபங்களைச் சொல்லி அவைகளுக்குப் பலனான யமதூத தண்டனைக்குப் பயந்து ஶரணாகதியைப் பண்ணினதாகச் சொல்வதால் இந்த ஶரணாகதி ஆழ்வார் பூர்வாவஸ்தையில் அறிவில்லாததினால் செய்த பாபங்களுக்கு ப்ராயச்சித்தரூபை என்று வ்யக்தமாகிறது.

இதே க்ரந்தத்தில் மேல் இவ்வாழ்வாரால் மோக்ஷார்த்தமாக ஶரணாகதி வ்யக்தமாக வேறு சொல்லப்படுவதாலும் இது ப்ராயச்சித்த ஶரணாகதி என்பது–நிச்சயம்.

இங்கு ஆழ்வாரால் சொல்லப்படும் எல்லா பாபங்களும் திருமங்கையாழ்வாரால் செய்யப்பட்டனவென்று சொல்வது உசிதமாகாது. ஆகையினால் எந்த பாபங்களைச் செய்தாலும் ஸர்வமனிதர்களும் யோக்யமான ப்ராயச்சித்தத்தைச் செய்யவேண்டியது அவச்யமென்பதை உலகத்திற்கு தெரிவிப்பதற்காகவும் ஸர்வபாபங்களையும் தான் பண்ணினதாக அருளிச்செய்தார் என்று சொல்வது உசிதமாகும்.

இங்கு, பாபம் ஸம்பவித்தால் தகுந்த ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியது அவசியமானாலும் செய்த பாபங்களை ப்ரஸித்தமாகச் சொல்லிக்கொள்ளவேண்டுமோ என்று சிலர் கேட்கக்கூடும். இதற்கு ஸமாதானம்:—

ஆச்வமேதிக பார்வத்தில்–

‘𑌵𑍍𑌯𑌾𑌪𑌨𑍇𑌨𑌾𑌨𑍁𑌤𑌾𑌪𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌪𑌾-
𑌪𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌾𑌧𑍇-
𑌨 𑌯𑌶𑍋𑌽𑌪𑌿 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 𑌚𑌾𑌨𑌘 ॥
𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑌂𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌯𑌾𑌵𑌤𑍍 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍-
𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌂𑌵𑌿𑌹𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍
𑌕𑍍𑌷𑌯𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ॥’

என்று பகவானாலே சொல்லப்பட்டிருப்பதை அநுஸரித்து பாபத்தை ஆழ்வார் ப்ரகாசமாகச் சொல்லிக்கொண்டார்.

ஆனாலும் ப்ராயச்சித்தத்தை ரஹஸ்யமாகச் செய்துகொள்ளலாமே, ஶரணாகதிரூபப்ராயச்சித்தம் ஜ்ஞாநரூபமாகையினாலே ரஹஸ்யமாக அநுஷ்டிக்கவும் ஸாத்யமே, என்று ஸந்தேஹிக்கலாம். இந்த விஷயத்தில், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ‘சிஷ்டதயா வ்யபதேச்யரான ஸமர்த்தருக்கு லோகஸங்க்ரஹத்துக்காகவும் ப்ரஸித்த நிமித்தங்களில் யதாசக்தி ப்ரஸித்தப்ராயச்சித்தமுசிதம். அது தவிருகையும் முன்சொன்ன வாஜ்ஞாதிலங்கனமாம்’ என்று அருளிச்செய்திருப்பதால்–திருமங்கையாழ்வார் ப்ரஸித்தமாக ப்ரபத்திரூபப்ராயச்சித்தத்தையும் பண்ணிக்கொண்டார்.

வக்த்ருவைலக்ஷண்யம்

'யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்' என்று வேதத்திலும் 'வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந | பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கச்சந ||' 'வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம்' என்று பகவத்கீதையிலும் 'யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:' என்று நாதமுனிகளாலும் சொல்லப்பட்டிருக்கிறபடியே ஸ்வதஏவ ஸர்வதா ஸர்வ வஸ்துக்களையும் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீமானான நாராயணனுடைய அநுக்ரஹத்தினாலேயே வால்மீகி வ்யாஸாதி மஹர்ஷிகளும்கூட க்ரந்தகர்த்தாக்களானார்கள். என்று 'யஸ்மிந் ப்ரஸாதஸுமுகே கவயோऽபி யே தே சாஸ்த்ராண்யசாஸ்த்ரமிஹ யந்நஹிரோபுயாணி' என்கிற அபியுக்த வாக்யம் சொல்லுகிறது.

அப்படி ஸர்வஸாதாரண பகவதநுக்ரஹலப்தஜ்ஞாநர்களான வேதவ்யாஸ சடகோபாதிகள் போலன்றிக்கே இத் திருமங்கையாழ்வார் ஸர்வேச்வரனால் லோகோஜ்ஜீவனார்த்தமாக ஸாக்ஷாத்தாகவுபதேசிக்கப்பெற்றவராய் 'உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து' என்று தமது வாயினாலேயே கொண்டாடப்பட்ட திவ்யஜ்ஞாநத்தை உடையவராகையினாலே இவருடைய ஜ்ஞாநமூலமான பாசுரங்கள் மற்றை ஆழ்வார்களாலுபதேசிக்கப்பட்ட பாசுரங்களைக் காட்டிலும் உபாதேயதமங்களாகும். இங்கு பெரிய திருமொழி-ப-6-6-10 'பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மையாளன் புலமங்கைக்குல வேந்தன்' என்பது அநுஸந்தேயம்.

வசநவைலக்ஷண்யம்

பெரும்புறக்கடலையடலேற்றினைப்பெண்ணையானை, எண்ணில் முனிவர்க் கருள்தருந் தவத்தைமுத்தின் திரள்கோவையைப்பத்தராவியை நித்திலத்தொத்தினை, அரும்பினையலரை யடியேன் மனத்தாசையை அமுதம் பொதியின்சுவைக் கரும்பினைக், கனியைச் சென்றுநாடிக் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே.

பண்ணினை பண்ணில் நின்றதோர் பான்மையைப் பாலுள் நெய்யினை மாலுருவாய் நின்ற விண்ணினை, விளங்கும் சுடர்ச் சோதியை வேள்வியை விளக்கினொளி தன்னை, மண்ணினை மலையை யலைநீரினை மாலை மாமதியை மறையோர் தங்கள் கண்ணினைக் கண்களாரளவும் நின்று கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே.

எண்ணில் நினைவெய்தி யினியில்லையிறையென்று முனியாளர் திருவார், பண்ணில் மலிகீதமொடு பாடியவராடலொடு கூட எழிலார், மண்ணிலிதுபோல நகரில்லையென வானவர்கள் தாம்மலர்கள் தூய், நண்ணியுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே.

ஒருகுறளாயிருநிலம் மூவடிமண்வேண்டி உலகனைத்துமீரடியா லொடுக்கி, ஒன்றும் தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன் தாளணைவீர் தக்ககீர்த்தி அருமறையின் திறள் நான்கும் வேள்வியைந்தும் அங்கங்களவையாறு மிசைகளேழும், தெருவில்மலிவிழாவளமும் சிறக்கும் காழிச் சீராமவிண்ணகரே சேர்மினீரே.

கொந்தலர்ந்தநறுந்துழாய் சாந்தம் தூபம் தீபம் கொண்டமரர்தொழப் பணங்கொள் பாம்பில், சந்தணிமென்முலைமலராள் தரணிமங்கை தாமிருவரடிவருடும் தன்மையானை, வந்தனைசெய்து இசையேழாறங்கம் ஐந்து வளர்வேள்வி நான்மறைகள் மூன்றுதீயும், சிந்தனைசெய்திருபொழுதும் ஒன்றும் செல்வத் திருக்கோவலூரதனுள்கண்டேன் நானே.

(திருவெழுக்கூற்றிருக்கை)

ஒருநாளிருநீர் மடுவுள் தீர்த்தனை- முத்தீ நான்மறை ஐவகை வேள்வி- அறுதொழிலந்தணர் வணங்கும்தன்மையை- ஐம்புலனகத்தினுள் செறுத்து- நான்குடனடக்கி முக்குணத்திரண்டவை யகற்றி- ஒன்றினிலொன்றிநின்று- ஆங்கிருபிறப்பறுப்போரறியும் தன்மையை-முக்கண் நாற்றோளைவாயறவோடு- ஆறுபொதிசடையோனறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை- ஏழுலகெயிற்றினில் கொண்டனை

இப்படிப்பட்ட செவிக்கினிய செஞ்சொற்களைத் திருமங்கையாழ்வார்ஸூக்திகளில்தான் பார்க்கலாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

உபோத்காதம்

நந்தகோகுலத்தின் சிறப்பு அபாரமானது. நம் போன்றவர்களுடைய வாக்குக்கு எட்டாதது. ஸ்வதர்மத்தைச் செவ்வனே கடைபிடித்தவர் நந்தர். அவர் ஆய்ப்பாடிக்கு அதிபதி. தாம் எப்படிச் சிறிதும் பிறழாது தமது கடமைகளைச் செய்துவந்தாரோ அப்படியே அங்குள்ள மற்றவர்களும் தந்தமது கடமைகளைச் சரிவர அநுஷ்டிக்கும்படி ஆட்சி செலுத்தினர். மிகுந்த அன்பும் கருணையுமுள்ள அவர், பிறர் தருமமார்க்கத்திற்கு விரோதமாய்நடந்தபோது சிறிதும்தாக்ஷிண்யமின்றி தண்டிப்பார். அதனால் ஸர்வஜநங்களும் அவரிடத்தில் மிகுந்த மரியாதையும் அச்சமும் கொண்டு ஒழுங்காய் நடந்துவந்தனர். அன்பும் கருணையுமின்றி கண்டிப்பாயிருக்கும் அரசனை குடிகள் வெறுக்கும். கண்டிப்பும் தீரமுமின்றி வெறும் தயையும் தாக்ஷிண்யமுமுள்ள மன்னனை மக்கள் மதிக்கமாட்டார்கள். ஆகவே இருவித குணங்களும் அரசனிடத்தில் அவசியம் இருக்கவேண்டும். இவற்றைப் பெற்றிருந்த நந்தருடைய ஆதிபத்யம் மிக விளங்கிற்று. இவ்வாறு கோகுலத்து ஜநங்கள் ஸ்வதர்மத்தில் நிலைபெற்று சிலாச்யமான வாழ்க்கையை நடத்திவந்தபடியால் அதனால் மகிழ்ச்சியுற்ற இந்திரன் முதலிய தேவர்கள் அவர்களிடத்தில் பூர்ண அநுக்ரஹம் செய்து காலத்தில் மழை பெய்தும், பெருங்காற்று அடிப்பது தீப்பற்றி எரிவது பல பிணிகள் உண்டாவது என்றிவ்விதத் தீங்கு யாதுமில்லாமற் பாதுகாத்தும், தனதான்ய ஸம்ருத்தியையுண்டாக்கியும் அவர்களது வாழ்க்கையை இன்பமயமாக்கினர்.

இந்நிலையில் வஸுதேவர்க்கு தேவகியின் கர்ப்பத்தில் புத்திரராய் அவதரித்த ஸ்ரீக்ருஷ்ணன் அவரால் மதுராபுரியிலிருந்து கோகுலத்திற்கு எடுத்து வரப்பட்டு நந்தருடையவும் யசோதைப் பிராட்டியினுடையவும் புதல்வராய் நின்று பலராமருடன்கூடி திவ்யலீலைகள் புரிந்து கோகுலத்தின் பெருமையை மேன்மேலும் பெருக்கினர். ஐச்வர்யம் பொங்கிற்று. உலகத்தில் மற்று எவர்க்கும் அரிதான பேரானந்தத்தை அங்குள்ள யாவரும் அநுபவித்தனர். ஸந்தான ஸம்பத்து நிறைய உண்டாயிற்று. ஒவ்வொரு வீட்டிலும் தங்கவிக்ரஹம் போன்ற புருஷக்குழந்தைகளும் கந்யகைகளும் நிரம்பியிருந்தனர். தமது அருமையான வசீகரமான பேச்சு, விளையாட்டு, இவற்றினால் தமது தாய் தந்தைகள், பாட்டன் பாட்டிமார்கள், மாமன் மாமிமார்கள், மற்றுமுள்ள பந்துக்கள் ஊரிலுள்ளோர் எல்லோரையும் களிப்பித்தனர். ஸ்ரீக்ருஷ்ணன் இவர்களை மிகவும் நேசித்தார். இவர்களும் அவரிடத்தில்பேரன்பு பூண்டு பரவசர்களாயினர்.

இவ்வாறு ஆயர்பாடி ஸ்ரீவைகுண்டம்போலவும் அக்காலம் க்ருதயுகம்போலவுமிருக்க அங்குள்ளவர் யாவரும் நித்யஸூரிகள்போல பேரானந்தத்துடன் வாழ்ந்துவரும்பொழுது ஒரு ஸம்வத்ஸரம் ஆறு ருதுக்களில் ஒன்றான ஹேமந்தருதுவின் முதல்மாஸமான மார்கழி மாதம் வந்தது. மார்கழி மாதத்தில் கந்யகைகள் எல்லாரும் ஒரு நோன்பு நோற்பது வழக்கம். அதன்படி அப்பொழுது ஆயர்பாடியிலுள்ள சிறுமிகள் அந்நோன்பை அநுஷ்டிக்க விரும்பினர். என்றைக்கு அதை அநுஷ்டிக்க வேண்டுமோ அதற்கு முதல்நாள் ஸ்ரீக்ருஷ்ணனிடம் சென்று தமது விருப்பத்தைத் தெரிவித்து நோன்பிற்காகவேண்டிய ஸாமக்ரியை எல்லாம் உதவி அதை நடத்திவைக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவர்களிடத்தில் பரம வாத்ஸல்யமுள்ள ஸ்ரீக்ருஷ்ணன் அப்படியே ஆகட்டுமென்று வாக்குக் கொடுத்தனுப்பினர்.

பெண்களுக்கெல்லாம் வெகு ஸந்தோஷம், வெகு உத்ஸாஹம். ஸ்ரீக்ருஷ்ணன் திருமாளிகையிலிருந்து திரும்பினவுடனே அவர்கள் எல்லோரும் ஓரிடத்தில்கூடி ஆநந்தபரவசர்

களாய் அதன் பரிவாஹமாகப் பலபடி பேசினர். ‘எவ்வளவுதான் அழகாய் இருக்கிறானடி க்ருஷ்ணன்! அவனைவிட்டுவர மனமே இல்லையடி எனக்கு’ என்றாள் ஒருத்தி. வெகு நல்லவனடி அவன்! கருணாமூர்த்தி. நாம் போய் எங்களுக்கு உதவிபுரியவேண்டுமென்று கேட்டால் நம்மை லக்ஷ்யம் செய்து உடனே அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டானே! யார் அப்படிச் செய்வர்?’ என்றாள் மற்றொருத்தி. ‘ஆமாமடி; இப்பொழுது சொல்லிவிட்டான் அப்படியே ஆகட்டுமென்று. சொன்னபடியே நாளைக்குச் செய்யப்போகிறானென்று யார் கண்டார்கள்? பொய் சொல்லுவதும் திருடுவதுமே அவன் ஸ்வபாவமென்று பலர் பேசக் கேட்டிருக்கின்றோம்’ என்றாள் இன்னுமொரு பெண். ‘அப்படியெல்லாம் ஒன்றும் சொல்லாதேயடி பெண்ணே. தன் வீட்டில் ஒன்றுமில்லாமலா பிறர் வீட்டில் வந்து அவன் தயிரும் பாலும் வெண்ணெயும் திருடி உண்கின்றான்? ‘திருடினான்’ ‘திருடினான்’ என்று புகார் செய்கின்றவர்களும் ஒரு க்ஷணம் அவன் தம்வீட்டுக்கு வராவிட்டால் ‘வரவில்லையே வரவில்லையே’ என்று ஏங்கித் தவிக்கிறார்களே; அது ஏன் தெரியுமா உனக்கு? வெறுமனே ஒருவனை நிந்திக்காதே. நாம் எதைக்கண்டோம்’ என்று ஸமாதானம் கூறினாள் வேறொரு கன்னி.

இப்படிப் பலர் பலவிதமாக மேல்மேல் பேசாநிற்க, உத்ஸஹா என்னுமொருவள் ‘அடியே பெண்களா, என்ன இப்படி ப்ரக்ருதத்திற்கு ஸம்பந்தமிராதவற்றையே பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே? நடக்கவேண்டிய கார்யத்தையன்றோ கவனிக்கவேண்டும். நான் சொல்லுகின்றேன் கேளுங்கள். நாம் செய்யப்போகும் வ்ரதாநுஷ்டாநம் ஒரு குறைவுமின்றி வெகு அழகாகவும் சிறப்பாகவும் நடைபெறவேண்டும். நமது தோழிகளில் ஒருத்தி கூட வராமலிருக்கக்கூடாது. வேண்டிய ஸாமக்ரியில் ஒன்றுகூட குறைவாக இருக்கக்கூடாது. எல்லாம் காலத்தில் நடைபெறவேண்டும். ஸமயத்தில் ‘இது இல்லை அது இல்லை’ என்னாமல் முன்ஜாக்ரதையாக எல்லாவற்றையும் சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும். படுக்கப்போவதற்கு முன் இக்காரியத்தை எல்லாம் முடிக்கவேண்டும். மற்றொரு ப்ரதாநவிஷயமிருக்கின்றது. பலருக்கு விடியற்காலை கண்விழிக்காது. அப்படிப்பட்டவர்களை எழுப்பி அழைத்துவர யாராவது பொறுப்பு ஏற்கவேண்டும்’ என்றாள்.

இதைக்கேட்டவுடனே நிச்சலா என்பவள் ‘இதற்கென்னடி ப்ரமாதம். நான் எல்லாரையும் எழுப்பி அழைத்துவருகிறேன். இதைப்பற்றி ஒருவருக்கும் கவலைவேண்டாம். இது என் பொறுப்பு. இவ்விதமே ஒவ்வொருவர் ஒவ்வொரு கார்யத்தை ஏற்றுக்கொண்டு செய்தால் குழப்பமில்லாமல் கார்யம் செவ்வையாய் நடைபெறும்’ என்றாள். ‘இப்போது இப்படிச் சட்டமாய்ப் பேசுவாய். விடியற்காலை தெரியும் நீ என்ன பண்ணுகிறாயென்று. உன்னையே பிறர் எழுப்பவேண்டிவரும்’ என்று ஒருத்தி பரிஹாஸமாய்ச் சொல்ல அவள் ‘அப்படியானால் அப்பொழுதன்றோ நீ என்னைச் சொல்லவேண்டும். இப்பொழுது எதற்காக இப்படிப் பேசுகிறாய். பரீக்ஷித்துப்பார்த்தன்றோ ஒன்றைத் தீர்மானிக்கவேண்டும். உன் துஷ்டத்தனம் மாத்திரம் எப்பொழுதும் போவதில்லை’ என்று கடிந்து பேசினாள். இவர்களுக்குள் வாதம் வளராமல் மற்றவர்கள் சாந்தமாக்கினார்கள்.

‘நல்லது; நாம் பேசிக்கொள்வதையெல்லாம் பேசியாய்விட்டது. போவோம் வாருங்கள் அவரவர்கள் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு சீக்கிரமே படுத்துக்கொள்ளுங்கள். அதிகாலையில் எழுந்திருக்க ஸௌகர்யமாயிருக்கும்’ என்றாள் அக்கூட்டத்தில் ப்ரதாநமாயிருந்த பெண். அப்பொழுது ஒருத்தி அவளிடம் சென்று ப்ரமந்தா என்னும் ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டி ‘தான் சொன்ன வார்த்தையை இவள் நிறைவேற்றமாட்டாள். கூப்பிட்டால், ‘இதோ போ, வருகிறேன்’ என்பாள். வரமாட்டாள். மறுபடியும் கூப்பிட்டால் ‘என்னடி தொந்தரவு’ என்று கோபிப்பாள். சண்டிப்பேர்வழி’ என்று காதோடு மெதுவாகச் சொன்னாள். ‘அதற்கென்ன இருக்கட்டும். எனக்கு முன்னமே தெரியும். எல்லாம்

சுரியாய்விடும். 'அதைப்பற்றி நீ சிந்தைப்படாதே' என்று அவளுக்கு ஸமாதானம் கூறிய பிறகு அந்த நாயகப் பெண் எல்லோரையும் அவரவர் வீட்டுக்குப் போகும்படி அனுப்பிவிட்டுத் தானும் தன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

உலகத்திலிருந்த கன்னிகைகளுக்கெல்லாம் உயர்ந்து தனக்கு நிகரில்லாதவளான கன்னிகை இவள். நந்தகோகுலத்தில் பிறந்து ஸ்ரீக்ருஷ்ணனோடு கூடவிருந்து விளையாடும் பாக்யம் பெற்ற கன்னிகள் யாவருமே வெகு அழகு வாய்ந்தவர்கள். ஆகிலும் அவர்களுக்குள் இவள் நக்ஷத்ரங்களின் நடுவில் சந்திரகலை போல் விளங்கினாள். கோபம், பதட்டம், பிறரிடத்தில் குற்றம்கூறுவது இவைபோன்றதுர்க்குணங்களில் எதுவுமில்லாதவள். பொறுமை, சாந்தி, தயை, தாக்ஷிண்யம் முதலிய ஸர்வ நல்ல குணங்களும் பொருந்தியவள். ஸ்வபாவமாகவே நல்ல புத்திமதி; அதோடு வயது சிறிதேயாகிலும் எம்பெருமானுடையகடாக்ஷ விசேஷத்தினாலும் பெரியோர்கள் மகிழ்ந்து செய்த அநுக்ரஹவிசேஷத்தாலும் முதியோருக்கும் கிடைக்கவரிதான தத்வஜ்ஞானமும் மஹாவிவேகமும் பெற்றவள். உத்தமோத்தம பரமைகாந்திகளுக்குள்ள பகவத்பக்திவிசேஷமும் மன உறுதியுமுள்ளவள். ஐயம்திரிபு சிறிதுமிடம்பெறாமல் அவ்வளவு த்ருடமாய் ஸர்வஶாஸ்த்ரார்த்தநிஷ்கர்ஷம் பெற்றவள். குலதர்மங்களையும் ஆசாரங்களையும் பூர்ணமாய் அறிந்தவள். அவற்றை அநுஷ்டிப்பதில் ஆசையும் ச்ரத்தையும்கொண்டவள். நினைத்த காரியத்தைச் செய்துமுடிக்கும் திறமை வாய்ந்தவள். பிறர் யாவரையும் தன்வசமாக்கி ஆளக்கூடிய அபார ஸாமர்த்யமுடையவள். கேட்போர் எவராகிலும் மயங்கி வச்யாம்படியான ஆச்சரிய வாக்குவன்மையுள்ளவள். காலதேசங்களுக்குத் தக்கபடி அவரவர்களிடத்தில் பழகுவதில் கைதேர்ந்தவள்.

இத்தகைய அத்புத அபாரயோக்யதையுள்ள அந்த கோபகுமாரி தன் வீடுசேர்ந்து மறுநாள் அநுஷ்டிக்கவேண்டிய நோன்பைப் பற்றின ஸகல விஷயங்களையும் மனஸ்ஸினால் தீர்மானித்துக்கொண்டு ஆரோக்யம் கெடாமலிருப்பதற்காகக் கொஞ்சகாலம் படுத்துத் தூங்க எண்ணி 'இத்தனை நாழிக்குக் கண் விழித்து எழுந்திருக்கவேண்டு'மென்று த்ருடமான ஸங்கல்பம் செய்துகொண்டு படுத்தாள். தூங்கியெழுந்து உத்தேசித்தநேரத்திலேயே எழுந்தேனா என்றறிய ஆவல்கொண்டு வீதியில் வந்து சந்திரனையும் நக்ஷத்ரங்களையும் பார்த்து அதிலேயே எழுந்தேனென்று அறிந்தாள்.

ஸ்ரீரங்கம்போலே நந்தகோகுலத்தின் ஸந்நிவேசம் அமைந்திருந்தது. மத்தியில் நந்தகோபருடைய அரண்மனை. அதைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் விசாலமான பல வீதிகள். ஒவ்வொரு வீதியிலும் பலவிதமாகக் கட்டப்பட்ட உயர்ந்த மாடிவீடுகள். வீடுகளின் எதிரில் நிழல்தரும் செழித்தமரங்கள். இப்படி இவையெல்லாமங்கு விளங்கின. அரண்மனையின் பெரியவாசல் கீழ்த்திசையை நோக்கியிருந்தது. அதிலிருந்து வீதிகளைத் தாண்டி வெளியேவந்தால் கடைசிவீதியின் தென்பாகத்தில் முதல்வீடு இந்த ப்ரதான கோபகுமாரியினுடையது. இவள் வீதியில் வந்து ஆகாசத்தைப்பார்த்து இத்தனை நாழி ராத்ரியில் சென்றுவிட்டது. இனி விடிய இத்தனை நாழி இருக்கின்றது என வறிந்தாள். 'இதுதான் சமயம். இப்பொழுதே வீட்டை விட்டுப் புறப்படவேண்டும்' என நிச்சயித்தாள். க்ருஹத்திற்குள் சென்று முகம் கை கால்களை அலம்பி சுத்திசெய்துகொண்டு புறப்பட்டு தெற்கு வடக்காகவிருக்கும் வீதியின் நடுவில் வடக்குமுகமாக நின்று இடதுபக்கமாக முகத்தைத் திருப்பி ஸ்ரீநந்தகோபர் அரண்மனை வாசலை ஒரு தடவை பார்த்துவிட்டுத் தலைவணங்கிக் கைகளைக் கூப்பி 'உன் திருவருளால் எங்களுடைய வ்ரதாநுஷ்டானம் செவ்வையாக நடந்து பூர்த்தியாகவேண்டும்' என்று பகவானை ப்ரார்த்தித்தாள். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தாள். தோழிப்பெண்களில் ஒருத்தியும் வரவில்லை. 'தூக்கம் வலிது என்ன செய்வார்கள் பாவம்' என்று அவர்கள் விஷயத்தில் இரங்கினாள். ஆயினும் விதிப்படி நோன்பை

அநுஷ்டித்தாகவேண்டுமே என்று எண்ணித் தானே எல்லோரையும் எழுப்பவிரும்பினாள். வீதியில்நின்றே இனிய குரலில் உரக்கக் கூவி அழைத்தாள்.

'இது மார்கழி மாஸம், 'மாஸங்களுக்குள் மார்கழி நான்' என்று பகவான் கொண்டாடும் மாஸம். மேல்ஸம்வத்ஸரத்து மழைக்கு கர்ப்பா தானம் செய்யும் மாஸம். கேசவ நாராயண என்ற பன்னிரண்டு வ்யூஹாந்தரங்களில் முதலாவதான கேசவனுடையமாஸம். உத்தராயணம் தேவர்களுக்குப்பகலாகையால் அதற்கு முன் ராத்திரியின் ப்ராஹ்மமுஹூர்த்தம் போன்ற மாஸம். லோகஸ்ரஷ்டாவான ப்ரஜாபதியாக ஓதப்பட்ட ஸம்வத்ஸரத்திற்கு மற்ற ருதுக்கள் தலை, வலதுகை, இடதுகை, கால்கள் என்கிற அங்கங்களாக விருக்க ப்ரதானமான நடுஉடலான ஹேமந்தருதுவின் முதல் மாஸம். நோன்புநோற்க ஆரம்பிப்பதற்கேற்ற மாஸம்.

இப்படி உயர்ந்த இந்த மாஸத்தில் இன்று சந்திரன் பூர்ணமண்டலனாயிருக்கிற நல்லநாள். எம்பெருமானுடைய மனஸ்ஸிலிருந்து உண்டானவன் சந்திரன். தன்னை ஆச்ரயித்தவர்களிடத்தில் எம்பெருமானுக்குள்ள ப்ரஸாதமே (அருளே) மூர்த்திகரித்து வந்தது போன்றிருப்பவன். அவன் பூர்ணமண்டலனாயிருந்து எம்பெருமானுடைய ப்ரஸாதம் நம்மிடத்தில் பூர்ணமாயிருக்கிறதெனக் காட்டுகின்றான்.

காலம் வந்தால் அதற்குரிய கர்மங்களைச் செய்யவேண்டியது நமது கடன். வஸந்தருது வந்தால் ஜ்யோதிஷ்டோமம் பண்ணவேண்டுமென்கிறது சாஸ்த்ரம். பொழுதுவிடிந்தால் பொழுதுபோனால் ஸந்த்யாவந்தனத்தையும் அக்நிஹோத்ரத்தையும் பெரியோர் செய்கின்றனர். அதுபோல் இந்த மார்கழி பௌர்ணமி வந்திருப்பதால் நாமும் நமக்கேற்பட்ட கர்மாவைச் செய்யவேண்டும். செய்யாவிட்டால் எம்பெருமானிடத்தில் அபசாரப்பட்டவர்களாவோம். ஆகையால் வாருங்கள்' என்றாள்.

தனது நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு வருவதாக இருக்கக்கூடாது. செய்யும் காரியமெல்லாம் எம்பெருமானுடைய திருவுள்ளமுகப்பதற்காகச் செய்யப்படுகின்றது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் தமக்கே ஸரஸமான ஸ்வயம்ப்ரவ்ருத்தியாயிருக்க வேண்டுமென்று கருதி 'நீராடவருகிறவர்கள் வாருங்கோள்' என்றாள். இப்படித்தான் அழைப்பது ஆண்களையன்று. பின் பெண்களையே என அறிவிக்க 'நேரிழையீர்' என்று கூப்பிட்டாள். ஆபரணம் பூண்டால் அவர்கள் சோபிப்பதோடு ஆபரணமும் சோபிக்குமாம்-அவ்வளவு நேர்த்தி, அவ்வளவு பொருத்தம் அவர்களுக்கும் ஆபரணத்திற்கும். அவ்வளவு அங்க ஸௌஷ்டவமும் ஸௌந்தர்யமுமுள்ளவர்கள் அவர்கள். வெகு விவேகமுள்ளவள் இந்த ப்ரதான கோபகுமாரி என்பது முன்னமே கூறப்பட்டது. ஆதலால் இவள் 'எம்பெருமானைச் சேர்ந்தவர்களாயிற்றே இவர்கள்' என்று அக்கன்யகைகளிடத்தில் நிரம்ப அபிமானமுள்ளவளாய் அவர்களுடைய அழகையனுபவித்துக் கொண்டாடிப் பேசுகிறாள். ஸ்த்ரீகளிலும் வயதானவர்களையும் விவாஹமாகித் தருணிகளாயிருப்பவர்களையும் இவள் அழைக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் இந்த நோன்பில் அதிகாரம், அதாவது யோக்யதை இல்லை. வெறும் கன்யகைகளுக்கே இதில் அதிகாரம். ஆகையால் 'சிறுமீர்காள்' என்றும் கூப்பிட்டாள். இந்தச்சிறுமிகளின் அழகைக் கொண்டாடின இவள் மற்றொரு விசேஷத்தையும் கொண்டாடினாள். அவர்களுடைய வாஸஸ்தானம் 'சீர்மல்குமாய்ப்பாடி'.எல்லா ஸ்ரீயும் அங்கே நிறைந்திருந்தது. தனஸ்ரீ தான்யஸ்ரீ பசுஸ்ரீ ஒன்றுக்கும் சிறிதும் குறைவில்லை. எல்லாம் நிரம்பி மேல்மேலும் பொங்கிற்று. ஆனால் அங்குள்ளமஹாஜநங்கள் இந்த ஸம்பத்தையெல்லாம் ஸம்பத்தாகவே மதிக்கவில்லை. இதெல்லாமன்று அவர்கள் வெகுமதித்த, அவர்களுக்கு மனநிம்மதியையும் ஆநந்தத்தையும் கொடுத்த செல்வம். தங்கப்பதுமை போன்ற இச்சிறுமிகளே அங்குள்ளோர்க்கு அவ்விதச் செல்வம். எவ்வளவு களைப்பு இருந்தாலும் இவர்களைப்பார்த்தமாத்ரத்தாலேபெற்றோர்களுக்கு அஃதெல்லாம் உடனே போய்விடும். பேசினால் பரமாநந்தமுண்டாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ பரதாழ்வான் புகழ்

புசழ் என்பது வடமொழியில் கீர்த்தி யெனப்படும். அக்கீர்த்தி ஒரு மனிதனுக்கு அநேக ப்ரகாரமாக உண்டாகலாம். அவைகளில் விஷயஸாந்நித்யமிருந்தும் அதை அநுபவிக்க சக்தியும் ஸ்வாதந்த்ரியமும் இருந்தும் கூட அதை அநுபவிக்காததாலேற்படும் புகழ் மிகவும் சிறந்தது. அவ்விதம் சிறப்புற்ற புகழ் ஸ்ரீ பரதாழ்வானுக்கு ஸ்வரூபநிரூபக தர்மமாசயிருந்ததென்று ஸ்ரீ ஆதிகவி வால்மீகியும் மஹாகவிகம்பரும் ஸ்ரீமத்ராமாயணத்தில் சக்ரவர்த்தித்திருமகன் உள்பட அநேக பெரியோர்கள் மூலமாக வெளிப்படுத்தியிருப்பதை இங்கு நிரூபிக்கிறோம் —

கோசலை புகழ்தல்

ஸ்ரீ பரதாழ்வான் மாதுலக்ருஹத்திலிருந்து அயோத்தியையடைந்து அங்கு நடந்த வ்ருத்தாந்தத்தை கைகேயிமூலமாகக் கேட்டு மிக வருத்தத்துடன் அவளைப் பலவாறு நிந்தித்துவிட்டு அவளிடத்திலிருக்கப்பிடிக்காமல்பெரிய தாயாரான கோசலையையடைந்து, அங்கு ஆகாசத்தில் வாழுந்தேவரும் அழுது சோருமாறு 'சக்ரவர்த்தியையும் அவரது திருமகனையும் விட்டுப் பிரிந்து தனிப்பட்டவனானேனே' என்று கதறி, இத்துயரைத் தீர்த்தீர் என்று ப்ரார்த்திக்க, கோசலையும் இவன் குற்றமற்றவன் என்று தெரிந்துகொண்டு 'ஐயனே! நீ கேகய நாட்டிற்கு அதிபதியாகிய அச்வபதியினது மகளாகிய கைகேயி செய்த வஞ்சகச் செயலை அறிந்திலைபோலும்' என்று சொன்னவளவில் 'எனக்குத் தெரிந்து ராமனைக் காட்டிற்கு அனுப்புவது நிகழ்ந்திருக்குமாயின் இன்னின்ன பாபங்கள் செய்தவர்கள் எந்த கதி அடைவர்களோ அந்த கதி எனக்கும் கிடைக்கட்டும்' எனப் பரதன் சபதமாகச் சொல்லப்படும் உறுதிமொழிகளைச் சொல்ல, அப்பொழுது கோசலை திருவின்நீங்கிக் கொடிய காட்டை முன்னே சென்ற ஸ்ரீராமசந்த்ரன் திரும்பிவரப் பார்த்தாற்போன்ற மகிழ்ச்சியையுடையவளாய் பெருத்த வெவ்விய தனங்களிலிருந்து பீறிட்டுப் பால் சிந்த சோகத்தினால் பொருமிநின்று முகம்வீங்க அழுதுகொண்டு 'ராஜாதிராஜனே, அநாதியான உமது குலத்துக்குப் பூர்வபுருஷர்களாகிய மனு முதலியோரில் உன்னையொத்த தன்மையுடையவர் எவர் தாம்?' என்று புகழ்ந்து வாழ்த்தினாள். அப்பொழுது பரதன் சக்ரவர்த்தித்திருமகனைப் பார்த்துச் சொல்லவேண்டிய 'ராஜாதிராஜனே' யென்பதைத் தன்னைப்பார்த்துச் சொன்னாளே யென்று நினைத்து நினைத்து மனமிளகி உருகி அழுபவனாயினான். இதை மஹாகவி கம்பர்:—

'முன்னை நுங்குலமுதலுளோர் கடா,
நின்னையாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினா
ளுன்னி யுன்னி நைந்துருகி விம்முவான்'

—[அ-கா. பள்ளிப்படைப்படலம்-120.]

என்றார்.

சபையோர் புகழ்தல்

சக்ரவர்த்தியின் சரமக்ரியை முடிந்தபிறகு வேதம் வல்ல ப்ராஹ்மணர்களும் பிறர் செய்தற்கு அரிய தவத்தைச் செய்யும் முனிவர்களும் வயது சென்றவரான நகரத்துப் பெரியோர்களும் பரதனிடம் வந்து 'ஐயனே! நீ தர்மம் என்கின்ற ஒப்பற்ற பொருளை யாவரையுமநுஷ்டிக்கச் செய்து நிலைநிறுத்துவது அருமையான செயலாகும் என்ற இவ்விஷயத்தை நன்குணர்வாயென்றும், இப்போது தந்தையான தசரதமன்னவன் சத்தியந் தவறாமலிருக்கும்பொருட்டுத் தனதான்யங்களால் செழித்துள்ள இந்த பூமியை உனக்குக் கொடுத்து சுவர்க்கஞ்சென்றான். உன் அண்ணன் ஸ்ரீராமனோ நாட்டைத் துறந்திட்டு காட்டிற்குச் சென்றான். அவ்விருவருமில்லாமையால் நீ ராஜ்யத்தைப் பாதுகாக்கவேண்டியவன் என்றும், இன்னும் அநேகவிதமான நியாயங்களையும் வஸிஷ்டர் மூலமாகத் தெரிவிக்க, அதைக்கேட்ட பரதன் எல்லா உலகங்களுக்கும் ஒப்பற்ற முதற்காரணனாகி எனக்கு முன்னே தோன்றின

வணங்கிய ஸ்ரீராமன் இருக்கையில் நான் கிரீடந் தரித்து அரசுபுரிவது பெரியோர் சொல்லுமாறு தருமமாகிவிட்டதே! இங்ஙனமாயின் என்னைப்பெற்ற தாயான கைகேயினது தொழிலில் குற்றமுளதாகுமோ' என்றும் 'மூத்தவரிருக்கப் பின்னோர் அரசை மேற்கொள்வது திருமாற்றொடங்கி இன்றுவரையிலுமுள்ள காவலரில் ஆராய்ந்துபார்த்தாலெங்குங் காணக்கிடையா'தென்றும்பலபடியாகச்சொன்னதின்பேரில் சபையோர் 'பெருமைமிக்க பேரரசனான தசரதனும் உயிரோடிருக்கையில் ஸ்ரீராமனும் இரத்தினம் பதித்துச் செய்யப்பட்ட மகுடம்பூண இசைந்தான். பெருமை பெற்ற பரதராஜனே! நீ பேரரசன் ஸ்வர்க்கஞ் சென்றதனால் நேரிட்ட ராஜ்யஸம்பத்தை வேண்டாமென்று மறுத்துக் கூறுகின்றாய். அரசகுலத்துத் தோன்றிய இளங்குமாரர்களுள் உன்னைப்போன்ற புகழோடு தோன்றியவர் எவருமில்லையென்றும், 'நியாயமுறை தவறாமல் ஆஜ்ஞாசக்ரத்தைச் செலுத்தியும் தருமத்தைப் பாதுகாத்தும் பலவகை யாகங்களைச் செய்தும் புகழைப் பெருக்கவேண்டுமென்பது உனக்கு வேண்டுமோ? இந்தப் பதினான்கு உலகமழிந்திட்டாலும் உனது இயற்கை நற்குணத்தினால் தோன்றியுள்ள பெரும் புகழ் வாழ்ந்திடுக' என்றும் வாழ்த்துக் கூறினார்கள். இதனைக் கவிச்சக்ரவர்த்தி கம்பர்—

'ஆன்ற பேரரசனுமிருப்பவையனு
மேன்றனன் மணிமுடியேந்தல்வேந்த நீ
வான்றொடர் திருவினைமறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற்றோன்றி
[னார்.'
—[அ-கா. ஆறுசெல்படலம்-19]

'ஆழியையுருட்டியுமறங்கள் போற்றியும்
வேள்வியையியற்றியும் வளர்க்கவேண்டுமோ
வேழினோடேழெனுமுலகமெஞ்சினும்
வாழிய!நின்புகழென்று வாழ்த்தினார்.'
—[அ-கா. ஆறுசெல்படலம்-20]
என்கிறார்.

குகப்பெருமாள் புகழ்தல்

அழகு மிக்க பொன்னாலாகிய வீரக்கழலையும் ஒப்பில்லாதசேனையையுமுடையவனும், வளம் நிறைந்த காவேரி பாயும் சோழநாட்டையொத்த சழனிகளையுடையதான கோசல தேசத்தை விட்டு நீங்கி ராமபிரானைக் கானகத்தினின்றும் மீட்டுக்கொண்டு வருமாறு பயணப்பட்ட பரதாழ்வான் ஸ்தாவர ஜங்கமமென இருவகைத் தோற்றமாகப் பகுக்கப்படுந் தன்மையையுடைய எல்லாவுயிர்களும் அரசகுமாரனான தான் அரசனாகி ராஜ்யத்தை ஆளவேண்டியகாலத்து அங்ஙனஞ் செய்யாது ஒரு முனி குமாரன்போல் மரவுரி புனைந்து சடை முடித்து ராமனைப்பிரிந்த துயரெல்லாம் தன் முகத்திலே தோன்றும்படியான தனது நிலைமையை நோக்கி பரிதவிக்க கங்கையின் சமீபத்தை அடைந்தமாத்திரத்தில் குஹப்பெருமான் சேனையோடு வருகிற ஸ்ரீ பரதாழ்வானைப் பார்த்து வேறுவிதமாக நினைத்து 'என தருமையானவுயிருக்குத்தலைவனாகிய மைபோலுங் கருநிறத்தையுடைய ஸ்ரீராமன் அரசாட்சி செய்யாமலிருக்கும்படி வஞ்சனையால் ராஜ்யத்தையடைந்த அரசனான பரதனும் அருகில் வந்தனனன்றோ?' என்று அநேகவிதமாகச் சொல்லிக்கொண்டு கங்கையின் தென்கரையை யடைந்தான். அப்பொழுது சுமந்திரன் ஸ்ரீ குஹப்பெருமானை கங்காநதியின் இரண்டு கரைகளையும் தனக்குச் சொந்தமாக வுடையவனென்றும், உன் குலத்தில் திருவவதரித்த ஒப்பற்ற தலைவனான ஸ்ரீராமபிரானுக்குப் பிராண சிநேகிதன்' என்றும், மலைபோன்ற வலிமையையும் இருள் போன்ற கருநிறத்தையுமுடையவனாய் ஸ்ரீராமனிடத்துப் பக்திப்பேரன்பு பூண்டவனான இக்குஹன் உன்னைக் காண்பதற்கே நிற்கின்றனன்' என்றும்தெரிவிக்க. அப்போது பரதன் குஹப்பெருமான் ராமனிடத்துப் பேரன்பு பூண்டுள்ளான் என்பதனையுணர்ந்து ராமதாஸனான அவன் தன்னைக் காணுமாறு வருவதினினும் மஹாபாகவதனான அவனைத் தானே அவனிடம் சென்று காண்பது நல்லதென்று கருதி அவனைக் காணுமாறு புறப்பட்டு கங்கையின் வடகரையை யடைந்தான். அப்போது குஹப்பெருமான் மரவுரி தரித்தலும் புழுதி படிந்திருத்தலும் முகம் ஒளிகுறைந்து வாட்டமுற்றிருத்தலும், அசேதனமான கல்லும் கரையும்படி பெருந்துயரத்துடனிருத்தலு

மாகிய அப் பரதனது செயல்களைப் பார்த்து அவனோடு போர்செய்யவேணுமென்று உறுதியாகத் தன்கையில்பிடித்த வில்லும் சோர்ந்து விழக்கலங்கிச்செயலற்று நின்றிட்டான். பிறகு அத்தன்மை நீங்கியவனாய் 'ஆடவரிற்சிறந்த இப்பரதனும் எனது தலைவனாகிய இராமபிரானைபொத்திருக்கிறான். அருகில் நின்றவனை சத்ருக்கினனும் இராமன் தம்பியான இலக்குமணனைபொத்திருக்கின்றான். இந்த பரதன் தவத்துக்குரிய வேடத்தை மேற்கொண்டுள்ளான். இவன் படுகிற வருத்தத்திற்கோ ஒரு முடிவு இல்லை. ராமன் சென்ற தென்திசையை நோக்கி வணங்குகின்றான். நான் அறிவின்மையாலே ராமபிரானது பரம பக்தனான பரதனை அப்பிரானுக்குப் பகைவனென்று தவறாகயெண்ணிப் பிழைசெய்தேன். எம்பெருமான் பின்பிறந்தார் பிழைப்புஇழைப்பரோ?' என்று நினைத்து தான்மாத்திரம் ஓடத்திலேறி கங்கையின் வடகரையை யடைந்து சிரஸின்மேல் கையைவைத்துக் கொண்டு ராமனைத் தொழுதவண்ணமிருக்கிற பரதாழ்வானை நமஸ்கரித்தான்.

திருமாலின் நாபிகமலத்திலே வீற்றிருக்கும் பிரமனுந்தன்னை வணங்கத்தக்கவனும்பெருமை குணத்தையுடையவர்களது மனத்திலும் தலையின்மேலும் சிறப்பாகத் தங்குகிற பெரும் புகழையுடையவனுமான பரதனும், தன்னுடைய பாதங்களிலே விழ்ந்தவனான குகனை, மைந்தனைக்காணும்போது தந்தைக்குள்ள களிப்பினும் தன்களிப்புமிக அணைத்துக்கொண்டான்.

அப்போது குகப்பெருமான் ஸ்ரீ பரதாழ்வானைநோக்கி'நீர்இந்தகானகத்தில்வருவதற்கு என்ன காரணம்?' என்று வினவ, அதற்கு அப்பரதன் 'எனது தந்தை முறைக்கேடாக இளையவனான எனக்கு ராஜ்யத்தைக் கொடுத்து எனது தமையனாரைக்கானகத்திற்கனுப்பினார். இந்த முறைகேட்டைப் போக்கும்படி எனது தமையனாரைக் கானகத்தினின்று மீட்டு வருமாறு செல்லுகின்றேன்' என்று தான் வந்த காரணத்தை குகப்பெருமானிடம் தெரிவிக்க, பரதனது செயல் இன்னதென்பதை அவன் வார்த்தையினால் அறிந்துகொண்ட பொய்ம்மையில்லாத கருத்துடையவனாகிய குகப்பெருமான் அவனது பெருந்தன்மையைக் கண்டு மனத்திலடங்காத பெருமகிழ்ச்சியடைந்து அவனது பெருந்தன்மைக்காக சாஷ்டாங்கமாக அவனை நமஸ்கரித்துக் கொண்டாடுகிறார்.

இங்கு புகழையே அப்பரதனுக்கு ஸ்வரூப நிரூபகதருமமாக வைத்துப்பேசுகிறான். 'கீர்த்தியையுடையவனே! ராமபிரானை நாட்டாரின் அனுமதியின்மீது தனது தந்தை ராஜ்யத்தைக்கொடுக்க அதனை யேற்றுக்கொண்டான். உனது தாயாகிய கைகேயியின் வார்த்தையைக் கேட்டு உனது தந்தையாகிய தசரதன் வரமாக உனக்குக்கொடுத்த ராஜ்யத்தை 'மூத்தவனிருக்கும்பொழுது இளையவன் அரசாள்வது மிகவுங் கொடுந்தொழில்' என்று நினைத்து அத்தொழிலை விடுவதுபோல விட்டொழிந்து ராஜ்யத்தைக் கைவிட்டது உலகத்தார் தன்னை மெச்சவேண்டுமென்று கொண்ட வேடமல்லாமல் உண்மையென்பது விளங்கக் கவலையை முகத்தில் நிறைத்து இங்கு வந்தாயென்றபொழுது உன் தன்மையை அறிஞர் ஆராய்ந்துபார்த்தால் ஆயிரம் ராமர் உளரானாலும் உன் ஒருத்தனுக்கொப்பாவரோ? என்று ஆச்சர்யப்படுகிறார். இதனைக் கல்வியிற்சிறந்த கம்பர்—

'தாயுரைகொண்டு தாதையுதவிய தரணி
தன்னைத்
தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்தின்
தேக்கிப்
போயினையென்றபோழ்து புகழினோய்
தன்மைகண்டா
லாயிரமிராமர் நின்கேழாவரோ தெரியி
னம்மா'

–[அ. கா. குகப்படலம் 35]
என்கிறார்.

மேலும் குகப்பெருமான் பரதனைப்பார்த்து உத்தமமான குணங்களையும் வலிமையையுடைய தோள்களையுமுடையவனே அறிவில்லாத வேடனாகிய யான் உன்னைப் புகழ்வதெவ்வாறு? சூரியன் என்று சிறப்பித்துக் கூறப்படுபவன் தனது கிரணஸமூகத்தால் சந்திரன் முதலியோரது ஒளிகளை அடக்கும்விதம் போல நிலைப்பற்ற புகழ்ப்பெருமையைப் பெற்ற உங்கள் குலத்தாரது கீர்த்திகளையெல்லாம் உனது கீர்த்திக்குள் அடங்குமாறு செய்துகொண்டாய் என்றும் புகழ்ந்தான். இதனையும் கம்பநாட்டாழ்வார்—

'என்புகழ்கின்றதேழையெயினனேனிரவி
யென்பான்
தன்புகழ்க்கற்றை மற்றையொளிகளைத்
தவிர்க்குமாபோல்

மண்புகழ்பெருமைநுங்கண்மரபினோர் புகழ்
கள்ளெல்லா
மூன்புகழாக்கிக்கொண்டா பயர்குணத்துர
வுத்தோளாய்'
—[அ-கா. குகப்படலம் 36.]
என்கிருர்.

சக்ரவர்த்தித்திருமகன் புகழ்தல்

விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமா வேண்டாமா? என்கிற ராமகோஷ்டியில் சுக்ரீவன் ராமனைப்பார்த்து 'இப்படிப்பட்ட கஷ்டத்தையடைந்த ப்ராதாவை விடுகிறவனுக்கு ஆபத்காலத்தில் விடக்கூடாதவன் எவனுளன்?' என்று விஜ்ஞாபிக்க அதற்கு ஸ்ரீராமசந்திரன் சுக்ரீவனைப் பார்த்து 'இவனைப் பரிக்ரஹித்தால் என்ன கெடுதல் நமக்கு வந்துவிடுமோவென்கிற சங்கை வேண்டாம். எல்லோரும் அவரவர்கள் காரியங்களில் பண்டிதர்களானபடியால் நாமோ இராக்ஷஸராஜ்யத்தைச் சேர்ந்தவர்களில்லை. தமையனுன ராவணனுக்கோ கஷ்டம் வந்துவிட்டது. இனி நம்முடன் சேர்ந்து அவனைத் தொலைத்துவிட்டால் அந்த லங்காராஜ்யம் தனக்குக் கிடைக்குமென்கிற அபிப்ராயத்தால் வந்திருக்கிருன். இவனுடைய சேர்க்கையினுல் நமக்கு ஒருவித கெடுதலும்வாராது' என்றுநியமித்தான். பிறகு தமையன் ராஜ்யத்தை ஆளும்போது தம்பி எங்கேயாவது அதை நாம் ஆளவேண்டுமென்று நினைப்பனே? என்று சுக்ரீவன் சங்கிக்காமலிருக்கும்பொருட்டும் தாய்தந்தை யிவர்கள் மூலமாகவந்த ராஜ்யத்தைத் தமையனுரிருக்கும்பொழுது நாம் அரசுபுரிவது மிகவுங்கடுந்தொழிலென்று நினைத்து நானே ராஜ்யத்தையாளவேண்டுமென்று என்னை யழைத்துக்கொண்டுபோக மாவுரி முதலானதை தரித்துக்கொண்டு தபஸ்விகள்போல காட்டிற்குவந்த பரதனுக்குச் சமானமாக எல்லா ப்ராதாக்களும் ஆகிவிடுவார்களோ வென்று பரதாழ்வானை மிகவும் புகழ்ந்தான். இதனை ஆதிகவி வால்மீகி பகவான்—

'𑌨 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌸𑍍𑌤𑌾𑌤 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌰-
𑌤𑍋𑌪𑌮𑌾𑌃' [யு. கா. 18-15] என்றருளிச் செய்தார்.

நம் தூப்புல் வள்ளலும்—

'𑌭𑌰𑌤𑌾𑌯 𑌪𑌰𑌂 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑌸𑍍𑌮𑍈
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑌾𑌯 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌜𑌾𑌮𑍍 । 𑌯𑌦𑍁-
𑌪𑌜𑍍𑌞𑌮𑌶𑍇𑌷𑌤𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋
𑌰𑌾𑌘𑌵𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌃 ॥'

—[பாதுகாஸஹஸ்ரம் ச்லோகம்-2]
என்றருளிச்செய்தார்.

ஆகையால் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்கிற வாக்கியத்தின்படி புகழோடு தோன்றிய ஸ்ரீபரதாழ்வானுக்கு ஒத்தாரும் மிக்காரும் இப் பிரபஞ்சத்தில் தோன்றியவர்களுமில்லை தோன்றப்போகிறவர்களுமில்லையென்பது திண்ணம்.

ஸ்ரீ:

ஜடபரத உபாக்யானம்

ஸ்வாயம்புவ மநுவின் குமாரர்கள் ப்ரியவ்ரதன் உத்தாநபாதன் என்றும், அவ்வுத்தாநபாதனுக்கு த்ருவன் என்னும் குமாரன் பிறந்து உக்ரமான தபஸ்ஸின் ப்ரபாவத்தால் லோகோத்தரமான கதியை அடைந்தானென்றும் இத:பூர்வம் வெளிவந்திருக்கிற ஸஞ்சிகைகளில் பரக்கக் கூறினோம். இனி ப்ரியவ்ரதனுடைய வரலாற்றையும் அவன் வம்சத்திற் பிறந்த ஜடபரதனுடைய உபாக்யாநத்தையும் சிறிது கூறுவோம்.

ப்ரியவ்ரதனென்பான் கர்த்தமப்ரஜாபதியின் புத்ரியை விவாஹம் பண்ணிக்கொண்டு இரண்டு பெண்களையும் பத்துப்பிள்ளைகளையும் பெற்றான். அப்புத்ரர் பதின்மரும் மஹாஜ்ஞாநவான்கள்; ஸத்யவான்கள்; வணக்கமொடுக்கம் நிறைந்தவர்கள். இம்மஹாகுணங்களுடன் தந்தைக்கு இனியராய் தேஜோவான்களாய் அவர்கள் யாவரும் விளங்கிவந்தார்கள். இவர்களுள் மேதா, அக்நிபாஹு, புத்ரன், என்னும் மூவரும் பூர்வஜந்ம ஸம்ஸ்காரத்தால் யோகாப்யாஸத்தில் வல்லவராய் ராஜ்யாதிஸம்பத்துக்களிலும் போகங்களிலும் பற்றற்றவராய் ஐஹிகபலன்களில் விருப்பற்றவராய், விதிப்படி தங்கள் கர்மாக்களைச் செய்துவந்தார்கள். இவர்கள் இவ்வாறு மஹாயோகிகளாய் உலகப்பற்றின்றியிருப்பதைப் பார்த்த ப்ரியவ்ரதன், இவர்களை விட்டு, ஆக்நீத்ரன், மேதாதிதி, வபுஷ்மான், ஜ்யோதிஷ்மான், த்யுதிமான், பவ்யன், ஸவநன் என்னும் தமது புதல்வர் எழுவர்க்கும், ஜம்பூ, ப்லக்ஷம், ஶால்மலம், குஶம், க்ரௌஞ்சம், ஶாகம், புஷ்கரம் என்னும் தனது எழு த்வீபங்களையும் பிரித்துக்கொடுத்து அவைகளை ஆளும்படி அவர்களை அரசனாக்கினான்.

இங்ஙனமிருக்க, ஜம்பூத்வீபத்தின் அதிபதியான ஆக்நீத்ரன் என்பவனுக்கு நாபி முதலிய ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள். அப்போது ஆக்நீத்ரன் தன் ராஜ்யமான ஜம்பூத்வீபத்தை ஒன்பது பங்காக்கி 'நாபி' முதலிய ஒன்பதின்மாக்கும் பகிர்ந்துகொடுத்து அவர்களுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்து, தான் தாபஸ வேடம்பூண்டு மஹாபரிசுத்தம் வாய்ந்ததான 'சாளக்ராமம்' என்னும் திவ்ய க்ஷேத்ராத்துக்குப் போய்ச்சேர்ந்தான். இந்த ஒன்பதுபாகத்தில் 'நாபி' என்பவன் ஆண்டுவந்தது, ஜம்பூத்வீபத்தின் தென்புறத்தில் விளங்கும் பாரதவர்ஷமாகும். (வர்ஷம் என்பதற்கு வாஸம்செய்யுமிடம்என்பது பொருள்) சின்னாள் சென்றதும் அந்தப்பாரதவர்ஷத்தை ஆண்டுவந்த 'நாபி' என்பவனுக்கு 'மேருதேவி' என்பவளிடமாக 'ரிஷபர்' என்பவர் உதித்தார். காலக்ரமத்தில் அந்த ரிஷபருக்கு நூறு புத்ரர்கள் உண்டானார்கள். அவர்களுள் மூத்தவர் பரதர். அந்த ரிஷபமஹாராஜா தர்மமாக ராஜ்யபரிபாலநம் செய்து, அநேக யாகங்கள் நடத்தி, தமது மூத்தகுமாரனான பரதனுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்து, தாம் தவம் செய்யும்பொருட்டுச்சாளக்கிராமக்ஷேத்ரத்தை அடைந்தார். பரதரால் பரிபாலிக்கப்பட்டுவந்தமையால், நமது தேசம் 'பாரதவர்ஷம்' என்று வழங்கப்பட்டுவருகிறது. அந்தப் பரதராஜனுக்குத் தர்மசீலனான 'ஸுமதி' என்னும் புத்ரன் பிறந்தான். அந்தப் பரதரும் நீதியாய் ராஜ்யபரிபாலநத்தையும் யாகங்களையும் செய்து, தமது புத்ரனிடத்தில் அந்த ராஜ்யத்தை ஒப்படைத்து புலகருடைய ஆச்ரமான சாளக்ராமக்ஷேத்ரம் போய்ச்சேர்ந்தார்.

அவர் அந்த க்ஷேத்ரத்தில் இருந்துகொண்டு யோகநிஷ்டையுடன் ஸ்ரீவாஸுதேவனிடத்தில் நிலைத்த அன்புடையவராய், அவரையே த்யாநம் செய்துகொண்டு, அஹிம்ஸாதி ஹேய குணங்களில்லாமல் வர்த்தித்துவந்தார். ஜாகராதி ஸர்வாவஸ்தைகளிலும் அவர் கேசவாதி பகவந்நாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தாரேயன்றி வேறொன்றும் உச்சரிப்பதில்லை. அந்நாமங்களின் பொருளைச் சிந்திப்பதுதவிர வேறு பொருள்களை அவர் சிந்தித்தவரல்லர். வைதிககர்மாக்களை நடத்தும்பொருட்டுத் தர்ப்பம், ஸமித், புஷ்பம் முதலியவற்றைக்கொண்டுவருகிற செய்கையைத் தவிர்த்து வேறு செய்கைகளை அவர் செய்ததில்லை. இப்படி அவர் உள்ளம் உரைசெயல்களால் தோஷமற்றவராய், உலகப்பற்றைத்துறந்து, தபஸ்பண்

ணிக்கொண்டுவருங்கால், ஒருநாள்ஸ்நாநார்த்தம் ஒரு மஹாநதியினிடம் சென்று நீராடி அநுஷ்டாநங்களை முடித்து நின்றுகொண்டிருந்தார். அங்கே கருவுயிர்க்கும் தருணமுடையதான மான் ஒன்று தன்னந்தனியாய்த் தண்ணீர் குடிக்க அந்நதியினிடம் வந்தது. அது நீர் குடித்து நிற்கையில், ஜடிதியில் ஒருசிங்கத்தின் அதிபயங்கரமானபேரிடிபோன்ற கர்ஜனையைக் கேட்டது. கேட்டவுடனே அம் மான் மிகுந்த அச்சங்கொண்டு திகைத்துப் பரபரப்புடனே மிக உயரமான அந்நதியின் கரையின்மேலே ஏறிற்று. அப்போது அதன் கர்ப்பமானது கீழே ஆற்று ஜலத்தில் நழுவி விழுந்து மிதந்து வந்தது. அதைக்கண்ட பரதயோகி மனங் கரைந்து அம் மான்குட்டியைத் தம் கையில் எடுத்துக்கொண்டார். தாய்மான், தான் கருவுயிர்த்த அதிர்ச்சியாலும் கரையின்மேல் கஷ்டப்பட்டு ஏறின களைப்பாலும் கீழேவிழுந் திறந்துபட்டது. அந்த மான் இறந்துபடவே அந்த யோகி இரக்கங்கொண்டு திக்கற்றிருக்கும் அக்குட்டியை யெடுத்துக்கொண்டு தமது ஆச்சிரமம் சேர்ந்தார். பின் அவர் அம் மான் குட்டியை வெகு அன்புடனே வளர்த்து வரலானார். அது வளர்பிறைச் சந்திரன்போல் நாளுக்குநாள் வளர்ந்து, அவ்வாச்சிரமத்தின் அருகில் வளர்ந்து கிடக்கும் புற்களை மேய்ந்தும், வனவிலங்குகளைக்கண்டவிடத்து அச்சத்தால் ஆச்சிரமத்தில் புகுந்தும், காலை வேளையில் பற்பலவிடங்களுக்குப் போய்ப் புல் மேய்ந்து விளையாடியும், மாலையில் குடிலுக் கருகே வந்துகொண்டும், இவ்வாறெல்லாம் செய்துகொண்டிருந்தது. இதனுடைய நடையழகிலும் உடலெழிலிலும் சுடாநவனப்பிலும், மனம் ஊன்றிப்போய் முனிவர் அக்குட்டியினிடத்தே நாட்டங்கொண்டுவிட்டார். ராஜ்யாதிபந்தங்களைவிட்டு யோகநிஷ்டையிலிருந்த முனிவர்க்கு அம் மான்குட்டியினிடம் 'தனது' எனும் அபிமானம் குடிகொண்டுவிட்டது. அவ்வபிமானம் காரணமாக அக்குட்டி சிறிது பொழுது காணப்படாமலிருந்தால், 'ஐயோ! நமது மான்குட்டி இதுகாறும் வரவில்லையே! அது எங்குச் சென்றதோ? அதைச் செந்நாய் தின்றதோ, புலி அறைந்ததோ, சிங்கந்தான் கொன்றதோ? இன்னும் அதுவரவில்லையே! அந்த மான்குட்டி துள்ளிவிளையாடின இவ்விடத்தில் அதன் சின்னஞ்சிறிய அடிச்சுவடுகள் என் மனத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சியை விளைக்கின்றன! அத்தகைய மான்குட்டி எங் குற்றதோ? மேலும் அது என் அருகிலே வந்து, தன் சிறு கொம்புகளால் என் உடம்பைச் சொரிந்துகொடுக்கும்போது நான் அடையும் ஆநந்தம் அளவற்றதாகுமே! அக் குட்டி இனி இங்கு வந்துசேருமோ சேராதோ தெரியவில்லையே! என்செய்வேன்! அந்த என் குட்டி தனது சிறு பற்களாலே புல்லையும் தர்ப்பையும் நாணலையும் கடித்ததால், நுனி இழந்திருக்கும் இவைகளைப் பார்த்தால், இவை ஸாமவேத ப்ரஹ்மசாரிகள்போல் மொட்டையாய் விளங்குகின்றனவே! அது என்னருகில் வந்துமேய்ந்து கொண்டிருக்கக் காண்பேனு?' என்றிவ்வாறெல்லாம் பதறிப் பேசுவார். அது ஸமீபத்தில் வரும்பொழுது, அது மேயும் அழகு, பார்க்கும்பார்வை, ஓடும் ஓட்டம், உடலின் அமைப்பு, கிளரொளியிளமை இவற்றையெல்லாங் கண்டு மகிழ்வெய்துவார். இப்படி அதன்மேல் அளவற்ற அன்பு பாராட்டி வந்தமையால், அவருக்கு ஸமாதி நிஷ்டை குலைந்து, யோகம் பங்கப்பட்டது. அந்த மான்குட்டியினிடமே அவர் அல்லும் பகலும் அநவரதமும் தமது முழு மனத்தையும் செலுத்திவந்தார்.

இப்படியிருக்கும்போது அந்தப் பரதமஹாராஜர்க்கு மரணகாலம் கிட்டியது. அப்போது அந்த மான் அன்புள்ள புத்ரன் பிதாவை நோக்குவதுபோல் கண்களில் நீர்ததும்ப அவரைப் பார்துக்கொண்டேயிருந்தது. இவரும் அப்படியே ப்ரியபுத்ரனைப் பார்ப்பதுபோல் கண்ணுங்கண்ணீருமாய் அதனைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அந்த நிலையில் அவருக்கு ப்ராணன் போய்விட்டது. அவஸாநகாலத்தில் ஒருவன் எதை நினைத்துக்கொண்டே ப்ராணனை விடுகிறானே, அவன் அடுத்த பிறப்பில் அதுவாகவே பிறக்கிறான் என்பது ஶாஸ்த்ரம். அதுபோல் பரதர் மானின்மேல் பற்றுவைத்துக்கொண்டே மரணமடைந்ததனால், அவர் மறுஜன்மத்தில் 'ஜம்பூமார்க்கம்' என்னும் கங்கைக்கரைக் காட்டில் மானகவே

பிறந்தார்: என்றாலும் யோகப்ப்ரபாவத்தினால் பூர்வஜ்ஞாநமுடையவராயிருந்தார். தமது முன் ஜந்மத்தை நினைந்து நினைந்து அதனால் ‘ஸுஹோ ஹ ஹதீ யாதா நிஷ்டா ஜநஸங்கதி:’ ‘ஐயோ! பலபகல்களையும் பழுதே கழித்தேனே! எனக்கு எத்தகைய இழிபிறப்பு நேர்ந்தது’ என்று கழிவிரக்கம் கொண்டு பிறப்பில் வெறுப்படைந்து, தாயைவிட்டுப் பிரிந்து, முன்னிருந்த சாளக்ராம க்ஷேத்ரத்துக்கே வந்து, மானாய்ப் பிறப்பதற்கு ஹேதுவாயிருந்த கர்மத்தைக் கழித்து அங்குத் தானே மரணமடைந்து, நல்லொழுக்கமும் யோகநிஷ்டையும் மிகுந்த உத்தமமான ஒரு ப்ராஹ்மண குலத்திலே பூர்வஜந்மஸ்மரணத்தோடு வந்துபிறந்தார். பூர்வஜ்ஞாநம் உண்டாயிருந்தபடியால் அவர் ஸகல ஶாஸ்த்ரஸம்பந்நராய், ஸர்வபூத ஸுஹ்ருத்தமராய், ஆத்மாதிதத்வங்களை நன்கு அறிந்தவராய் விளங்கிவந்தார். வேத ஶாஸ்த்ரங்களால் அடையவேண்டிய ஜ்ஞாநத்தை இயல்பிலே அவர் பெற்றிருந்ததால், அவர் குருமுகமாக வேதஶாஸ்த்ரங்களைத் தனியாக ஓதினாரில்லை. ஆத்மஜ்ஞாநம் கைவசப்பட்டு அநுபவநிஷ்டையில் இருந்து வந்தமையால் அவர் யாதொரு கர்மத்தையும் செய்தாரில்லை. ஆனால் யாவரும் அவமதிக்கும்படி அழுக்கடைந்த கந்தை வஸ்த்ரமும் ஊத்தைப் பல்லுமாகக் காணப்பட்டார். ‘உலகத்தார் செய்யும் வெகுமதிப்பு யோகஸம்பத்தைக் குறைத்துக் கேடுண்டாக்கும்; அவர்கள் செய்யும் அவமதிப்போ கர்வாஹங்காரங்களைப் போக்கி யோகஸம்பத்தை வ்ருத்திசெய்து அதன் ஸித்தியைத்தரும். ஆதலால் யோகியானவன் யாவரும் தன்னிடம் சேராமல் தன்னை அவமானம் பண்ணும்படி ‘...யானுமோர் பேயனே’ என்னுமாறு ஜடனைப்போல் காட்டிப் பெரியோர்கள் ஒழுக்கத்துக்குப் பழுதுவாராமற் காத்து நடக்கவேண்டும்’ என்ற ஶாஸ்த்ரத்துக்கிணங்க, தாம் மஹாவித்வானாயிருந்தும், இலக்கணப்பொருத்தமும் குணமற்றதுமான பேச்சுக்களைப் பேசிக்கொண்டும் அழுக்கு வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டும், பைத்யம் பிடித்தவனைப்போல் திரிந்துவந்தார். இப்படியிருந்ததனால்தான் அவருக்கு ஜடபரதர் என்ற பெயருண்டாயிற்று.

அவர், புழுத்துக்கெட்டுப்போன உளுந்து யவதாந்யாதிகளாற் செய்த அப்பங்களையும், கீரையோ கிழங்கோ தினையோ, எது எப்போது எவ்வளவு கிடைக்குமோ, அவைகளை உயர்ந்த உணவாக நினைத்து ப்ராணதாரணம் செய்துவந்தார். இந்த நிலைமையில் இவருடைய தகப்பனார் லோகாந்தரமடைய, இவருடைய அண்ணன் தம்பிகளும் மற்றைச் சுற்றத்தார்களும் இவருக்கு அற்ப ஆஹாரத்தைக் கொடுத்து இவரைக் கழனி வேலை செய்வித்துவந்தார்கள். அந்த வேலையை அவர் திருத்தமாகச் செய்யாமல் மூடனைப்போல் தாறுமாறுமாகச் செய்துவந்தார். இவர் அநுதினமும் மித போஜநம் செய்துவந்தாலும் அதனால் உடம்பு இளைக்காமல் ஊன் மல்கு மோடுபருத்துக் காணப்பட்டார். இவரது கண்கள் இரண்டும் வித்யாஸமில்லாமல் (இளைத்துக் குழிந்துகாட்டாமல்) ஸமாநமாய்க் காணப்பட்டன. இவ்விதம் இவரது உடல் பருத்துப் பலத்துக் காணப்பட்டதால், இவர் உறவினர் மாத்ரமல்லாமல் ஊரார் யாவருமே இவருக்குச் சிறிது ஆஹாரம் கொடுத்துக் கூலியில்லாமல் பல வேலைகளை வாங்கிவந்தார்கள். அவ் வேலைகளை அவர் தம்மிச்சைப்படி செய்துவந்தாலும், முற்கூறியபடி அழுக்குத் தீர்ப்பது முதலான செய்கைகள் ஒன்றுமில்லாமல் ஸ்நாநம் செய்தலும், ப்ராஹ்மணர்க்குரிய சிகா யஜ்ஞோபவீதம் தரித்திருத்தலும், ஸந்த்யாவந்தநம் செய்தலும் ஆகிய ப்ராஹ்மண க்ருத்யங்களை மாத்ரம் தவறாமல் அநுஷ்டித்துவந்தார். இஃது இவ்வாறிருக்க:

மஹேந்த்ரகிரி ப்ரதேஶத்தில் ‘சவ்வீரம்’ என்ற ஒரு நாடுண்டு. அந்த நாட்டரசனை ரஹூகணன் என்பான் இக்ஷுமதி நதி தீரத்தில் எழுந்தருளியிருக்கும் கபிலமாமுனிவரிடத்தில், ‘துக்கமயமான இந்த ஸம்ஸாரத்தில் எது ச்ரேயஸ்ஸு?’ என்று விசாரித்தறியும் பொருட்டு அம் முனிவரிடம் செல்ல விரும்பித் தன் ஸேவகனை விடுத்துத் தன் பல்லக்கைத் தூக்குவதற்கு ஏற்ற ஆள் பார்த்து வரும்படி ஏவியனுப்பினான். அந்த ஸேவகன், நீறுபூத்த நெருப்பைப்போல் ப்ரபாவம் வெளிப்படாமல் ஜடனைப்போல் திரிந்துகொண்டிருந்த பரதரைப் பார்த்து ‘இவன்

அரசனது பல்லக்கைச் சுமப்பதற்கேற்ற கொழுத்த ஆள்' என்பதாக நிச்சயித்து, பாரதரை அழைத்துக்கொண்டுபோய்ப் பல்லக்கு சுமக்கும் வேலையில் அமர்த்தினன். பாரதர் ஸகல சாஸ்த்ரார்த்தஸம்பந்நராய்ப் பரிபூர்ண ஜ்ஞாநமுடையவரா யிருக்கச் செய்தேயும், தமது பூர்வஜந்மத்தை நினைத்துப் பாபங்கள் க்ஷயிக்கும்பொருட்டு மற்றைப் போயிகளுடன் தாமும் பல்லக்கைச் சுமந்துகொண்டு சென்றார். செல்கையில் இவர் நுகத்தடி தூரம் பூச்சி எறும்பு முதலிய ஜந்துக்கள் ஒன்றும் இல்லாதபடி, தரையைப்பார்த்துக்கொண்டே மெதுவாய் நடப்பார். மற்றவர் துரிதமாய் நடப்பார்கள். இப்படிப் பல்லக்கின் நடை தாறுமாறாய் விஷமமாயிருந்தபடியால் அவ்வரசன், 'ஏன் உங்கள் நடை இப்படியிருக்கிறது? சரியாய் நடவுங்கள்' என்று பல்லக்கில் இருந்தபடியே போயிகளை எச்சரித்தான். எச்சரித்து என் பயன்? பல்லக்கின் கதி பழையபடியே விஷமமாய்த்தான் இருந்துவந்தது. இதன் காரணத்தை அறிய விரும்பி அரசன் மீண்டுமொருமுறை கேட்க, அப் போயிகள் 'அரசே! எங்கள்மீது ஒரு குற்றமுமில்லை; இவன் ஒருவனே இப்படி நடந்து தங்கட்கு வருத்தத்தை விளைக்கிறான்' என்றார்கள். அதுகேட்ட வரசன் ப்ராஹ்மணோத்தமரை நோக்கி, 'அடா மூடா! என் பல்லக்கைச் சிறிதுதூரமே சுமந்து வந்தனை. இதற்குள் விடாய்த்து இளைத்தனையோ? நீ வருத்தம் ஸஹிக்கமாட்டாதவனா? நீ பருத்துத்தானே காணப்படுகின்றாய்!' என்றான்.

ப்ராஹ்மணன்:—ஐயா! நான் பருத்தவனுமல்லேன். உன் பல்லக்கை நான் சுமக்கவுமில்லை; அதனால் நான் வருந்தவுமில்லை; அதுகாரணமாக எனக்கு விடாயுமில்லை.

அரசன்:-(அவர் கருத்தறியாமல்) ப்ரத்யக்ஷத்தில் நீ பருத்துக்காணப்படுகின்றாய். இப்போதும் உன் தோளில் என் பல்லக்கு இருந்துகொண்டிருக்கிறது. பளுவான சுமைகளைச் சுமப்பதினால் ஆயாஸமும் விடாயும் உண்டாவது இயற்கை. அப்படியிருக்க, நீ ஏன் வீணே பொய் சொல்லுகிறாய்?

ப்ராஹ்மணன் 'அரசே! நீ என்னவோ ப்ரத்யக்ஷமாகக் கண்டேன்' என்று சொன்னையே, நீ கண்டவஸ்துவை முதலில் சொல்: அது பளுவுள்ளதென்றும் பளுவில்லாததென்றும் பிறகு சொல்லலாம். இரண்டாவதாக: 'உன்னாலே சிவிகை சுமக்கப்படுகிற'தென்றும், 'இப்போதும் உன் தோளில் அது இருக்கிற'தென்றும் சொன்னாய், இது சுத்தப்பொய். இதைச் சிறிது விளக்குகிறேன், கேள். நிலத்திலே என் இரு பாதங்கள் இருக்கின்றன; அவற்றின் மேலே கணைக்கால்கள்; அவைகளின் மேலே இரண்டு தொடைகள்; அவற்றின் மேலே வயிறு; மார்பு, கைகள், தோள்கள் இவையாவும் வயிற்றின்மேல் இருக்கின்றன. அந்தத் தோள்களைப்பற்றியிருக்கிறது உன் சிவிகை; இப்படியிருக்க, எனக்குப் பாரம் எதனால் உண்டாயிற்று? யோசித்துச் சொல்.

அரசன்—விடையிறுக்க வழியின்றி நிற்க:

ப்ராஹ்மணன்.—மேலும் கேள். இந்தச் சிவிகையில் நீ என்று உன்னால் நினைக்கப்பட்ட தேஹம் இருக்கிறது. அந்தத் தேஹத்தில் நீ இருக்கிறாய். அப்படியே (தன்னுடம்பைச் சுட்டிக்காட்டி) இந்தத் தேஹத்தில் நான் இருக்கிறேன். நானும் நீயும் மற்றவர்களும் தேஹங்களாய் மாறி நிற்கிற ப்ருதிவீ முதலான பஞ்சபூதங்களாலே சுமக்கப்படுகிறோம். இந்தப் பூதவர்க்கங்கள் குணங்களின் வசப்பட்டு இயங்குகின்றன. குணங்கள் கர்மாதீநமானவை. அந்தக் கர்மங்கள் அவித்யையினால் ஸம்பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அவித்யையென்பது ஸகல ப்ராணிகளிடத்தும் இருக்கிறது. ஆத்மாவோ அப்படிப்பட்டதல்ல; அது சுத்தமானது; நாசமற்றது; பசிதாஹங்கள் அதற்கு இல்லை; ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறானது. ஸத்வாதி குணரஹிதமானது. வ்ருத்தி க்ஷயங்களென்கிற வளர்தல் தேய்தல் அதற்குக் கிடையாது. வஸ்துஸ்திதி இப்படியிருக்க, 'நீ பருத்திருக்கிறாய்' என்று எந்த யுக்தியினாலே சொன்னாய்? பதில் சொல்.

அரசன்;-(திடுக்கிட்டு) ஆம்; இவரை நான் ஸாமாந்ய மனிதரென்று நினைத்தேன். அரிய பெரிய விஷயங்களெல்லாம் பேசுகின்றாரே இவர் மஹாபெரியவராயிருக்கவேண்டும் க்ருபைபண்ணி மேலே சொல்லுங்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

பக்திகொண்டு பரமனையாண்ட பரகாலநாயகி

ஓர் மடந்தை தன் மனத்தையும் தன்னுடைய அறிவையும் மயக்கித் தன்வசமாக்கிக்கொண்ட ஓர் புருஷனைக் கிட்டியடைந்து சேர்ந்து மகிழ்ந்திருக்கும்போது, அந்த திவ்ய புருஷன் வேறு எந்த நினைவினாலோ இவளைப் பிரிந்துசெல்கிறான். ஆனால் தன்னை யொருதரங்கண்டாலும், கேட்டாலும் அவர்கள் மயங்கி இவளுக்கு அடிமையாகக் கூடிய பெருமை வாய்ந்தவள் இம்மங்கை. எவ்விதத்திலும் இவளது மேன்மை கூறுந்தரமன்று. அது மாத்திரமன்று. யாவரிலும் மேன்மையுடையதென்று யாவராலும் மதிக்கப்படக் கூடியது. ஐப்புலன்களும் த்காத தாழ்ந்த வழிகளில் மறந்தும் செல்லாத நெறியுடையவள் இம்மங்கை. அறிவும் அப்படியே யாவராலும் மகிழ்ந்து கௌரவிக்கப்படக்கூடிய மேன்மையும் அழகும் வாய்ந்தது. இவை யாவற்றினுக்கும் மேல் இவளது மேனி வனப்போ! பார்த்த இடம் வேறிடம் நோக்காத நலம் மிகுந்தது. மங்கையர்களுடைய குணங்கள் அறிவு முதலியவைகளையாராய்ந்து அறியுமுன் முதன்முதலில் அவர்களிடம் இயற்கையாக ஏற்பட்ட கவர்ச்சியாகிய எழில் மிகுந்த தோற்றம் இம்மங்கைக்கு அஸாதாரணமாக அமைந்திருக்கிறது.

இப்படி எல்லாவிதங்களாலும் நிறைந்த ஓர் மங்கை, திடீரெனத் தனது மனத்தையும் அறிவையும் கலங்கவிட்டு மயங்கித் தான் நம்பும் ஆடவன் எத்தன்மையுடையவன் என ஆராயாமல் அவன் வசப்பட்டுத் தன் பெண்மையைத் தோற்றது யாது காரணம்? அப்படித் தோற்றது தகுமோ? ஆனால் ஸர்வ சக்தனுடையஸத்யஸங்கல்பத்தின் திறமையை யாரே யறிவார்? அம் மங்கையர் திலகம் தானே அப் புருஷனை நோக்கிச் சென்று தோற்றாளில்லை. மிகுந்த தன்மதிப்பும் தன்னம்பிக்கையும் நிறைந்தவள். பின் இது எப்படி நேர்ந்தது?

முதன்முதலில் அவ்வாடவன் தானே அம்மங்கையைத் தேடிவந்தான். எங்கோ போகும்போது தற்செயலாக அவளை வழியில் பார்த்தானில்லை. இவளைப் பார்க்கவே வந்தான். அவனும் மிகுந்த அழகன். மன்மதனுக்கும் மன்மதனுவான். இளமையும் அழகும் மணமும் மாறாத வனமாலை துழாய்மாலைகளைத் தரித்தவன். அத்துடன், இவன் எங்கிருப்பினும் எவ்வளவு தூரத்திலிருப்பவரையும் தன்னிடம் ஆகர்ஷிக்கும் திவ்ய வாஸனையையியற்கையாக உடையவன். 'ஸர்வ கந்த: ஸர்வ ரஸ:' என்று போற்றப்பெறுபவன். ஆகையால் அவன் வெகு தூரத்தில் தரும்போதே அவனுடைய வாஸனையால் வன் அறிவு மங்கிய மடந்தை, அவனைக் கண்ணெதிரில் கண்டதும் முதலில் பறிபோகிய மூக்குடன் தனது கண்களையும் அவன் வசமாக்கினாள். எவ்வளவு முயற்சி செய்தும் தனது இந்த்ரியங்களை அந்த ஆடவன் ஆக்கிரமிக்காமல் திருப்பமுடியாதென்பது மங்கைக்கு விளங்கிவிட்டது. அத்துடன் நின்றாலும் சற்றுத் தப்பிக்கலாமோ என்னவோ. ஆனால் விரும்பிவந்தவன் விட்டாலல்லவோ? தனது செம்பவளவாயைத் திறந்து புன்முறுவலும் செய்தான். பெண்கொடி தன்வசமிழந்தாள். என்னசெய்வதென்பதை யறியாதவளாயினாள். அத்துடனும் விடவில்லை. இவளது அறிவையும் அழகையும் தனது அமுதச்சொற்பெருக்கால் புகழவும் தொடங்கினான். மங்கையின் அறிவும் அழகும் புகழுக்கடங்காத பெருமை பெற்றதாகவிருப்பினும், தற்போது அவ்வாடவன் தன் வாயினால் புகழும்போது அவளுக்குத் தன்னிலைமையே தெரியவில்லை. இவ்வழியாக அவளுடைய செவியையும் தன்வசமாக்கிக்கொண்ட இளவல், இவளுடைய மனத்தை முழுதும், அறிவை முழுதும் தன்னதேயாக்கிக் கொண்டான். பிறகு எஞ்சி நின்ற வாய் மாத்திரம் தனித்து நிற்குமோ? மற்றவை போன வழி அதுவும் போயிற்று. மங்கையின் வாய் தன்னையறியாமலேயே அந்த ஸுந்தரனைப் புகழவாரம்பித்தது. அந்த ஆண்டகை அம்மங்கை விரும்பியதையருளி

னன். யாருக்கும் கிட்டாத பாக்கியத்தை மடந்தை யெய்தினள். ஆனால் ....அப்படிப் பட்டவன் நிலைத்திருந்தாலல்லவா? எது கார ணமோ......உடனே அவளைவிட்டகன்றான். இப்படிப்பட்ட த்வந்த்வம் பிரியின் யாதாகும்? இழந்தாள் அந்த நங்கை தன் நினைவும், பெருமையும், அழகும், நிறமும், வலிவும், இடையிலிருந்த மேகலையும், அதற்கும் அடியி லுள்ள ஆடையும் தானே தளர்ந்து நழுவு கின்றன. நினைவிழந்து வசமிழந்து கால் சென்றவழியே மனம்போகவிட்டு நடந்துசெல் கிறாள். தன் மனங்கவர்ந்த கள்வனைத் தேடித் தான் போகிறாள். ஆனால் போகும்வழியில் யாரையும் கேட்கவோ விசாரிக்கவோயில்லை. இப்படி எவ்வளவுநேரம் சென்றாளோ? எவ்வ ளவுதூரம் சென்றாளோ? எவ்வெவ்விடங்களுக் குச் சென்றாளோ? செல்லும் வழியில் வளம் மிகுந்த வயல்களையும், வற்றாத நீர்நிலை களையும் காண்கிறாள். அங்கங்கே மலர்ந்து அழகுடனும் மிகுந்த மணத்துடனும் விளங் கும் தாமரைகளையும் காண்கிறாள். வரிவண்டு கள் பாடிக்கொண்டே தாமரைகளிடம் வந்து வட்டமிட்டுத் தேனைக்குடித்துவிட்டுப் பாடிக் கொண்டு அடுத்த மலரிடம் செல்வதைப் பார்க்கிறாள். அந்த வண்டுகளைப் பார்க்கும் போது ஏனோ அம்மங்கைக்கு தன் மனங் கவர்ந்த கள்வனது நினைவே வருகிறது. தாமரையைப் பார்க்கும்போது தன்னினைவும் கூடவே வருகிறது. மலர்ந்து, வாடாமல், வாஸனை மிகுந்து, தேன் பெருகும் தாமரை களின் தேனைப்பருகி வண்டுகள் மறு பூவிற்குப் போவது, நிறையழியாமலும், இளமையும் அழகும் மாறாமலும் இருந்த தன்னை நிறை யழித்துக் குலைத்துவிட்டுத் தன் வழியே போய்விட்ட அந்த ஸுந்தரனை முற்றும் ஒத் திருக்கின்றன. வண்டுகள் பாடிக்கொண்டே தேனையுறிஞ்சுவது, தன்னைப் புகழ்ந்து கொண்டே தன் அறிவை மயக்கித் தான் எண்ணியபடிசெய்த அவ்வாடவன் தன்மையை மிக ஒத்திருக்கிறது. எனது அவயவங்களை யும் அவன் தாமரையென்றுகூட வர்ணித் தானே. எனது அவயவங்களையும் அழகை யுமா வர்ணித்தான்? அவனைக் கண்டவுடனே அவன் வசமாகிவிட்ட இவை- இவ்வவயவங்கள்- அவனது பொருளல்லவோ? அவனுடையவை களைத்தான் அவன் வர்ணித்தான்' என்றும் எண்ணுகிறாள். இப்படிப்பட்ட காமுகனிட மும் மயங்கினோமே, என்னே நமது மதி யீனம் என்று நொந்துகொள்கிறாள். அதுவும் க்ஷணகாலந்தான். அப்பொழுதே அம்மங்கை தன் அகத்திலிருக்கும் அந்த ஸுந்தரனை நோக்குகிறாள். எதிரிலிருந்து பிரிந்தவன் மனத்திலிருந்து பிரிந்தானில்லை. இதுவும் ஓர் அதிர்ஷ்டமே. ஆனால் அதுவே அவ ளுடைய துரதிர்ஷ்டத்தைக் காட்டுவதாகவும் ஒரு ஸமயம் தோன்றுகிறது. அவனுடைய எழில் மிகுந்த தோற்றமும் தெய்விகமணமும் அமுதமும் சுரக்கும் சொல்வன்மையும், திரு மேனிஸ்பர்சமும் இவை முதலான மற்றைப் பெருமைகளையும் எதிரெதிரே நோக்குகிறாள். ஆஹா! இப்படிப்பட்டவனையா குறைசொல்ல நமது மனம் துணிவுற்றது? இவனிடம் நாம் மயங்கியதில் தவறென்ன? வேதங்களும் புகழ்ந்து மேற்கொள்ளும் ஸர்வகந்தனை நாம் அநுபவித்ததும், ஸாக்ஷாத்மன்மதமன்மதனை நமது கண்களால் கண்டானந்தித்ததும் கலைச் செல்வியாகிய ஸரஸ்வதிக்கும் ஆசார்யனாகிய மஹாபுருஷனுடைய இன்பத்தேனூறும்சொற் பெருக்கை நமது செவிகளால் பருகியதுவும், இன்னறிவுதந்தவனை நினைந்ததுவும், மாய வனைப் புகழ்ந்து வாய்படைத்த பயனெய்தி யதும், எவனுடைய திருமேனிஸ்பர்சத்தினால் பெரியபிராட்டியாரும் புளகிதமடைகிறாளோ அவனுடைய அப்ராக்ருத திருமேனியை ஸ்பர் சித்ததும், ஸர்வசேஷியாகிய பரமனுக்குத் தான் சேஷபூதனென்பதை உணர்ந்து அவ னுடைய வசப்படுதலும், அடிமைப்படுவதும் எனது குற்றமா? அல்லது அது யாருடைய குற்றமென்று சொல்லத்தான் முடியுமோ? அன்றியும், அப்படிப்பட்ட நிலைமையைத் தாம் அவனிடம் அடைவதும் பெருமை யன்றோ? இப்பெருமை எளிதில் கிடைப்ப தொன்றோ? அவன் மஹானல்லவா? ஆனால் ...அப்படியானால் அவன் நம்மைவிட்டகன் றது ஏன்? அவனுடன் கூடியிருக்கும்போதே, பிறகு பிரிவு ஏற்படாமல் இருக்கவேண்டுமே. ஏற்பட்டால் என் செய்வது என்று நினைக்கும் போதே உடல்மெலிந்து உடையும் மேகலையும்

தளர்வுற்ற என்னை என் பிரிந்தான்?' இவ்வண்ணம் நினைக்கும்போது தனது பேடையன்னத்தை விருப்பத்தோடு சென்றடையும் ஓர் அன்னப்பறவையை அருகில் உள்ள நீர்நிலையில் கண்டாள். கண்டதும் தன் மனத்தால் நோக்கிக்கண்டாள். அந்த திவ்யஸ்வரூபன் தன்னையெப்போதும் பிரியாத—பிரியமாட்டாத-பெரியபிராட்டியாரைப் பிரிந்து தரிக்கமாட்டாதேதான் போயிருக்க வேண்டும். அவன் நம்மைப் பிரியும்போது அவனுடைய திருவரையில் சாற்றிய திவ்யாபரணங்களும், பீதகவாடையும்கூட மெலிந்தனவே. அதனால் நம்மைப்பிரிதலினால் அவனும் மெலிவுற்றமை தோன்றுகிறதல்லவோ? ஆனால் அம்மெலிவு நம்மைப் பிரிவதினால் ஏற்பட்டதா அல்லது அங்ஙனமே அவர் பிரிவினால் வருந்தி மெலியும் பெரியபிராட்டியாரை நினைத்துக்கொண்டதினால்ஏற்பட்டதா? பெரியபிராட்டியார் மெலிவுற்றால் அவள் அவதரித்த கடலுங்கூட மெலிவுற்று அலற்றுமன்றோ? எப்படியாகினும், அவன் நம்மைப்பிரிந்தாலும் பிரிந்ததுவும் ஓர் நாயகியின்பொருட்டேயென்று தெளிந்து 'புனிதன்' அவன் என்கிறாள். அவ்வளவிலேயே அவ்வூர் அழுந்தூர் என்ற க்ஷேத்திரம் என்று தெரிந்துகொண்டு தன் மனங்கவர்ந்த புனிதன் வாழுமூர் இந்த அழுந்தூரேயாகும் என நினைக்கிறாள். அவனது நாட்டில் வாழும் வண்டு, பறவை முதலியவைகளுக்கும் அவனது இயல்பு அமைந்திருக்கக்கண்டு இதை நிர்ணயிக்கிறாள்.

இவ்வண்ணம் திருவழுந்தூர்வாழும் திருமாலைக்கண்டநுபவித்துப் பாடி உருகுகிறார் திருவாலிநாடராகிய பரகால நாயகி. அவரது அநுபவம் வெளியிடும் பாசுரம் கீழ்வருமாறு:—

'என்னைம்புலனும் எழிலும்கொண்டு இங்கே
நெருநல் எழுந்தருளி
பொன்னங்கலைகள் மெலிவெய்தப் போன
புனிதனூர்போலும்
மன்னுமுதுநீ ரரவிந்தமலர்மேல் வரிவண்
டிசைபாட
அன்னம் பெடையோடுடன் நாடு மணியார்
வயல்சூழழுந்தூரே'

ஐம்புலன்-பஞ்சேந்திரியம், அழகிய அறிவு பொன்னங்கலைகள்-பொன்னாலாகிய மேகலைகள், அழகிய ஆடைகள், மஹாலக்ஷ்மியின் மேகலைகள், மஹாலக்ஷ்மியின் ஆடைகள். பொன், பொன்னியென்பதன் கடைக்குறை. பொன் அங்கு அலைகள் மெலிவெய்த, என்பதற்கு ஸ்ரீதேவி மெலிவெய்துவதினால், அங்கு அவள் அவதரித்த பார்கடலும் மெலிவெய்த என்று பொருள் கொள்ளுதலும் உண்டு.

இவ்விடத்தில் தேன் அருந்திய வண்டுகளின் அருகில் தன் பேடையோடு சென்று அன்னம் அந்த கானத்தையநுபவிப்பது பகவத்குணாநுபவத்தினால் மனமுருகிப் பாடுகிற ஆழ்வாராசார்யர்களுடைய பாட்டை திவ்ய தம்பதிகள் ஆர்வத்துடன் சென்று கேட்டநுபவிப்பார்கள் என்பதுவும் கலியன் பாடலினால் விளங்குகிறது. என்னே கலியன் பக்திபரீவாஹம்? என்னே அவருடைய கனிந்த அநுபவம்?

ஸ்ரீ:

அல்லிக்கேணியில் அழகியசிங்கர்

விஜய ஹூ சித்திரை மீ 14உ ஞாயிற்றுக் கிழமை (26–5–53) சேத்துப்பட்டில் சுக்ல த்வாதசி பாரணைமுடித்து, காலை 9-30 மணி ஸுமாருக்கு ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருதரான ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருவல்லிக்கேணிக்கு விஜயம் செய்தார். அல்லிக்கேணியில் ஸ்ரீ அழகியசிங்கர் தங்கிய ஐந்து மெட்டுமாயதினங்களும் ஏதோ ஒரு பெரிய மஹாயஜ்ஞமோ, மஹோத்ஸவமோ நடந்தேறியதுபோல ஊரெங்கும் உத்ஸாஹமும் உணர்ச்சியுமெழுந்து திகழ்ந்தது. அடியேனது குடிசையோ, ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த விடுதிக்கும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கோயில்கொண்ட ஸ்ரீ அஹோபிலமடத்திற்கும் இடையே அகப்பட்டுக்கொண்டது. அதன் காரணமாக அடியேன் அல்லும்பகலும் இவ்வமோகக்காட்சிகளைக் கண்ணாரக்கண்டுகளிக்கும்பாக்யம் முன்செய்த நல்வினைப்பயனால் அடையப்பெற்றேன். அடியேனோ பலவிதத்திலும் ஜ்ஞாநாநுஷ்டாநஹீனனாக இருந்தாலும், அடியேனைத் தேடிப்போகாது போனாலும் தினே தினே விடியற்காலையிலும், உச்சிக்காலத்திலும், சாயங்காலமும், வேளைக்கு இருமுறையாக ஸ்ரீ அழகியசிங்கர் அடியேன் குடிசை வழியே அறு முறை எழுந்தருளிக் காட்சியளித்தது அடியேன் பாவங்கள் அறும்முறையில் மனப் பண்பளிப்பதாயிருந்தது.

'ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுசழ்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே'

என்ற ஆசார்யவள்ளலின் ஸத்யவாக்கின் ஸாரப் பொருளை இப்பொழுதே அடியேன் ப்ரத்யக்ஷத்தில் அறிந்து அநுபவிக்கலானேன். வரண்டு கிடந்த அடியேன் மனமும் தளிர்த்துத் தூய்மைவழி நாடுவதாயிற்று. ஆகவேதான் துணிவுடன் ஸ்ரீ அழகியசிங்கர் பாதஸ்பரிசமும் க்ருபாகடாக்ஷமும் பொருந்தப்பெற்ற அல்லிக்கேணியும், அதன் வாஸிகளும் அவர் வருகையில் பெற்ற பெருமையை அடியேனறிவுக் கெட்டியவரை அடியேன் கண்டநுபவித்தபடி எழுத முன்வரலானேன். ஸம்ப்ரதாய பரிசயமற்ற எளியேன் எழுத்தில் பிழைகள்பல தோன்றக்கூடயது ஸஹஜமே. ஆயினும் ஆஸ்தையை ஆதரித்துத் தோஷங்களைக் கொள்ளாது அகற்றிட அறிவுமிக்க பெரியோர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பூர்ணகுப்பத்துடன் பெஸண்ட் ரோடு முடிவில் ஸமுத்ரக்கரைக்கெதிரில் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்கக் குழுமிக்கிடந்த பெரியோர்களின் குதூஹலகோலாஹலமும், நாரீமணிசளின் அல்லோலசல்லோலங்களும், சிறுவர் சிறுமிகளது உத்ஸாஹானந்த உணர்ச்சிவேகக் கோஷங்களும், வேடிக்கை பார்ப்பதற்கென்றே வந்த மற்றவர்களது ஆர்வ அநுபவங்களும் நேரிற்கண்டநுபவித்தோர்க்கே தெரியவரக்கூடுமேயொழிய எழுத்தாலெழுதி உணர்த்தப் படவியலாததுவே. ஜலஸமுத்ரத்தருகே ஒரு ஜனஸமுத்ரம் எதிர்த்து வந்ததெனக் கூறலாம் அன்று அவ்விடம் கூடிய ஆஸ்திக்ய பக்தகோடிகளது ஆரவாரஉணர்ச்சிமிகுதியை.

முரசம் முழங்கியவாறு கஜேந்த்ரன் கம்பீரமாய் முன்னே நடக்க தங்கப்பல்லக்கில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருள, மற்றொரு பல்லக்கில் கண்ணபிரான் பின்தொடர, ஸகல பரிஜநங்களோடும் சத்ர சாமர தாலவ்ருந்தாதி பரிச்சதங்களோடும், நாநாவித மேளதாள மங்கள வாத்யாதிகள் முழங்கிவர, 'ஸ்ரீபகவத் ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரண ஸார்வபௌமர் வந்தார்' என்று திருச்சின்னம் ஒலிக்க, பின்னும் முன்னும் பக்தகோடிகள் வேத ப்ரபந்தப் பாராயணங்கள் பண்ணிவர ஸ்ரீ அழகியசிங்கர் அழகிய பல்லக்கில் அனைவர்க்கும் காட்சியருளுமாறு உயர்ந்தநிலையில் எழுந்தருளப்பண்ணப்பட்டு பவனி வருவாராயினர்.

வீதிமுழுவதும் ஆஸ்திக்யசிஷ்யர்கள் வீடு தோறும் மெழுகிக்கோலமிட்டு, வாயிலிருபுறமும் குத்துவிளக்கெரிய, காணிக்கைத்தட்டையும் பூர்ணகும்பத்தையுமேந்திக் குடும்பத்தலைவர் தன் குடும்பத்தாரனைவருடனும் சுமங்கலிகள் மஞ்சனீர் ஹாரத்திகொண்டும் வீதியில் காத்திருந்த காட்சி வெகு ரம்யமாயிருந்தது. வீடுகள்தோறும் மாடிகளிலும், ஸ்ரீ அழகியசிங்கர் திருவுருவைக்காண ஆசையுடன் அநேகர் முந்தினர். பவனியுடன், ஜனஸமுத்ரம் பொங்கிப் பெருகி ஓடலாயிற்று. காணிக்கையிட்டு ஹாரத்தி வழங்கித் தெண்டனிட்டோரனைவருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் மந்த்ராக்ஷையளித்து அநுக்ரஹித்துச் சென்றார்.

இக் காட்சியைக் கண்டபோது முன்னே மிதிலாபுரிவீதியிடையே ஸ்ரீராமபிரான் உலவி வந்தகாலத்தில்,

'தோள்கண்டார் தோளேகண்டார் தொடு
கழற்கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை
கண்டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை
முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவு கண்
டாரை யொத்தார்'

என்ற கம்பநாட்டாழ்வார் வர்ணனை என் மனத்துள் தோன்றிப்பிரதிபலித்தது. அன்று கம்பர் எழுதிப்போந்ததை இதுவரை படித்து ஆநந்தித்து நினைத்து அநுபவித்தே வந்தோம். இன்று அழகியசிங்கர் பவனிவருங்கால் அவரைக் காண முந்திமுந்தியும், முண்டிமுண்டியும் தொத்தியேறித் தாழ்ந்து வளைந்து புகுந்தும் துடித்தோர் வேகத்தையும் முகங்கண்டார் முகத்தையே வர்ணித்ததையும் முறுவல் கண்டார் முறுவலிலேயே மயங்கிக்கிடந்ததையும் த்ரிதண்டங்கொண்ட கைபழகைக் கண்டார் த்ரிதண்டம்போலத் தம்பித்து நின்றதையும், திருவடி காணப்பெற்றோர் திரும்பி எதையும் பாராது மனம் லயித்துப் போனதையும் ப்ரத்யக்ஷத்தில் கண்டபொழுது, கம்பர் எழுதிவைத்தது வெறும் கவியின் கற்பனையல்ல. உண்மையில் நேர்ந்திட்ட அதிசயக் காட்சிவிவரணத்தின் சிறு பகுதியே என்பது தெளிவாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கர் அஹோபிலமடமணுகியதும், மரியாதைகள் முறைப்படி வழங்கப் பெற்று, கெட்டிமேளம் கடகடவென முழங்க உள்ளே ப்ரவேசித்து, ஸ்தல ந்ருஸிம்ஹனுக்கும் ஸ்ரீதேசிகாதி ஆசார்யர்களுக்கும் தெண்டனிட்டு, குழுமிக்கிடந்த கைங்கர்யபரர்களுக்கு முகமன் கூறி மடம்விட்டு புறப்பட்டு வீதிவழியே விடுதிக்கு பாதசாரியாக எழுந்தருளினர். கிட்டத்தட்ட ஒரு பக்ஷகாலம், ஸ்ரீ அழகியசிங்கர் அல்லிக்கேணியில் தங்கி, மிகுந்த ப்ரீதியுடன் ஆஸ்திகர்களுக்கு அநுக்ரஹம்செய்துவந்தார். ஸ்ரீ அஹோபிலமடத்தில் விடியற்காலையில் நடந்த விச்வரூபஸேவை முதல், அபிகமன ஆராதநத்திலும், திருமஞ்ஜநாதி உச்சிக்கால ஆராதநங்களிலும், ததீயாராதனத்திலும் ஸாயங்காலஆராதந சாத்துமுறைகளிலும், இரவு நடந்தேறும் டோலை உத்ஸவங்களிலும், அழகியசிங்கர் உபந்யாஸம் அருளிச்செய்த காலங்களிலும் வந்திருந்து கலந்துகொண்டு மனப்பண்படைந்தோர் பல்லாயிரம் புனிதர்கள் வாஞ்சையுடன் வளர்த்த கிராப்பையும் வெட்டியெறிந்து ஆஸ்தையுடன் குடுமிகொண்டு ஆசார்யனை யணுகிச் ஸமாச்ரயணமென்ற திருவிலச்சினைகொண்டு திருமந்திரோபதேசப்பெற்று ஸ்ரீபாததீர்த்தம் பெற்று வெளிவந்த யுவாக்களைக் காண, ஆசார்யகருணையின் காந்தவேகத்தின் சீரிய பெருமை இரும்பு மனத்தையும் கவர்வதாயிற்று. அநுஷ்டானமறியாது அலைந்த அநேகம் சனதனவான்களும் பெண்டிரால் தூண்டப்பட்டு அநுஷ்டானபரர்களாகிப் பரஸமர்ப்பணம் செய்துகொண்டு ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்து குடும்பஸமேதராக நிர்ப்பரராய் மலர்ந்தமுகத்துடனும் நிர்மலமனத்துடனும் ஸந்நிதிவிட்டு வெளிவந்தகாட்சிகண்டோமே புநிதராகிவிளங்கினர். வேளாவேளைகளில் திருவாராதனங்களை முடித்து ஸ்ரீ அழகியசிங்கர் விடுதிசேர்ந்து ஆங்குக்குழுமிக்காத்திருந்த சிஷ்யகோடிகளுக்கும் ஆஸ்திகசிரேஷ்டர்களுக்கும் இரவுவெகுநேரம் வரையிலும் தரிசனந்தந்து தக்கபடி விசாரித்து உசிதமான உபதேசாநுக்கிரஹங்களைச் செய்து மந்திராக்ஷதைகொடுத்தனுப்பிவந்தார். இப்படியாகத் திரள்திரளாகக்கூடி வரிசைவரிசை

யாக நாடி ஆசார்யனது அடியிணையைக் காணிக்கைகொண்டு பணிந்து திரும்பிய பக்த கோடிகளைக் கண்டக்காலே பதிதனும் பரம பாவனனாகிய மனப்பண்படைந்தானென்றால் பணிந்து திரும்பியோரது மனப்பண்பின் மாட்சியைக் கூறவுங்கூடுமோ! 'அதென்ன சாமியாரடா' என்று வேடிக்கையாகவோ, பரிகாசமாகவோ கும்பலைக்கண்டு கூறி, கும்ப லுடன் விடுதியுள் புகுந்து அழகர் அழகைக் கண்ட வரண்ட நாஸ்திகனும், திரும்பும் பொழுது, 'ஸ்வாமிகள் ரொம்ப பெரியவர் போலத்தானிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே, பரிகாசமொழித்துப்பக்கத்திருந்த வரிடம் மேல் நடக்கக்கூடிய நிகழ்ச்சிமுறை களைக் கேட்டறிந்து காத்திருந்து, மடம் வந்து தீர்த்தப்பிரஸாதங்களும் பெற்றுப் போனானே! அந்தத் தீர்த்தமும் பிரஸாதமும் புகுந்த அவன் மனம், மாறிப் பண்படைந்த தென்பது மிகையாமா? அழகரைக்கண்டதும் அவன் மனம் கலங்கியது. அவனுமறியாது கைகளிரண்டும் மேலெழுந்து அஞ்சலிக்கோலத் துடன் குவிந்து விரிந்து கன்னங்களை நாடி ன. முகத்தில் பயமும் குதூஹலமும் கலந்து வெளிவந்தது. அழகியசிங்கர் மடத்திற்கு எழுந்தருளப் புறப்பட்டு வீதிவந்தார். தெண்டனிட்டெழுந்த சிஷ்யகோடிகள் முன் இவனும் நெடுஞ்சாண்கடையாய் வீழ்ந்தான். அழகியசிங்கரும் அவன்முன் சிறிதளவு நின்று எழுந்துநின்ற அவனைக் குளிரக்கடாக்ஷித்து இளமுறுவலுடன் திரும்பித் துரிதமாய்ச் சென்றார். அவன் கண்களில் நீர் துளித்தன. உடம்பில் மயிர்க்கூச்சலிட்டது. புறப்பட்ட காரியத்தையும் போகவேண்டிய இடத்தையும் மறந்து, படப்நோக்கிச்சென்று திருவாரா தனக் கிரமங்களைக் கண்டானந்தித்தான். இது கற்பனை வர்ணனையல்ல. ப்ரத்யக்ஷாநுபவ விவரணமே.

ஹா! ஹா! அழகியசிங்கரென்றால் அழகிய ஸிம்ஹமாகவே தோற்றமளித்தார். விடுதிவிட்டு மடம்புறப்பட்டுத் திரும்பிவந்த ஸ்ரீ அழகிய சிங்கர் நடையின் துரித தாமத காம்பீர்ய கதியும், தோற்றத்தின் தேஜஸும் த்ரிதண்டத்தின் திவ்யதரிசனமும் முகத்தில் இலங்கிய இளமுறுவலும் மார்பில்துலங்கும் பளபளப் பானயஜ்ஞோபவீதத்தினழகும் திருமேனியை யலங்கரித்த த்வாதசபுண்ட்ரங்களின் சோபையும், காஷாய உடையின் கண்கவரும் காந்த சக்தியும், ஹா! ஹா!

'தொண்டருக்கும் துணையடிவாழி நின் தாமுறுவல்
கொண்டமுகம்வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிருநாமமும் வாழி மணிவட முப்புரி நூல்
கொண்டசீர் தூப்பிற்குலமணியே வாழி நின்வடிவே'

என்று ஸந்நிதிகளில் சொல்லப்பட்டுவரும் நமது ஆசார்யசிகாமணியின் திவ்யமங்களவிக்ரஹத்திற்குப் பல்லாண்டுபாடி வாழிகூறும் பாடல் மனத்துள் தோன்றி அந்தத் திவ்ய மங்களவிக்ரஹத்தை மனத்துள்ளே நன்கு பதியவைத்து, இந்த வாழி பல்லாண்டை பன்முறை மனனம் பண்ணிச் சிந்திக்கச் செய்வதாயிற்று. இந்த வாழிப்பல்லாண்டு இந்த அழகியசிங்கருக்கும் ஒவ்வுமென்றெண்ணிய மனம் அந்த வாழிக்குரித்தான தூப்புல் குலமணியின் திவ்யமங்களவடிவு எத்தகைத் தாயிருக்கக்கூடுமென எண்ணமிட்டு கற்பனையிலாழ்ந்து நிர்ணயித்து ஆநந்தப்படலாயிற்று! ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளை ப்ரத்யக்ஷத்தில் 'தொண்டருக்குந் துணையடி' என்ற ஸத்ய வாக்கைச் சார்த்தகமாக்கி நின்றன இவரடி பணிந்தோர் மனத்துள்.

அல்லிக்கேணியில் ஆசார்யன் பொன்னடி சேர்த்த மறுநாளின் அடுத்த தினமே, இந்திரன்சிறுவன்தேர்முன்நின்றானும்ப்ருஹ்மோத்ஸவம் கண்டருளலானான். என்ன போட்டி போன்றிருந்தது! ஆசார்யகடாக்ஷம் கூடிய க்ஷணமே பகவத்கடாக்ஷம் தானாக வந்துசேரு மென்று கேட்டுவந்த ஜ்ஞாநோபதேசவாக்கு, இப்பொழுது உண்மை நிகழ்ச்சியாகவே தோன்றியது. மதாசாரியன் மஹோத்ஸவமும் கீதாசாரியன் ப்ருஹ்மோத்ஸவமும் கலந்தது, சர்க்கரைப்பந்தலில் தேன்மாரியும் பொழிந்தாற்போல, திருவல்லிக்கேணியையே அல்லோலகல்லோலக் கோலாஹல குதூஹலக் கடலாக்கி, குதுறிக்கொந்தளித்து அலைமோதி

ஆரவாரிக்கச் செய்ததாயிற்று. சென்னைமாநகர் முழுவதுமே திருவல்லிக்கேணியில் வந்து கூடியதுபோல, ஊர் கலகலத்துச் சோபையுடன் விளங்கியது. இவ்வூருக்குத் திருவல்லிக்கேணியென்ற பெயரும் பொருந்தியதாயிற்று. ஊர்க்கண்ணன் உத்ஸவங்கண்டு உவப்பதைக்கண்டு ஸஞ்சாரக்கண்ணன் சும்மாயிருப்பானா கிளம்பிவிட்டான். மடத்து வாயிலில் கண்டருளினான் 'டோலை உத்ஸவம்.' தினே தினே இரவு 8-30 மணிமுதல் 10-மணி வரையிலும் டோலோத்ஸவம் நடந்தேறியது. 'இளிச்சவாயன் பின்னிருந்து பார்த்திருக்க, யதீந்த்ரவள்ளல் முன்னமர்ந்து கண்டுமகிழ, விசாலமான தெருமுழுவதும் நெருங்கிக்கூடிய ஆண் பெண் பிள்ளைகள் கூட்டம் மனம் நெகிழ்ந்து ஆநந்தங்கொள்ள, 'வெண்ணெயுண்டவாயன்' திவ்யாலங்காராலங்க்ருத ஸ்வரூபனாய், பக்தகோடிகள் அன்புடன் வழங்கிய பூமாலை பாமாலைகளை ஏற்று, உல்லாசமாக ஊஞ்சலாடிய காட்சி நித்யஸூரிகள் கைங்கர்யஞ்செய்து போற்றிப் புகழ்ந்தவண்ணம் இருப்பதாகச் சொல்லப்படும் ஸ்ரீவைகுந்தம் இதுவேதானோ என்று நினைக்கும்படியாயிற்று. உண்மை ஆஸ்திகர், திருவல்லிக்கேணியே பூலோகவைகுந்தமென நாடித்தேடி ஓடிவந்து கூடிக்குழுமினர். 'அஞ்சுவையமுதமன்றளித்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே' என அன்று திருமங்கையாழ்வார் மங்களாசாஸநமிட்டருளிய பாசுரம் இன்றே இந்நகரவாஸிகள் ப்ரத்யக்ஷத்தில் அநுபவித்த நிகழ்ச்சியாயிற்று. பாடத்தெரிந்தவர்கள் கண்ணனைக் குறித்த பாசுரங்களையும் பாடல்களையும் பொழிந்தனர். ஒன்றிரண்டு தினம், கூட்டத்திடையே இருந்த சில வயது முதிர்ந்த பாட்டிமார்சளோ ஸ்திரீகளோ பழையபத்ததியில் பாடிய லாலிகள் குழுமியுள்ளோர் மனத்தை ஒருங்கே வசீகரித்து மெத்தவும் மகிழ்வித்தன.

இத்துடன் முடிந்ததா ஆநந்தம். பாரத யுத்தத்தில் அர்ஜுனன் தேர்த்தட்டின்முன் நின்று கண்ணன் கீதை உபதேசித்ததைப் பிறர் சொல்லக்கேட்டே மகிழ்ந்தோம். ஆனால் இப்பொழுது கண்ணன் டோலைத்தட்டின் முன்னமர்ந்து அழகியசிங்கர் ஹிதோபதேசம் செய்தருளியது, அனைவருடைய சிந்தைக்கும் செவிக்கும் கண்களுக்கும் சேர்ந்து இனியதான 'இருவினைக்கு மா மருந்தாக' உதவியதை நேரிற் கண்டநுபவித்தோமானோம்.

'காக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென
நம்மை யெண்ணிச்
சுரக்குஞ் சுரபிகள் போற் சொரிகின்றனர்
சொல்லமுதே'

என்றஆசார்யரத்னத்தின் அர்த்தபுஷ்டியான உபதேசம் ஸ்ரீஅழகியசிங்கரிடத்திலே நிதர்சனமாயிற்று. கூடிய கும்பலைக்கண்டார். ஊஞ்சலாடும் கண்ணனுடன், ஊசலாடும் ஸனாதனிகள் மனப்போக்கை நினைத்தார் போலும்! ஹிந்து மதமும் ஸ்ரீவைஷ்ணவமதாசாரமும் நிலைதடுமாறும் கதியைக் கருத்தில் கொண்டார் போலும்! நெறியறியாது தவிப்போரையும் நெறிபிறழ்ந்து போனோரையும், நெறிவிட்டுக் கொடிவழிபோவோரையுங்கூவியழைத்து நெறியிடை புகுத்திட இதுவே தருணமென்று ஸங்கல்பித்துக்கொண்டார்போலும்! தனது ஸ்தானம் தான் இருக்கும் இடம், காலம் தான் பேசுவதைக் கேட்போரது ஜாதி வர்ணம் என்றதான வித்யாஸமெதுவையுமே திருவுள்ளங்கொள்ளாது, இன்று ஸ்ரீயதீந்த்ரர் திருவல்லிக்கேணி மடத்துவாயிலமர்ந்து, நகரவாஸிகள்மூலம் உலகவாஸிகளனைவருக்கும் ஜ்ஞானோபதேசமொழிகளை வாரியிறைத்தனர். ஒலிபரப்பிக்கருவிகள் அவர் மொழிகளை ஊரெங்கும் பிரதிபலித்தன. உத்ஸாஹத்துடன் அவர் சொல்லிய பிரசங்கமொழிகளை பெண்டுகளும், சிறுவர்களும், அதிகாரிகளும் அறிந்து, மனத்தில்கொண்டு சிந்தித்திடும்வகையில் வெகு சரளமான பாணியிலும், நித்யாநுபவவிஷயமான உதாரணங்களைக்கொண்டு மனத்தில் உண்மையெனப் பதிந்திடும் வகையிலும், உணர்ச்சிபெருக்குவனவாயிருந்தன.

'வேதப்ராமாண்யம்' என்ற தலைப்புடன் உபந்யாஸமாரம்பிக்கப்பட்டது. விஷயஸாரங்களை விரித்துரைக்க அடியேனுக்கு யோக்யதையில்லை, சக்தியுமில்லை. ஸஞ்சிகையில் இடமுமிராது. சுருங்கச்சொல்லில் மதம் என்பது மனப்போக்கே என்பதை விளக்கி 'ஹிந்து மதம்' என்பது, இதர மதங்களைப்போல்

மதஸ்தாபகர் பெயரெதுவும் கொண்டதல்லவென்பதையும், 'மறையுணர்த்தும் பொருளெல்லாம்மெய்யென்றோர்வார்' என்பதை நம்பியநுஷ்டிக்குமநாதிமதமென்பதையும், ஆகவே ஹிந்துமதப்பிரமாணம், அநாதியானவேதமேயென்பதையும் விளங்கவைத்தார். பலமதத்தோர் மனத்துளும் அன்னியராட்சிகள் பலவற்றின்கீழ்ப்பட்டும் ஹிந்துக்களது மதம்மட்டும் அழியாது வளர்வதின் அத்யாச்சர்ய மர்மத்தையும் அழகாக எடுத்துச்சொன்னார். வெள்ளையர் ஆதிக்கத்தை வீசியெறிந்து சுதந்திரம் பெற்றிடச் சத்யாக்ரஹப்போர்போன்ற பல வைராக்யமுறைகளை யநுஷ்டித்த தேசத்தலைவர்கள் நிறைந்த இந்நாட்டில், அன்னியராதிக்கமகன்று, ஹிந்துக்களது சுதந்திரம் நிலைபெற்றகாலத்திலும் மதவிஷயத்தில்மட்டும் நாம் நமது சுயமதாசாராநுஷ்டாநங்களைக் கைவிட்டு மேனாட்டார் மதாசாராநுஷ்டாநங்களிலேயே மோகங்கொண்டு மதிப்பிழந்து மதிகெட்டுப் போவதைப்பற்றி மிகவும் வருந்தி உருக்கமாகவும் சுருக்கமாகவும் பசுமரத்தாணிபோல் பல்லார்மனத்துள்ளும் படும்படிப்புகுத்தினார். மதத்துறைச் சுதந்திரம்பெற்றிடச் சத்யாக்கிரகாதி வைராக்யப்போர் நடத்தவேண்டியதே இனி அவசியமாகுமோ என்பதை அறிவாளிகள் சிந்தனையில் ஆழ்ந்திட அருளிச்செய்யவும் செய்தார். வேதமார்க்கமே ஹிந்துமதஸ்தரது சீரிய மார்க்கமென ஸ்ரீமத் வேதமார்க்கப்ரதிஷ்டாபனாசார்ய ஸார்வபௌமன் நன்கு விளக்கினார். ஸர்வேச்வரனிடமிருந்து தோன்றிய இவ் வேதவாக்யங்களைப் பலரும் அறிந்துணர்ந்து அநுஷ்டிக்கும்வகையில், பின்வந்த ஆழ்வார்கள் செய்தருளிய திவ்யப்பிரபந்தங்கள் 'தமிழ்வேதமாக' அமைந்த அழகைப் பின் அருளிச்செய்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் அஸாதாரணச் சிறப்பைப்பற்றி அப்பொழுதே பரக்கப் பேசினார். சித், அசித் என்ற சிருஷ்டிகளனைத்தையும் தன் சரீரமாகக்கொண்டு, அவற்றுள்ளிருந்து அவற்றை ஆட்டுவிக்கும் ஐயனின் ஸ்வரூபரூப நிர்ணயதத்வங்களை விசிஷ்டாத்வைதபரமாக எல்லோரும் எளிதில் புரிந்தறியும்வகையில் நிர்த்தாரணஞ் செய்தருளினார்.

இதனின்றும் வர்ணாச்ரமக் கட்டுப்பாடுகளை எடுத்து விளக்கி ஹிந்துமதத்தில் அவற்றின் அகற்றவொண்ணா ஆவச்யகதையை எவரும் மறுக்கவொண்ணாவகையில் தெளிவுறுத்தினார். நமது மதத்தில் விதிக்கப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்கள் ஒவ்வொன்றும், லோகஹிதத்திற்கும், செய்வோர் ஹிதத்திற்குமேயென்பதை வெகு நன்றாய் விளக்கினார். 'ஐயங்கார்' என்ற பெயர் கொள்ளவேண்டியவர்கள், 'ஐந்து அங்கத்தார்.' அதாவது: பஞ்சஸம்ஸ்காரங்களென்ற ஐந்து அங்கங்களையும் ஏற்றவர்களென்றும், ஸம்ஸ்காரங்களை விட்டுவிட்டு பிருதை மட்டும் ஏற்றிடுவது எவ்வளவு நியாயமற்றதென்றும், கேளாது கேட்டார். சௌள உபநயன ஸம்ஸ்காராதிகளை விளக்குகையில், 'கிராப்' விஷயத்தைப்பற்றியும் பேசலானார். மில்களில் வேலைசெய்வோர் ஸௌகர்யார்த்தமாகவும், கம்பெனி முதலிய உத்யோகத்துறையிலுள்ளோர் தோற்றப்பகட்டுக்காகவும் அயலாராசாரம்மைப் பற்றிநிற்பது மேனாட்டார் ஆதிக்கமகன்ற இன்றும் எவ்வளவு மதியீனமும் அவமானமுமான செய்கையென்பதை நன்குணர்த்தினார். முன்குடுமியைவிடப் பின்குடுமியே அழகும், தோற்றப் பெருமையும், இதர பலவித ஸௌகர்யார்த்தங்களும் தரவல்லதென்பதைச் சொல்லாது சொல்லி மாறாத பனத்தையும் மாற்றிட மன்றாடினார்.

பின்னர் விவாகாதி ஸம்ஸ்காரங்களின் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கிச் சொல்கையில் நிஷேகஸம்ஸ்காரத்தின் ஆவச்யகத்தையும், அதன் தாத்பர்யத்தையும் நற்பலனையும் நன்கு விளக்கினார். ப்ரஜை என்ற பயிரை பயன்படவேண்டுமாகில், இதர பயிர்களைப்போலவே, மிகுந்த ஜாக்ரதையுடனும் தகுந்த முறைகளிலும் இடங்களிலுமேயே விதைத்துப் பயிராக்கி வளர்க்கவேண்டியதென்பதை அநுபவமொட்டி அத்யாச்சர்யமாய் எடுத்துக்காட்டி இந்த ஸம்ஸ்காரம் இக்காலத்தில் கைவிடப்பட்டுப்போவதில் விளையக்கூடிய தீமைகளைத் தானாகவே அறிவாளிகளுக்குப் புலன்படத் தெளிவுறுத்தினார். விவாகாதி விஷயங்களில் நமது ஹிந்து அரசாங்கமே ப்ரவேசித்து சாஸ்த்ரவிருத்தமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதை கண்டியாமல் கண்டித்து மனம் புழுங்கினார்.

ஹிந்துக்கள் ஒவ்வொருவரும்—ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர் ஒவ்வொருவரும்—

> 'ஸர்வதேச தசாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா। ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்। ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்வலா। திகந்த வ்யாபிநீ பூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணீ'

என்ற ஒப்பிலா உணர்ச்சி யுணர்த்தும் மந்திரச்லோகத்தைகூட்டமாய்க்கூடி, வாய்விட்டுஉரத்துப் பாடி தெருத்தெருவாய் ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த த்வஜமெடுத்து, ஸ்ரீராமாநுஜ திவ்யாஜ்ஞைகளைத் திநேதிநேப்ரசாரஞ்செய்து, நாமும் நம் நன்னாடும் நம் பின்னோரும் நம் முன்னோரும் உய்ந்திடும்வகையில் உத்கோஷித்திடவேண்டுமென்பதே தமது அபிலாஷையென்பதையும் ஸ்பஷ்டமாய் தெரிவித்துக்கொண்டார். எவ்விததசையிலும், எந்ததேசத்திலும், எந்தகாலத்திலும் எவர்க்கும் உதவிப் பயன்படுவன ஸ்ரீராமாநுஜ திவ்யாஜ்ஞைகளே! இதைக்கேட்டதுந்தான், ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும்போதெல்லாம் சிஷ்யகோடிகள்—

> 'ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய!, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய!, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய!, ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரண ஸார்வபௌம!,' ஸ்வாமிந் எச்சரிக்கை.

என்று பிருதுகூறிச் செல்வதின் உண்மை தாத்பர்யமும் ஸ்ரீ அஹோபிலமடத்தழகிய சிங்கர்களுக்கு இப்பிருதுகள் எவ்வளவு பொருத்தமானவைகள் என்று எல்லோர்க்கும் விளங்குவதாயிற்று.

சித்திரைமீ 26வ (8–5–53) வெள்ளிக்கிழமை இரவு ஸ்ரீ அழகியசிங்கர் திருவல்லிக்கேணியைவிட்டு எழுந்தருளப் போவதாகத் தெரியவந்தது. பல்வேறு திக்குக்களிலிருந்தும் பக்தர்களும் சிஷ்யர்களும் ஆஸ்திகர்களுமாக வந்து கூடிவிட்டனர். ஸந்தியாகாலத்துக்கு முன்னமேயே கண்ணனும் ஸந்தியாகால முன்னரொருமுறையும், சாத்துமுறைக்குப் பின்னரொருமுறையுமாக டோலை கண்டருளினார். விடைபெற்றிடக் காத்திருந்தோர் கண்டுகளிக்க பத்துமணி சுமாருக்கு அழகியசிங்கரும் விடுதிவிட்டுக்கிளம்பி அஹோபிலமடம் எழுந்தருளினார். அத்தலத்திய லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடமும் நிகமாந்ததேசிகன் முதலியோரிடமும் விடைபெற்றுச்செல்ல கைங்கர்யபரர்களும் சிஷ்யர்களும் மடத்துள் மண்டிக்குழுமினர். கண்டார் அழகியசிங்கர். இவர்களை இப்படிவிட்டுப்போகிறோமே என்று மனங்கலங்கியதுபோலும் நின்ற இடத்திலேயே ப்ரோக்ஷித்து உட்கார்ந்துவிட்டார். கைங்கர்யபரர்களுக்கும் மற்றோருக்கும் மந்த்ராக்ஷதை தந்தருள சென்னைநகர் நீத்துப்புறப்படுமுன் திரும்பவும் திருவல்லிக்கேணிவந்தே புறப்பட வேண்டுமென்று எல்லோரும் ஏகமனதாய்ப் பிரார்த்தித்தனர். அச்சமயம் ஸ்ரீ அழகியசிங்கர் திருமுகம் மக்களைவிட்டுப் பிரியும் மாதாவின் மனம்போல, உணர்ச்சிபொங்கியடங்கிக்கிடக்கும் வகையில் 'அண்டிய குழந்தைகளை ஆதரவற்றதாக்கிப் போகிறோமே' என்ற ஆதங்கம் அழுத்த, அத்தகைய அகத்தின் ஆதுரதை முகத்தில்பிரதிபலித்திடுவதுபோலத்தோன்றியது கூர்ந்து கவனித்தோருக்கு. பிறகு சடக்கென எழுந்து வாயிலில்வந்து, தெருமுழுவதும் குழுமிக்கிடந்த ஆச்ரிதர்களைக் கண்டதும் அப்படியே தயங்கிநின்றார் சிலநிமிஷம் அன்னார்களனைவரையும் கண்குளிரக்கடாக்ஷித்த வண்ணம். அனைவரும் அஞ்சலிசெய்து மனம் நெகிழ்ந்து மெய்ம்மறந்து நின்றனர். அவர்களை விட்டகல மனமில்லாத அழகியசிங்கர் மனம் வேறிடத்தில் தனக்காகக் காத்திருக்கும் ஆச்ரிதர்களை அரைக்கணம் நினைத்ததுபோலும். த்வரையுடன் ஓரடி எடுத்துக் கீழே வைத்தார். மேளவாத்யதிருச்சின்னங்கள் முழங்கின. கைங்கர்யபராள் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபனாசார்ய! என்ற இத்யாதி பிருதுகளைக் கோஷித்து எச்சரிக்கை எழுப்பலாயினர். அக்கணமே மெய்ம்மறந்துகிடந்த தொண்டர்களுக்குப் பிரஜ்ஞை திரும்பியதுபோலும். வேகத்துடன் வழிவிலகினர். காத்திருந்த பல்லக்கில் அழகியசிங்கரும் அமர்ந்தார். தங்கப்பல்லக்கு முன்னும், கண்ணன் பல்லக்கு இடையேயும், அதன்பின் அழகியசிங்கர் பல்லக்குமாகப் புறப்பட்டுவிட்டது. சுங்குவார் வீதிவழியாகச் ஸமுத்திரக்கரைவரை யாவரும் வழிகொண்டனுப்பித் திரும்பினர். 'எப்பொழுது திரும்பிவருவாரோ'

என்று ஏங்கி வீடுசென்றனர் பலர். ஹா ஹா! சேஷஹோமம்முடிந்த கலியாண வீடுபோலாய் விட்டதே ஊர்' என்று அயர்த்தனர் அநேகர்.

இந்தமாதிரி ஸௌலப்யமும், ஆச்ரிதரிடம் அன்பும், வாக்வசீகாமும், அநுஷ்டாநசீல மும் ஒருங்கேகூடிய ஸ்ரீ அழகியசிங்கர் தேச ஸஞ்சாரமாகக் கிளம்பியது, புராதன காலங் களில், மகாசக்ரவர்த்திகள், திக்விஜயஞ் செய் யக் கிளம்பியதாகக் கூறப்படும் கதைகளை ஞா பகத்துள் எழுப்புகிறது. ராஜேந்திரர்கள் ராஜாங்கத்து த்வஜத்தைநாட்டிப் பரப்பிடத் திக்விஜயஞ்செய்தார்கள் நமது யதீந்த்ரரும், ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த த்வஜத்தை எங்கும் நாட்டிப் பறந்திடச்செய்யத் தேச ஸஞ்சாரம் புறப்பட்டுள்ளார். ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்தாரனைவரும் இச்சமயம் அவருடன் சேனைகள்போல்கூடி அவரது திக்விஜய ஸங் கல்பத்தைச் செவ்வனே பூர்த்திசெய்விக்கக் கடமைப்பட்டவராகின்றனர்.

அதுவும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸங்கல் பத்தாலும், ஸ்ரீ அழகியசிங்கர் போன்ற ஆசார்ய ச்ரேஷ்டர்கள் அநுக்ரஹத்தாலுமே ஆகவேண்டியதுவே!

'நானிலமுந்தான் வாழ நான்மறைகள்தான் வாழ, மாநகரின் மாறன் மறைவாழ......'

ஸ்ரீ:

செய்திகள்

நடந்த சித்திரைமீ 14வ (26–5–53) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சேத் துப்பட்டிலிருந்து ஸஞ்சாரமாக திருவல்லிக் கேணிக்கு எழுந்தருளினர் என்பது தினசரி பத்ரிகைகள் படிப்பவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அங்கு நடந்த வைபவங்களை 'அல்லிக்கேணியில் ஸ்ரீ அழகியசிங்கர்' என் னும் வ்யாஸம் ஒரு ஸ்வாமி எழுதியிருக்கிறார். அதைப்படித்து தெரிந்துகொள்ளலாம். சென் னையில் ஸ்ரீ அழகியசிங்கர் சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, பார்க் டவுன், முத்யாலு பேட்டை, அபிராமபுரம், மைலாப்பூர், லக்ஷ்மீ புரம், அடையார், மாம்பலம், சைதாப் பேட்டை முதலிய இடங்களுக்கு எழுந்தருளி னர். நல்ல கோடைகாலத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் தம்முடைய திருமேனி ச்ரமத்தையும் பாராமல் கேவலம் பக்தஜனங்களின் க்ஷேமத் தையே கருதி அங்காங்கு எழுந்தருளியது மன்னியில் அரியபெரிய உபந்யாஸங்கள்மூலம் உஜ்ஜீவநஹேதுவான உபதேசங்களை பண்டித பாமரர்களுக்கு ஹ்ருதயங்கமமாய் செவிக்கினிய செஞ்சொற்களால் செய்தருளினர் என்று நகர மக்கள் போற்றியுகக்கின்றார்கள். பிறகு தாம் பரம், பிள்ளைபாக்கம், நீரளூர் முதலியவிடங் களுக்கெழுந்தருளி இன்று தாமல் க்ராமத்திற் கெழுந்தருளியிருப்பதாகக் கேள்விப்படுகின் றோம். அவ்விடத்திலிருந்து சோளஸிம்ஹ புரம், சித்தூர், கடப்பை வழியாக கர்னூல் ஜில்லாவிலுள்ள ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத் திற்கு எழுந்தருளப்போவதாக அறிகிறோம்.

நடாதூர், க்ருஷ்ணமாசாரி.

ஸ்ரீ:

திருப்பாவை

'மெல்லிய பஞ்சடி யுந்துவ ராடையு மேகலையும்
வல்லியை வென்ற மருங்குழுத் தார வனமுலை
யும்
சொல்லியல் வன்மையும் வில்லிபுத் தூரம்மை
தோளழகும்
முல்லையை வென்ற நகையுமெல் லாமென்றன்
முன்னிற்குமே.'

பாவை என்பது பண்டையோரால் பாடப்பெற்றுவந்த பதினோராடல்களில் ஒன்று. பதினோராடலாவன:—'கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன், குடைதுடிமா லல்லியமல் கும்பம் - சுடர்விழியால், பட்டமதன் பேடு திருப் பாவை யரன் பாண்டரங்கம், கொட்டி யிவை சாண்பதினோர் கூத்து.' இவை நின்றாடல், வீழ்ந்தாடல் என இரண்டு கூறுபடும். அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்லாடல் என்ற ஆறும் நின்றாடல். துடி, குடியம், பேடு, மரக்கால், பாவை என்ற ஐந்தும் வீழ்ந்தாடல். 'பாவை திருமகளாடிற்று,' 'திருவாடல் 'பாவை' 'செருவெங் கோல மவுணர் நீங்கத், திருவின் செய்யோளாடிய பாவை' என்ற மேற்கோள்களால் பாவை நாடகமாடினவர் செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் உலக மாதாவாகிய பெரிய பிராட்டியார் என்பதும், அவுணர் பொராது அஞ்சி அவியுமாறு திருமா மகளாரால் ஆடப்பெற்ற பெருமையையுடையது அவ்வாடல் என்பதும், அது மிகவும் தொன்மை உள்ளது என்பதும் அறியக்கிடக்கின்றன.

'பாவை' என்னும் நாடகநூலில் வரும் பொதுப்பொருள் பெண்கள் தாம் வழிபடும் கடவுளை நோக்கி நோன்பு நோற்றுத் தாம் விழைந்த பயனைப்பெறுதலாம். இந்நாடக நூற்களுள் இப்பொழுது முற்றும் கிடைக்கப் பெற்றுள்ளவை இரண்டு. அவை கோதை நாச்சியார் அருளிச்செய்த திருப்பாவையும், சைவசமயாசாரியர்கள் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவையும் ஆகும். இவ்விரண்டினுள், வேத மனைத்துக்கும் வித்தானதும், பாதகங்கள் தீர்ப்பதும், பரமனடிகாட்டுவதுமாகிய திருப்பாவை சமயச்சார்பின்றி இலக்கண இலக்கியங்களின் அளவே நின்றுநோக்கும் புலவர்களால் எவ்வண்ணங்கொள்ளப்பெறுவதற்கு உரியது என்பதைச் சற்று முன்னர் ஆராய்வோம்.

திருப்பாவை என்னுந்தொடரில் 'திரு' என்பது அடைமொழி. அது பலபொருள் ஒரு சொல். செல்வம், இலக்குமி, அழகு, மேன்மை என்பன பலபொருள்களைத்தரும் சொல்லாமேனும் ஈண்டு அது, மேன்மை என்னும் பொருளதாய் நின்றது. 'பாவை' என்பது பதுமை எனப்பொருள்பெறும். இவ்விரு சொற்களுங்கூடி இத்தொடர்மொழி மேன்மையாகிய பாவை என்றுதலின் பண்புத்தொகை நிலைத்தொடராம். இத்தொடரில் பாவை என்பது உவமையாகுபெயராய்ப் பெண்களை உணர்த்த, அது பொருளாகுபெயராய்ப் பெண்களால் நோற்கப்படும் நோன்பை உணர்த்த, அது காரியவாகுபெயராய் அந்நோன்பைத் தெரிவிக்கும் நூலை உணர்த்திநின்றது. ஆதலின், இது மும்மடியாகுபெயர்.

'திருப்பாவை' என்பது நாச்சியார் அருளிச்செய்த பாவை நூலுக்குக் காரண இடுகுறிப் பெயராய் அமைந்துள்ளது. இதன் பாசுரத் தொகை முப்பது. இதன் ஈற்றுப் பாசுரம் நாந்திச்செய்யுள். இறுதிப்பாட்டு ஒன்று நீங்கலாக மற்ற இருபத்தொன்பது பாட்டுக்களும் 'ஏலோரெம்பாவாய்' எனவும், இறுதிப் பாட்டு 'எம்பாவாய்' எனவும் முற்றுப்பெறும், அவ்விருபத்தொன்பது பாசுரங்களும் இந் நாடக நிகழ்ச்சிக்கு உரியனவாகும்.

திருப்பாவையின் பொருள் அமைப்பைக் காண்போம். முன் பாசுரத்தில் இது நோன்புக்குரிய மார்கழித் திங்களாய், மதிநிறைந்த நன்னாளாய் இருக்கின்றது. கண்ணனே நமது விழாவை முற்றுவித்துத் தருபவனாக அசைந்துள்ளான். ஆதலால் நோன்பின்பொருட்டு வர விருப்பம் உடைய பெண்களே! வருவீர்களாக' என்று அழைத்தல் கூறப்பெற்றிருக்கின்றது. இரண்டாம் பாசுரத்தில் கண்ணன் பிரிவால் உறக்கம் இன்றி இருந்த அவ்வாயர் சிறுமியர்கள் தம்முடன் வந்து கூடிய சிறுமியர்களை நோக்கி 'நாம் நோன்பிற்காக செய்தற்கு உரியன இவை' என்று கூறுதலும், மூன்றும் பாசுரத்தில் அச்சிறுமியர்கள் தம்முடன் வந்து கூடிய பெண்களை நோக்கி 'நோன்புக்கெனக்கொண்டு நீராடுவோமாயின் மாதமும்மாரிபெய்யும், நாடுமுழுவதும் செழிக்

கும்' என்று உரைத்தலும், நான்காம் பாசுரத்தில் அப் பெண்கள் மழைக்கு உரிய தேவதையை நோக்கி 'உலகில் உள்ளார் அனைவரும் வாழும்படியாகவும், நாங்களும் மார்கழி நீராடும்படியாகவும், மழையைப் பெய்வாயாக' என்று வேண்டுதலும், ஐந்தாம் பாசுரத்தில் அப்பாவையார் 'நாம் தூயோமாய் வந்து கண்ணபிரான் திருநாமங்களைச் சொல்லி அப்பெருமானைத் தூமலர்களைத்தூவித் தொழுது பாடிச் சிந்தித்தால் முன்செய்த பாவங்களும் இனி வரகிற்கும் பாவங்களும் தீயினிற் பஞ்சுபோல் உருமாய்ந்துபோகும்' என்று கூறுதலும் சொல்லப்பெறுகின்றன.

ஆறும் பாசுரமுதல் பதினைந்தாம் பாசுரம் வரையிலும் உள்ள பத்துப் பாசுரங்களில் அங்ஙனம் முன்னே எழுந்த பெண்கள் தம்மோடு வந்து கூடிய மற்றைப் பெண்களோடு சென்று உறக்கம் இன்றிக் கண்ணன் குணங்களைச் சிந்தித்துக்கொண்டிருத்தலால் எழுந்திருக்க மாட்டாமல் அணையிற்கிடக்கும் பெண்களை எழுப்புதல் கூறப்பெற்றிருக்கின்றது.

பதினாறும்பாசுரமுதல் இருபத்தொன்பதாம் பாசுரம் வரையிலும் உள்ள பதினான்கு பாசுரங்களில் அந் நங்கையர்கள், நந்தகோபர் திருமாளிகையை அடைந்து, அவரது அரண்மனைக் காவலனையும், வாயிற் காவலனையும் எழுப்பி, அப்பால் நந்தகோபரையும், யசோதைப் பிராட்டியாரையும், கண்ணனையும், பலராமரையும், நப்பின்னைப் பிராட்டியாரையும் எழுப்புதலும், கண்ணனைச் சீரிய சிங்காதனத்தின்கண் வீற்றிருக்கச் சொல்லி 'போற்றி போற்றி' எனப் பலபடியாலுந் துதித்து 'எங்கள் நோன்புக்கு வேண்டுவனவற்றைச் செய்து தருக' என வேண்டுதலும், பின்னர் 'எங்கள் உண்மையாகியஉள்ளக்கிடைக்கை இது' என்று கூறுதலும் கூறப்பெற்றுள்ளன.

ஆதலின், முதல் ஐந்துபாசுரங்களிற் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் ஒரு தொடராய் ஒரு களத்தில் அமைதற்கு உரியனவாகவும், ஆறுமுதல் பதினைந்துவரையிலும் உள்ள பத்துப் பாசுரங்களிற் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் மற்றொரு களத்தில் அமைதற்கு உரியதாகவும், பதினாறுமுதல் இருபத்தொன்பது வரையிலும் உள்ள பதினான்கு பாசுரங்களிற் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் ஒரு தொடராய் வேறொரு களத்தில் அமைதற்கு உரியனவாகவும் அமைந்து இருக்கின்றன.

'திருப்பாவையின்கண் அமைந்துள்ள மேற்காட்டிய மூன்றுறுப்பு 'திருவாடல் பாவையதற்குறுப்புத் தேரின், ஒருவா திரண்டுடனென்று' என்பதிற் கூறிய மூன்றுறுப்பாம் போலும் என்று தோன்றுகின்றது. பேரறிஞர் நன்கு ஆராய்வாராக.

'திருப்பாவை பாட்டாறைந்து' (தேசிகமாலை பிரபந்தஸாரம் 10.) என்பது வேதசிரத்தேசிகனார் பணிப்பு. இதன் கருத்து தெளிதல் வேண்டும். அதனைச் சற்றுக்காண்போம்.

முதல் ஐந்துபாசுரங்களில் அந்யாபதேசத்தில் நோன்பையும், நோன்புக்கு அதிகாரிகளையும், அதற்குக் கர்த்தவ்யங்களான பரிகராதிகளையும், அதனால் உண்டாகக்கூடிய பிரதான அவாந்தர பலன்களையும். ஸ்வாபதேசத்தில் பிரபத்தியையும், அதன் அதிகாரியையும், அதற்குப் பலம் நிச்சயம் என்கிற மஹாவிச்வாஸத்தையும், வேறு கர்த்தவ்யாந்தரம் இல்லாமையினாலே தைத்திரியத்தில் ஸ்ரீமந்யாஸ வித்யையில் ஓதினபடியே ஸ்வாபாவிகமாக ஏற்பட்ட மானஸமானக்ரியைகளை அதற்குக் கர்த்தவ்யங்களாக நிரூபித்திருக்கிறபடியினாலே இந்த உபாயத்தின் நைரபேக்ஷயத்தையும், இப்படி இவ்வுபாயநிஷ்டனோடு பரம்பராஸம்பந்தமுடைய தேசாதிகளும் ஸுபிக்ஷமாய் இருக்கும் என்று அவாந்தரபலத்தையும், மற்றத் தேவதைகளும் இவன் இடத்தில் அஞ்சி வர்த்திப்பார்கள் என்று இந்த உபாயநிஷ்டன் மஹிமையையும் உபாயபலத்தையும் நிரூபித்திருக்கிறது. இரண்டாவது ஐந்துபாசுரங்களில் அந்யாபதேசத்தில் பகவதநுபவத்தில் புதியளாய் இருக்கும் கோபிகளை எழுப்பினளாயது என்றது. ஸ்வாபதேசத்தில் புதிய பாகவதர்களைப் பகவதநுபவத்திற்கு ஸமயம் வந்தது. இனி அஜ்ஞானாந்தகாரத்தில் உழலலாமோ என்று உணர்த்தினபடியாய் நின்றது. மூன்றாவது ஐந்துபாசுரங்களில் அந்யாபதேசத்தில் கோபிகளுக்குள் ப்ராதான்யம் வஹித்தவர்களாய் க்ருஷ்ணனுடைய ப்ரீதிக்கு விசேஷ பாத்ரபூதைகளாய்இருக்கும் கோபிகளை எழுப்பினளாய்நின்றது. ஸ்வாபதேசத்தில் பகவத் கடாக்ஷவிசேஷத்திற்குப் பாத்திரபூதர்களாய் பகவத்குணாநுபவ ஸம்பத்தைப் பெற்றவர்களான பாகவதர்களை எழுப்பினளாய் இருந்தது. இவ்வாறு இழிவார்களுக்குத் துணை தேடிக்கொண்டு இழியவேண்டும் விஷயமாகையாலே 'வேதம்வல்லார்களைக்கொண்டு' இத்யாதி

ப்ரமாணங்களையும், பரஸம்ருத்யைகப்ரயோஜனர்களான பாகவதர்களுடைய ஸ்வபாவத்தையும் அநுஸந்தித்து ஸஹாயத்தோடுகூட பகவதநுபவம்பண்ண உபக்ரமித்தபடி. நான்காவது ஐந்துபாசுரங்களில் அந்யாபதேசத்தில் வாசல்காப்போர், நந்தகோபன், நம்பிமூத்தபிரான், முதலியோரையும், நப்பின்னைப் பிராட்டியையும் முன்னிட்டுக்கொண்டு இழிந்தாளாய்நின்றது. ஸ்வாபதேசத்தில் ஆசார்யர்களை முன்னிட்டுக்கொண்டு புருஷகாரஸமாச்ரயணம் பண்ணினபடியை அருளிச்செய்தாராயிற்று. ஐந்தாவது ஐந்து பாசுரங்களினால் அந்யாபதேசத்தில் தங்களுடைய அபேக்ஷித பலத்தை நேரில் கண்ணனையே எழுப்பிப் ப்ரார்த்தித்தாளாய்நின்றது. ஸ்வாபதேசத்தில் கோப்த்ருத்வவரணபூர்வகமாக எம்பெருமானை ஆச்ரயித்தாளாய்நின்றது. ஆறுவது ஐந்து பாசுரங்களில் அந்யாபதேசத்தில் தாங்கள் இந்த நோன்புக்குப் பஹிரங்கமாக அபேக்ஷிக்கும் வர்ஷமாகிற பலத்தையும் ப்ரார்த்தித்தாளாய்நின்றது. ஸ்வாபதேசத்தில் இவ்வுலகத்தில்வரும் பலவிசேஷங்களையும், இவ்வுலகில்கிடைக்கக்கூடிய அவாந்தரபலங்களையும் யாவதாத்மபாவியான பகவத்கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் பிரார்த்தித்துத் தலைக்கட்டினளாயிற்று. இவ்வாறு ஒவ்வொரு ஐந்து பாசுரங்களிலும் ஒரு அர்த்தவிசேஷத்தை ப்ரதிபாதிக்கும் விசேஷத்தைத் திருவுள்ளம்பற்றி சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு 'ஆறைந்தும்' என்று மொழிந்துள்ள பெற்றிகண்டு மகிழ்க.

'விட்டுசித்தன் பூங்கோதை' திருவரங்கச் செல்வனுக்கு பன்னு திருப்பாவை சங்கத் தமிழ்மாலை முப்பது' என்று ஆண்டாளாலேயே திருநாமம் செய்யப்பெற்றுள்ளது. அதனை 'ஆறைந்து' எனக் காட்டிய மறைமுடித் தேசிகனார் கருத்தை வெளியிடுமாறு சாந்தி ஆச்ரமம் ஸ்ரீமௌனசுவாமிகள் கட்டளையையநுஸரித்து அவ்விடத்தில் 12-1-53 திங்கட்கிழமை தொடங்கி 17-1-53 சனிக்கிழமையன்று ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண மஹோத்ஸவத்தோடு திருப்பாவையின் செம்பொருள் சங்க இலக்கியங்களை அடியொற்றி சம்பிரதாயத்துக்கு இணங்க விளக்கப்பெற்றது.

விட்டுசித்தன் தூயதிருமகளார் வாழ்க
அரங்கநகரப்பனுக்குத் துழாய்மாலைமுடிசூடிக் கொடுத்த
வில்லிபுத்தூர்ச்செல்வி வாழ்க
வாழ்க திருப்பாவைபாடு மடப்பாவை.

श्रीः

॥ श्रीरङ्गशठकोपयो[illegible]दशकम् ॥

1. श्रीमदहोबिलमठ [illegible] ।
श्रीरङ्गशठ [illegible] ॥

2. श्रीरङ्ग [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

3. श्री [illegible]
[illegible] ।
[illegible] यतीन्द्र
[illegible] ॥

4. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] योगिराजः ॥

5. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] यतिराज [illegible] ॥

6. [illegible]
[illegible] यतीन्द्रः ।
[illegible] यतीश [illegible]
[illegible] ॥

7. [illegible] ।
[illegible] ॥

8, [illegible] ।
[illegible] ॥

8. श्रीरङ्ग [illegible] श्रीवीरराघव [illegible] ।
[illegible] अहोबिलमठं [illegible]

10. श्री [illegible] । [illegible] ॥
श्री [illegible] श्रीरङ्ग [illegible] योगिराजः ॥

99538

ஶ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஸூ உத்தராயணம் சிசிர ருது-கும்ப மீ 1956 பிப்ரவரி - மார்ச்]

13-2-56	மாசி மீ 1௨	திங்கட்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; கும்பசுக்ல த்விதீயை திதி.
18-2-56	6௨	சனிக்கிழமை	ரதஸப்தமி.
22-2-56	10௨	புதன்கிழமை	ஏகாதசி.
23-2-56	11௨	வியாழக்கிழமை	த்வாதசி-த்ரயோதசி திதித்வயம். புனர்வஸூ; குலசேகராழ்வார்திருநக்ஷத்ரம்; புஷ்யம்; 37-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ரம்.
25-2-56	13௨	சனிக்கிழமை	○பூர்ணிமை; மஹாமகம்.
4-3-56	21௨	ஞாயிற்றுக்கிழமை	அஷ்டமி திதி. அஷ்டகை.
5-3-56	22௨	திங்கட்கிழமை	நவமி திதி. அந்வஷ்டகை.
7-3-56	24௨	புதன்கிழமை	ஏகாதசி திதி.
8-3-56	25௨	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம். அதிதி.
9-3-56	26௨	வெள்ளிக்கிழமை	ஸர்வ ச்ரவணத்வாதசி.
12-3-56	29௨	திங்கட்கிழமை	●அமாவாஸ்யை.
13-3-56	30௨	செவ்வாய்க்கிழமை	கும்பசுக்லப்ரதமை திதி. மீன ரவி 39-39, ஷடசீதி; ஸங்க்ரமணதர்ப்பணம்.

[சிசிர ருது - மீன மீ]

14-3-56	பங்குனிமீ 1௨	புதன்கிழமை	சூன்ய திதி.
16-3-56	3௨	வெள்ளிக்கிழமை	மேல் அஹோபிலம் ப்ரஹ்மோத்ஸவாரம்பம்.
17-3-56	4௨	சனிக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம். கீழ் அஹோபிலம் ப்ரஹ்மோத்ஸவாரம்பம்.
22-3-56	9௨	வியாழக்கிழமை	ஏகாதசி.
23-3-56	10௨	வெள்ளிக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 2-16.
26-3-56	13௨	திங்கட்கிழமை	○பூர்ணிமை. பங்குனி உத்திரம்.

ஓர் திருத்தம்

சென்ற ஸஞ்சிகையில் ''அடியேன் கண்ட தத்க்ரதுந்யாயம்'' என்னும் வ்யாஸத்தின் ஆரம்பத்தில் 5-வது வரியில் உள்ள ''சிஷ்யனிடத்தில்'' என்பதை ''சிசுவினிடத்தில்'' என்று திருத்தி வாசிக்குமாறு ப்ரார்த்திக்கிறேன்.

புரிசை, நடாதூர், க்ருஷ்ணதாஸன்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸாரபோதிநீ

(இரண்டாவது பாகம்)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸார போதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீஅஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். ஸித்தோபாயசோதநாதிகாரம் முதற்கொண்டு நிகமநாதிகாரபர்யந்தமான இந்த இரண்டாவது பாகம் மன்மத வருஷம் தை மாதம் உத்திராடத்திருநன்னுளில் வெளியாகியிருக்கிறது. இந்த பாகமும் உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை வருமாறு:—

புல் காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-8-0
ஆப்காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-0-0
பேப்பர் பயிண்டு புத்தகம்	ரூபாய்	5-8-0

புஸ்தகத்தை அபேக்ஷிக்கும் ஆஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர். (செங்கல்பட்டு ஜில்லா)

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டே அனுப்பவேண்டும். புத்தகம் வேண்டியவர்கள் அதன் விலையில் பாதியையாவது முன்பணமாக அனுப்பினுல் வி. பி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். புஸ்தகங்கள் மார்ச் முதல் தேதிக்குப் பிறகே அனுப்பப்படும். தபால் செலவு தனி.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M A, L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ௵ ஆடி ௴ { ஸஞ்சிகை 7

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் வைபவம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

விஷய வைலக்ஷண்யம்

ஆழ்வார்களுக்குள் ப்ரதானதமராகக்கொண்டாடப்படும் நம்மாழ்வார் திருவாய்மொழியில் 4–10 ஒன்றும் தேவும் என்கிற ப்ரபந்தத்தில், ‘பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் பிறர்க்கும்நாயகனவனே, கபாலநன்மோக்கத்துக் கண்டுகொள்மின்’ என்று ஸ்ரீமந்நாராயணனே ப்ரஹ்மருத்ராதிகளைக் காட்டிலும் பரனான தேவதை என்று அருளிச்செய்து, அதற்கு மாறுதலாக திருவாய்மொழி 7–6ல் ‘என் திருமார்பன்தன்னை யென் மலைமகள் கூறன்தன்னை, என்றுமென்னுமகளை அகம்பால்கொண்ட நான்முகனை, நின்றசசிபதியை நிலங்கீண்டெயில்மூ-ன்றெரித்த வென்று புலம்துரந்த விசும்பாளியைக் காணேனோ’ என்றும், ‘அவாவறச்சூழ் அரியை அயனை அரனை யலற்றி யவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்’ என்று முடிவிலும் அருளிச்செய்ததற்கு விபரீதமாக நாயிகாபாவாவஸ்தையிலேயே ‘முடிவிவள்தனக் கொன்றறிகிலேன்’ என்றும் ‘மூவுலகாளியே என்றும் ‘கடிகமழ்கொன்றைச்சடையனே’ என்றும் ‘நான்முகக் கடவுளே’ என்றும் ‘வடிவுடை வானோர் தலைவனே’ என்றும் ஸ்ரீமந்நாராயணனோடுமற்றைத் தேவர்களை அபிந்நராக அருளிச்செய்திருக்கிறார்.

திருமங்கையாழ்வாரோவெனில் 8–10–3ல் ‘நின் திருவெட்டெழுத்தும் கற்று மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடுடனொத்திலேன்’ என்றும், ‘மற்றோர் தெய்வமெண்ணேனுன்னை என் மனத்துவைத்து’ என்றும், ‘நின்னையல்லால் வருதேவர் மற்றுளரென்றென்றன் மனத்திறையும் கருதேன்’ என்றும், ‘இனி யாது மற்றோர் தெய்வம் பிறிதறியேன்’ என்றும், ‘மற்றோர் தெய்வம் தேறேனுன்னையல்லால்’ என்றும் பலதடவை அருளிச்செய்ததோடு ‘பாருருவில் நீரெரிகால்’ என்கிற பாசுரத்தில் ‘ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ’ என்று தேவதாந்தரங்களை அநுதரித்து ‘முனி உருவமெம்மடிகளுருவம் தானே’ என்று ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை நிஷ்கர்ஷித்து அவனே தமக்கு ஸ்வாமீ என்று தீர்மானித்ததோடு—

‘நில்லாதநெடுவெள்ளம் நெடுவிசும்பின்மீதோடி நிமிர்ந்தகாலம்......எம்பெருமானுண்டுமிழ்ந்த வெச்சில்தேவரல்லாதார் தாமுளரே’ என்றும், ‘நெற்றிமேல்கண்ணானும் நிறைமொழிவாய்நான்முகனும் நீண்டநால்வாய் ஒற்றைக்கைவெண் பகட்டினொருவனையும் உள்ளிட்டவமரரோடும் வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட கொற்றப் போராழியான் குணம்பரவாச் சிறுதொண்டர் கொடியவாறே’ என்றும் ‘பிறையாரும் சடையானும் பிரமனும் முன் தொழுதேத்த இறையாகிநின்றான் தன்னிணையடியேயடைநெஞ்சே’ என்றும் நாராயணனுடைய பரத்வத்தை ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறார். பகவத்கீதையில் அத்யாயம் 14-ல் ‘ஓஞுயொzவ்யபி-வாரெண ஹக்தியொகெந ஸெவதெ’ என்று சொல்லப்பட்ட அவ்யபிசரிதையான பகவத்பக்தியும் மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடுடனொத்திலேன் என்று ததீயபர்யந்தமாக தேவதாந்தரத்யாகமும் இவ்வாழ்வாரால் அநுஷ்டிக்கப்பட்டது. உற்றதுமுன்னடியார்க்கடிமை என்று தீர்மானித்த பாகவதகைங்கர்யமும் ‘தண்சேறைஎம்பெருமான் தாள்தொழுவார் காண்மின் என் தலைமேலாரே’ என்று வ்யக்தமாக அருளிச்செய்யப்பட்டது.

மேலும் திருமங்கையாழ்வார் ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசங்களை வர்ணிக்கும்பொழுதும் பெரும்பாலும் அந்தந்த திவ்யதேசங்களில் ஸம்பாவிதங்களான பெருமைகளையே வர்ணித்து தமது பாசுரங்களை பொய்யில் பாடலென்று புகழும்படி அருளிச்செய்திருப்பதையும் காட்டுகிறோம்.

பதரிகாச்ரம வர்ணநம்

‘தேனமர்சோலை கற்பகம்பயந்த தெய்வநன்
னறுமலர் கொணர்ந்துவானவர் வணங்கும்
கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்
துள்ளானே’

‘தேனுடைக்கமலத்தயனொடுதேவர் சென்று சென்றிறைஞ்சிட,- பெருகுவானிடைமுது நீர் கங்கையின் கரைமேல் வதரியாச்சிராமத் துள்ளானே’

‘அணிமலர்க்குழலார் அரம்பையர் துகிலும் ஆரமும் வாரிவந்தணிநீர் மணிகொழித் திழிந்த கங்கையின்கரைமேல் வதரியாச்சி ராமத்துள்ளானே’

சிங்கவேழ்குன்றம்

‘மலைத்தசெல்சாத்தெறிந்த பூசல் வன்துடி வாய்கடுப்ப’ சிலைக்கைவேடர் தெழிப்பறாத’ என்றும்,

‘ஒய்ந்தமாவுமுடைந்தகுன்றும் அன்றியும் நின்றழலால் தேய்ந்தவேயுமல்லதில்லா’ என்றும் ‘கவ்வுநாயும் கழுகுமுச்சிப்போதொடு கால்சுழன்று, தெய்வமல்லால் செல்லவொண்ணா’ என்றும் அந்தந்த திவ்யதேசப்ரபாவத்தை உள்ளபடியே அருளிச்செய்திருக்கிறார்.

சோழநாட்டுத் திருப்பதிகள்

‘வையமுய்ய வளங்கொடுக்கும் வருபுனலம் பொன்னி’

‘எண்திசையும்பெருஞ்செந்நெலிளந்தெங்கு கதலி இலைக்கொடி ஒண்குலைக்கமுகோடி சாலிவளம் சொறிய வண்டுபலவிசைபாட மயிலாலுநாங்கூர்’ என்றும்,

‘மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள்வீழ மாங்கனிகள்திரண்டுருட்டாவருநீர் பொன்னி திடலெடுத்து மலர்ச்சுமந்தங்கிழியும் நாங்கூர்’

‘காய்த்தநீள்கமுகும் கதலியும் தெங்கும் எங்கும்மாம்பொழில்களின் நடுவே வாய்த்த நீர்பாயும்’

‘குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளை முத்தும் தலையார்ந்த விளங்கமுகின் தடஞ் சோலைத் திருநறையூர்’

‘மாறுதமலர்க்கமலம் செங்கழுநீர்ததும்பி மதுவெள்ளமொழுக வயலுழவர் மடையடைப்ப மாறுதபெருஞ்செல்வம் வளருமணி நாங்கூர் வைகுந்தவிண்ணகரம் வணங்குமட நெஞ்சே’ என்றும் வர்ணித்திருக்கிறார்.

ஆகவே இப்படிப்பட்ட விஷயவைலக்ஷண்யமும் இவ்வாழ்வார் ஸ்ரீஸூக்திகளில்தான் காணப்படுகிறது.

காருண்யத்தினால் பரோபதேசம்

இப்படி இத்திருமங்கையாழ்வார் பகவதநுக்ரஹலப்தமான திவ்யஜ்ஞானத்தினால் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூபகுணாதிகளை பரிபூர்ணமாகவநுபவித்து இச்சுவைதவிரயான்போய்... வேண்டேன்’ என்கிறபடியே க்ருதார்த்தராயிருக்கையினாலே ‘ஸசஸ்வாது ந ஹ்ருஷீத’ என்கிறபடியே தேனும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொத்தென்கிறபடியே ஸர்வரஸமயமான இவ்வாநந்தாநுபவத்தை ஸகல ஸம்ஸாரியாத்மாக்களுமநுபவிக்க யோக்யராயிருக்க, அவர்களிவ்வம்ருதாநுபவத்தை அனாதரித்து அல்பத்வாஸ்திரத்வாதி ஸகலதோஷதுஷ்டங்களான சப்தாதிவிஷயாநுபவாஸக்தர்களாயிருப்பதைப் பார்த்து காருண்யத்தின் ஆதிக்யத்தினால் அவர்கள் அநுபவிக்கிற விஷயங்களினுடைய தோஷங்களையும் தாமநுபவிக்கிற ஆராவமுதத்தினுடைய குணாதிசயத்தையும் ஸம்ஸாரிகளுக்கு உபதேசித்தாவது அவர்களையும் தம்மைப்போல பகவதநுபவரஸிகராக்கி அவர்களோடு கூடியநுபவிப்பதற்காக அவர்கள் தம்மை வணங்கிக் கேட்காதிருக்கும்பொழுதும் தாமாகவே பரோபதேசத்தைப்பண்ணுகிறார்.* இதனால் ‘சொன்னால்விரோதமிது’ என்று உபதேசித்த நம்மாழ்வாருடையவும் ‘காரேய் கருணை இராமனுசா இக்கடலிடத்தே யாரே யறிபவர் நின்னருளின்’ என்றும் ‘தயைகஸிந்தோ’ என்றும் சொல்லப்பட்ட பகவத்ராமானுஜனுடையவும் காருண்யம்போல இவ்வாழ்வாருடைய காருண்யத்தின் பெருமையும் சொல்லப்பட்டதாகிறது.

---

*குறிப்பு—பெரிய திருமொழி 8-ம் பத்து 3-ம் திருமொழி
,, 6-ம் பத்து 4-ம் திருமொழி
,, 11-ம் பத்து 7-ம் திருமொழி பாசுரங்களைக் காண்க.

முமுக்ஷுத்வம் ப்ரபத்யநுஷ்டாநம்

இவ்வாழ்வார் பகவதநுக்ரஹத்தினால் உண்டான திவ்யஜ்ஞாநமஹிமையினாலே ஸம்ஸாரவாழ்க்கையிலுள்ள ஸகல தோஷங்களும் ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகையாலே ப்ரஹ்மலோக பர்யந்தமான ஸகல ஸாம்ஸாரிகபோகங்களில் விரக்தராய் நித்யநிர்தோஷநிரதிசயாநந்த ப்ரசுரமான மோக்ஷப்ராப்தியில் ஆஸ்தாதிசயத்தினாலே அதை அநுபவிப்பதில் த்வராயுக்தராய் அதற்கு ஸாதநமாய் த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியோகாநுஷ்டாநத்தில் தமக்கு அதிகாரமில்லாமையாலே ஸ்வாதிகாராநுகுணமாக ஶரணாகதியை அதிலும் ஆர்த்தப்ரபத்தியை திருவிண்ணகரெம்பெருமானுடைய திருவடிகளில் தம்முடைய விஷயவைராக்யப்ரகாசநபூர்வகமாக 'ஆண்டாயுன்னைக்காண்பதோரருளெனக்கருளுதியேல் வேண்டேன் மனைவாழ்க்கை விண்ணகர் மேயவனே' என்று 9-தடவை ஆர்த்தியின் அதிசயத்தாலே விஜ்ஞாபித்து, 'பாண்டேன் வண்டறையும்குழலார்கள் பல்லாண்டிசைப்ப ஆண்டார் வையமெல்லாம் அரசாகி முன்னாண்டவரே மாண்டார்' என்று 'வந்தாரந்தோ மனைவாழ்க்கைதன்னை வேண்டேன் நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே' என்பதுபோன்ற பாசுரங்களில் சொல்லுகிறபடியே ஶரணாகதியைப்பண்ணினார்.

இவர் ஆர்த்தப்ரபத்தியை அநுஷ்டித்தார் என்கிற விஷயம்—

'முளிந்தீந்தவெம்கடத்து மூரிப்பெருங்களிற்றால் விளிந்தீந்தமாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே அளிந்தோர்ந்தசிந்தைநின்பாலடியேற்கு வானுலகம் தெளிந்தே என்றெய்வது திருவிண்ணகரானே' என்று, மோக்ஷம்பெற அவஸரப்படுவதாலும் வேண்டேன் மனைவாழ்க்கை என்று 9-தடவை சொல்லுகையாலும்,

மேலும்—

'மக்கள்தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல் என்றின்னம் ஆற்றங்கரைவாழ்மரம்போலஞ்சுகின்றேன்'

'மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய்சொல் என்றஞ்சி காற்றுத்திடைப்பட்டகலவர்மனம் போல் ஆற்றத்துளங்காநிற்பன்'

'பாம்போடொருகூரையிலே பயின்றாப்போல் தாங்காதுள்ளம்தள்ளும்'

'இருபாடெரிகொள்ளியினுள் எறும்பேபோலுருகாநிற்குமென்னுள்ளம்'

'வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே உள்ளம்துளங்காநிற்பன்' என்றும் தான் ஸம்ஸாரத்திலிருப்பதைக்குறித்து பலபடியாக பயப்படுவதாகச் சொல்வதாலும் வ்யக்தமாகிறது.

திருமங்கையாழ்வார் ஆறும்பத்து 1, 2, 3, திருமொழிகளில் திருவிண்ணகரெம்பெருமான் திருவடிகளில் ஶரணமடைந்து இருப்பதுபோல 8-ம் 8-ம் திருமொழியில் 'ஏழையேதலன்' முதலான திருமொழிகளில் 'ஆழிவண்ண நின்னடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே' என்று ரங்கநாதன் திருவடிகளிலும் ஶரணம் அடைந்தவராகத் தோன்றுவதால் மற்றும் பலவிடங்களிலும் இவர் ஶரணாகதியை அநுஷ்டித்திருப்பதாக சிலர் ஸந்தேஹிக்கலாம்.

இத்திருமங்கையாழ்வார் திருவிண்ணகரெம்பெருமானிடத்தில் 'ஸதா பஶ்யந்தி ஸூரய:' என்று நித்யஸூரிகள் அநுபவிக்கிற பரிபூர்ணப்ரஹ்மாநுபவரூபமான இஷ்டப்ராப்தியை ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக்கருளுதியேல் என்று ஒன்பது தடவையும் அதற்கு ப்ரதிபந்தகமான ஸம்ஸாரபந்தத்தினுடைய விநாசத்தை 'வேண்டேன் மனைவாழ்க்கை விண்ணகர் மேயவனே' என்று 9-தடவையும் 'மற்றோர் தெய்வமெண்ணேன் உன்னைஎன்மனத்துவைத்துப்பெற்றேன்பெற்றதுவும்பிறவாமை' என்றும் 'நின்பாலடியேற்கு வானுலகம் தெளிந்தே என்றெய்வது' என்றும் ஸம்ஸாரநிவ்ருத்தியையும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவரூப பரமபுருஷார்த்தத்தையும் ப்ரார்த்தித்து அதற்கு உபாயமான ஶரணாகதியை 6-2ல் 'நின்னடைந்தேன்' என்று 9 தடவை சொல்லி அந்தத்திருமொழிக்கு பலம்சொல்லுமிடத்தில் 'கோனாய் வானவர்தம் கொடிமாநகர் கூடுவரே' என்று மோக்ஷத்தையே பலமாகச் சொல்லி மோக்ஷப்ராப்தியில் தமக்கிருக்கும் த்வரையை 'திருவிண்ணகரானே வானுலகம் என்றெய்வது' என்று அருளிச்செய்திருப்பதுபோல மற்றோரிடத்திலும் வ்யக்தமான வாக்யங்களில்லாததினால் மற்றோரிடத்திலும் மோக்ஷார்த்தமாக ஶரணாகதி ஆழ்வாரால் செய்யப்படவில்லை என்பதுதானுசிதமாகும். (தொடரும்)

ஶ்ரீ:

ஜடபரத உபாக்யாநம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ப்ராஹ்மணர்:—பூமி, பாதம், கணைக்கால், தொடை, இடை முதலான அவயவங்களின் மேலுள்ள தோளில் இருக்கும் பல்லக்கினால் எனக்குப் பாரம் உண்டென்றால் அந்தப் பாரம் உனக்கும் ஸமமாயிருக்கவேண்டும். இந்தப் பல்லக்கின் பாரம் மாத்ரமன்று; காடு, மலை, வீடு முதலியவற்றைப் பற்றிய பாரமும் உண்டாயிருக்கவேண்டும். மற்றொன்றுகேள். ஆத்மாவோ, அவயவங்களைக் காட்டிலும் வேறென்பது வெளிப்படை. இப்படியிருக்க 'நான் பாரத்தைச்சுமக்கிறேன்' என்பதேது? இந்த உனது சிவிகை எந்த வஸ்துவினாலானதோ, அதே வஸ்துவினாலானதுதான் இவ்வுடம்பும். (இரண்டும் பாஞ்சபௌதிகமே.) இதில்தான் உனக்கும் எனக்கும் மற்றவர்களுக்கும் மமத்வம் (எனது என்னும் அபிமானம்) ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. நான் சொன்னது தெரிந்ததா?

இவ்வளவு பேசிவிட்டு அந்த யோகியானவர் மௌனம் ஸாதித்துக்கொண்டு பல்லக்கைச் சுமந்துகொண்டேபோனார். கேட்டான் சவ்வீரமஹாராஜன். பல்லக்கினின்றும் திடீரென்று குதித்தான், அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு 'ஸ்வாமி! ப்ராஹ்மணோத்தமரே! இப்பல்லக்கை விடுங்கள். அடியேன் அறியாமையினால் செய்த குற்றத்தைப் பொறுத்து அடியேனை அநுக்ரஹிக்கவேண்டும். தேவரீருடைய வேடத்தைப்பார்த்துத் தேவரீரை ஜடனென்று நினைத்துவிட்டேன். தேவரீர் யார்? என்ன பயனைக்கருதி இங்கே எழுந்தருளினது? இவற்றையெல்லாம் ஸவிஸ்தாரமாய் உரைத்தருளல் வேண்டும்' என்று அவரடிபணிந்து நின்றான். பரதயோகி உரைக்கலானார்.

ஜடபரதர்:—அரசனே! 'நீ யார்' என்றும் 'என்ன பயனை நோக்கி எதனால் வந்தாய்?' என்றும் கேட்டாய். இவைகளுக்கு விசதமான பதில் வேண்டியதில்லை. சுருங்கக் கூறுகிறேன். எங்கும் வருவதற்குப் பயன் கர்மாநுபவமே. ஸுகதுக்காநுபவங்களெல்லாம் புண்யபாபங்களினால் உண்டானவைகள். அவை இடத்தையும் காலத்தையும் பற்றியிருப்பதனால், ப்ராணிகள் தங்கள்தங்கள் கர்மாநுபவத்துக்குரிய தேசகாலங்களிலே தேஹாதிகளைப் பெற்றுவருகிறார்கள். இப்படி ஸகல ஜந்துக்களும் ஸகல இடங்களிலும் அவ்வவைகளுக்குரிய காலங்களில் உடலோடு வருதல் தங்கள் கர்மங்களை அநுபவிப்பதற்கே. இது ஸர்வஸாதாரணமான விஷயம். இவ்வாறிருக்க, என்னை வருதற்குக் காரணம் என்னவென்று ஏன் வினவினாய்?

அரசன்:—யோகீந்த்ரரே! ஸகலத்திற்கும் தர்மாதர்மங்கள்தான் காரணமென்பதை இப்போது வ்யக்தமாய் அறிந்தேன். ஒரு ஸம்சயம் கேட்கிறேன். 'நான் இன்னான் என்று ஆத்மாவைக் குறித்துச் சொல்லக்கூடாது' என்று தேவரீர் ஸாதித்ததே, அது எப்படி? ஆனால் இதில் ஒரு விஷயம். 'ஆத்மா இல்லாத வஸ்துவாகையாலே அப்படிச் சொல்லக்கூடாது' என்று சொல்லலாம். அது இல்லாத வஸ்துவல்ல; இருக்கிறவஸ்துதான், ஆகையால் 'நான்' என்னும் சொல்லை ஆத்மாவின்மேல் ப்ரயோகிப்பது குற்றமல்லவே. இப்படியிருக்க, 'நான் இன்னான் என்று சொல்லக்கூடாது' என்று எப்படி அருளிச்செய்தீர்? தயைசெய்து இதனை விளக்கியருளல் வேண்டும்.

ஜடபரதர்,—அரசனே! கேள்; ஆத்மாவைக் குறித்து 'நான்' என்னும் சொல்லை ப்ரயோகிப்பது குற்றமன்று; சரிதான், ஆனால் 'நான் இன்னான் என்பதினால் ஆத்மாவல்லாத தேஹாதிகளிலே ப்ராந்தியினால் ஆத்மபுத்தி பண்ணக்கூடாது. அது குற்றம். ஆனால் நாக்கு 'நான்' 'நான்? என்று சொல்லுகிறதே யென்று கேட்கலாம். நாக்கு முதலியவைகள் கருவிகளேயன்றிக் கர்த்தாவான ஆத்மாவன்று. தேஹமே ஆத்மாவென்று பலர் நினைக்கக்கூடும். தேஹத்தில் தலை, கால், கை முத

லிய அநேக அவயவங்கள் இருக்கின்றன. எந்த அவயவத்தில் ஆத்மசப்தம் ப்ரயோகிக்கலாம்? மேலும், ஜாக்ரதவஸ்தையில் 'எனது உடம்பு' என்று வேருகத் தோன்றுகிறது. ஸ்வப்நத்தில் வேறுவிதமாய்த் தோன்றுகிறது. ஸுஷுப்தியில் இவ்வாறு தோன்றுவதில்லை. இக்காரணங்களால் தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறு என்றறிந்துகொள். தவிர ஸகல தேஹங்களிலும் இருக்கிற ஆத்மாக்கள் ஜ்ஞாநஸ்வரூபமானவையேயன்றி, இவைகளில் வித்யாஸமில்லை. ஆதலால் தேஹதர்மங்களான ஜாத்யாதிகளைவிட்டுப் பேதப்படுத்திச் சொல்லக்கூடாமலிருப்பதால் 'நீ யார்?' என்ற வினவும், 'நான் இன்னுன்' என்ற விடையும் பொருந்தாதவைகள். ஆத்மா நித்யப்பொருள்; உடம்பு முதலானவை அநித்யப்பொருள். ஆதலால் ராஜாவான நீயும், இச்சிவிகை தாங்கும் நாங்களும் உன் ஸேவகரும் இருக்கின்ற பொருளன்று (ஸத்தல்ல.) இதை இவ்வுதாஹரணத்தால் அறிந்துகொள். முன்பு மரமாயிருந்தது வெட்டப்பட்டுக் கட்டையாயிற்று. பின்பு அது நீ ஏறியிருக்கும் பல்லக்காயிற்று. இந்த நிலையிலே இதற்கு 'வ்ருக்ஷம்' என்ற பெயரும் 'கட்டை' என்ற பெயரும் வருமா? 'மஹாராஜா மரத்தின்மேல் ஏறியிருக்கிறார்' என்று உன் மனிதர்கள் சொல்வார்களா? கட்டையின்மேல் இருக்கின்றார் என்று தான் சொல்வார்களா? 'பல்லக்கின் மேல் இருக்கிறார்' என்றல்லவோ சொல்வார்கள்? ஆராய்ந்துபார்த்தால் இந்தப் பல்லக்கென்பது, ஒருவகை ஜோடிப்பைப் பெற்றிருக்கிற கட்டைகளின் கூட்டமேயன்றி வேறன்று. இந்த ஜோடிப்பைப் பிரித்துவிட்டால் உன் பல்லக்கென்பது எங்கேயிருக்கும்? இதே ந்யாயத்தை அநுஸரித்தது 'நீ, நான்' என்பதும், வஸ்துஸ்திதி இது. ஆனால் லோகவ்யவஹாரம் வேறு. கர்மமடியாக வந்திருக்கிற தேஹங்களிலே புருஷனென்றும் ஸ்த்ரீயென்றும், மாடென்றும், ஆடென்றும், பக்ஷியென்றும், மரமென்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. 'நீ, நான்' என்று சொல்லுகிற சொற்களின் முக்யப்பொருள் ஆத்மஸ்வரூபம்தான். அது ஆணுமன்று பெண்ணுமன்று, அலியுமன்று, தேவனுமன்று. மனிதனுமன்று, பக்ஷியுமன்று, மரமுமன்று. சரீரங்கள் யாவும் கர்மத்தினுல் வந்தவைகளே. எது எந்தக்காலத்திலும் மாறுபாடுகளால் உண்டாகும் வேறு பெயர்களை அடையமாட்டாதோ, அதுதான் வஸ்துவெனப்படும். மற்றவை வஸ்துவாகமாட்டா. உதாரணமாக: உன்னையே எடுத்துக்கொள். நீ உன் நாட்டாருக்கு அரசன்; தகப்பனுக்கு மகன்; மனைவிக்குப் புருஷன்; மகனுக்குப் பிதா; இப்படியிருக்க உன்னை யாரென்று சொல்வேன்? மேலும் நீ தலையா? கழுத்தா? வயிறு? கையா? காலா? சொல். இவ்வுடம்புக்கு நீ யார்? உனக்கு இவ்வுடம்பு என்ன? ஸகல அவயவங்களுக்கும் வேருய் நிற்கிற நீ, நன்ருய் ஆலோசித்து 'நான் யார்' என்பதைத் தெரிந்துகொள். உண்மை இப்படியிருக்க, 'நான் இன்னுன்' என்று எப்படி வேறுபடுத்திச் சொல்வேன் நான்.

பரமார்த்தத்துடன்கூடிய பரதயோகீந்த்ரருடைய சொற்களைக் கேட்டான் ஸௌவீரராஜன். மயிர்க்கூச்செறிந்து மெய்ம்மறந்து நின்றான். சிறிதுநேரம்சென்றதும் பேச ஆரம்பித்தான்:—

அரசன்:—ஸ்வாமீ! யோகீந்த்ரரே! ஸகல ஜந்துக்களிடத்தும் ஒரேவிதமான ஆத்மஸ்வரூபமுண்டு; சிவிகையை நான் சுமக்கவில்லை; இச் சரீரம் சுமக்கின்றது; அது நம்மினும் வேறுபட்டது; த்ரிகுணங்களின் ஏவுதலினுல் பஞ்சபூதங்கள் அசைகின்றன; குணங்கள் கர்மத்துக்கு வசப்பட்டவை; அவைகளால் எனக்கென்னவென்று மொழிந்தீர். இவைகளைக் கேட்ட என் உள்ளம் பரமார்த்தத்தை உள்ளபடி அறிய அவாவுகிறது. அடியேன் ஏற்கனவே 'இந்த ஸம்ஸாரத்தில் எது சிரேயஸ்ஸு?' என்று அறியும்பொருட்டுக் கபிலமாமுனிவரிடம் போகப் புறப்பட்டேன். இப்பொழுது தேவரீர் அருளிச்செய்த சில பரமார்த்தவிஷயங்களைக்கேட்டதும் அடியேன் மனம் தேவரீரையே நாடிநிற்கிறது. ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமான கபிலமாமுனிவர் தான் வழியில் ப்ரத்யக்ஷமாய் ஸேவை ஸாதித்தாரோவென்று எண்ணுகிறேன். ஆகையால் இந்த ஸம்ஸாரத்தில் எது சிரேயஸ்ஸோ, அதனைத் தெளிய விளக்கியருளல்வேண்டும்.

ஜடபரதர்:—ரஹூகணா! நீ இப்போது என்னை ச்ரேயஸ்ஸை வினவுகின்றாயா? பர மார்த்தத்தை வினவுகின்றாயா? ச்ரேயஸ் ஸும் பரமார்த்தமும் ஒன்றன்று; வேறு. ச்ரேயஸ்ஸுகளெல்லாம் பரமார்த்தங்களாக மாட்டா. ஒருவன் தன் இஷ்டதேவதையை ஆராதித்துச் செல்வமோ ஸந்தானமோ பெற்றால் அவை அவனுக்கு ச்ரேயஸ்ஸாகுமேயன்றிப் பரமார்த்தங்களல்ல. இப்படியே யஜ்ஞ யாகாதிகளைச் செய்து ஸ்வர்க்காதிகளைப்பெற நினைப்பவனுக்கு அந்த ஸ்வர்க்காதிகளே அவனுக்கு ச்ரேயஸ்ஸாம். ராஜ்யம் இச்சிப்பவனுக்கு அந்த ராஜ்யமே ச்ரேயஸ்ஸாம். இவைகளெல்லாம் பரமார்த்தங்கள் என்று சொல்லத் தகுந்தவையல்ல. ஏனெனில்: பணம் பரமார்த்தமானால், அதைத் தர்மத்துக்காகவும் காமத்துக்காகவும் செலவிடுவார்களா? அப்படிச் செலவிடுதல் காரணமாகவே அது பரமார்த்தம் அன்றென்று உணரவேண்டும். மேலும்: செல்வத்தைக்கொண்டு ஸாதிக்கப்படும் தர்ம காமங்கள் அழியக்கூடியவை. ஆதலால் பணம் பரமார்த்தமன்று. புத்ரன் பரமார்த்தமாவென்று கேட்டால், அவனுமல்ல. அவன் தன் பிதாவுக்கும், அவனும் அவன் பிதாவுக்கும் பரமார்த்தமென்று ஆகின்றானாதலால், உலகத்துக்கு அவன் பரமார்த்தம் எப்படியாவன்? இப்படியே எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு பார். ஆதலால், ராஜனே! நான் இப்போது சொல்லவந்தவைகளெல்லாம் ச்ரேயஸ்ஸுக்கள் தான். பரமார்த்தம் இன்னதென்பதைக் கூறுகிறேன்:—தேஹத்தைப் போல் பல பொருளாயிராமல் ஒரு பொருளாயும், ஜ்ஞானத்தினால் எங்கும் வ்யாபிக்கவல்லதாயும், நிர்மலமாயும், ஸத்வாதிகுணரஹிதமாயும், ப்ரக்ருதிக்கு வேறுபட்டதாயும், முதல்-முடிவு, வளர்தல்-தேய்தல் முதலியன இல்லாததாயும், பஞ்சபூதங்களால் அழிக்கப்படாததாயும், தேஹாதிகளுக்கு அதிபதியாயுமிருக்கிற ஆத்மஸ்வரூபம் யாதொன்றுண்டோ தன்னுடையதும் பிறருடையதுமான தேஹத்திலேயிருக்கிறஆத்மஸ்வரூபத்தைப்பற்றி 'எல்லாம் ஒரே விதம்' என்ற ஜ்ஞானம் எதுவுண்டோ, அந்த ஜ்ஞானஸ்வரூபம்தான் பரமார்த்தம். தேஹபேதங்களில் ஆத்ம பேதத்தை நினைப்பவர்கள் பரமார்த்தத்தை அறியாதவர்கள். வேய்ங்குழலில் புகுந்த காற்று ஒன்றாயிருந்தும், அதன் த்வாரபேதங்களால் ஷட்ஜம் முதலிய ஸ்வரபேதங்கள் உண்டாவதும், அந்த ஸ்வரங்களுக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டாயிருப்பதும் ப்ரத்யக்ஷம், ஜ்ஞானபேதம் கூடாதென்பதை விளக்க ஒரு கதை சொல்லுகிறேன் கேள். இது நிதாகருக்கு ஜ்ஞானத்தை உண்டாக்கும்பொருட்டு ருபுவென்பவர் சொல்லிய கதை.

ஜடபரதர்:—பூர்வத்தில் பரமேஷ்டிக்கு 'ருபு' என்னும் குமாரர் ஒருவர் அவதரித்தார். அவர் ஸ்வபாவத்தில் தத்வஜ்ஞானமுடையவர். புலஸ்த்ய குமாரரான 'நிதாகர்' என்பவர் அந்த ருபுவுக்குச் சிஷ்யராயிருந்தார். குருவான அந்த ருபு என்பவர் மிக்க மகிழ்ச்சி கொண்டு அதிமேதாவியான அந்த நிதாகருக்கு ஸகலஶாஸ்த்ரங்களையும் போதித்தார். அவர் குருமுகமாக ஸகலஶாஸ்த்ரங்களையும் தெளிவாக அதிகரித்திருந்தும், ஆத்மஸ்வரூபத்தில் பேதமில்லாமையைப்பற்றிய வாஸனையே அவருக்கு இல்லாது போய்விட்டது. இவ்விஷயத்தை அந்த ருபு அறிந்திருந்தார். அந்த நிதாகர் ஒரு நகரத்தின் ஸமீபத்திலுள்ள ஓர் உத்யானவனத்தில் வஸித்துக்கொண்டிருந்தார். அவருக்கு உபதேசம் செய்தற்பொருட்டு அந்த இடத்துக்கு ஒருநாள் ருபு மஹாமுனிவர் போய்ச்சேர்ந்தார். நிதாகர் தினந்தோறும் வைச்வதேவத்தைச் செய்துமுடித்துவிட்டு 'யாரேனும் அதிதிகள் வருவார்களோ?' என்று வாசலில் வந்து பார்ப்பது வழக்கம். அவ்வழக்கத்தையொட்டிப் பார்க்கையில் ஒருநாள் ருபுமுனிவர் தம் வீட்டு வாயிலில் வந்திருக்கக்கண்டார். அவரைக் கண்டவுடனே நிதாகர், அவருக்கு அர்க்யாதி உபசாரங்களை ஸமர்ப்பித்து, அவரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் ஓராஸனத்தில் உட்காரவைத்து 'ஸ்வாமீ! அமுது செய்தருள வேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். அதைக் கேட்ட ருபு முனிவர் 'ப்ராஹ்மணோத்தமரே! உமது க்ருஹத்தில் நான் புஜிக்கத்தக்க பொருள்கள் என்ன இருக்கின்றன? ஹீனமான போஜனத்தில் எனக்கு விருப்பமில்லை' என்றார்.

நிதாகர்:-ஸ்வாமீ! அரிசிமாவு யவதான்யங்களால் செய்யப்பட்ட அன்னங்கள் இருக்கின்றன. பலவித அப்பங்கள் இருக்கின்றன. காய், கனி, கிழங்குகள் இருக்கின்றன. இவற்றுள் எவை திருவுள்ளமோ, அவைகளை யதேஷ்டமாகப் புஜிக்கலாம்.

ருபு-இவைகளெல்லாம் அல்பாஹாரங்கள் இவை எனக்குத் தேவையில்லை. மோர்க்குழம்பு, பாயஸம், தேன்குழல், மற்றும் சில மதுரான்னங்கள் ஆகிய இவைகளைச் செய்து கொடும்.

நிதாகர்;-(தம்பத்னியைப்பார்த்து)பெண்ணே நமது க்ருஹத்தில் எழுந்தருளியிருக்கும் இம்முனிவர் மதுரான்னங்களை அமுதுசெய்ய இச்சிக்கிறார். அவர் திருவுள்ளப்படி மதுபதார்த்தங்களான அக்காரவடிசில் முதலானவற்றைப் பண்ணிப் பரிமாறு' என்று உத்தரவிட்டார். அவளும் அப்படியே யாவற்றையும் செய்து பரிமாறினாள். முனிவரும் அமுது செய்தார். பின்பு,

நிதாகர்—'ஸ்வாமீ! இவைகளை அமுது செய்ததனால் தேவரீருக்கு த்ருப்தியும் ஸந்துஷ்டியும் உண்டாயினவா? திருவுள்ளம் பாங்காயிருக்கின்றதா? தேவரீர் எழுந்தருளியிருக்குமிடம் எது? எங்கிருந்து எழுந்தருளுகிறது? எங்கே எழுந்தருள உத்தேசம்? இவற்றையெல்லாம் விஸ்தாரமாய் ஸாதித்தருளவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். ருபு சொல்லத் தொடங்கினார்.

ருபு:-எவனுக்குப் பசியோ அவனுக்கு அன்னத்தைப் புசிப்பதனால் த்ருப்தி உண்டாகிறது. எனக்கு பசியில்லை. அப்படியிருக்க, எனக்கு த்ருப்தியுண்டா' வென்று ஏன் கேழ்க்கிறீர்? ப்ருதிவீ ஸம்பந்தமானதாதுவானது வயிற்றழலால் (ஜாடராக்நியால்) எரிக்கப்பட்டால் பசி உண்டாகிறது. அப்படியே உள்ளேயுள்ள நீர் வற்றிப்போனால் தாஹமுண்டாகிறது. இந்தப் பசி தாஹங்களெல்லாம் தேஹத்தினிடம் உள்ள இயற்கையின் தர்மங்கள். எனக்குஇவையில்லை. இப்பசியினால் உண்டாகும் த்ருப்தி எனக்கு இப்போது மாத்ரமன்று, எப்போதுமில்லை. இரண்டாவதாக 'திருவுள்ளம் பாங்காயிருக்கிறதா? துஷ்டியாயிருக்கிறதா?'வென்று கேட்டீர். மநஸ் பாங்காயிருப்பதும் துஷ்டியாயிருப்பதும் சித்தத்தின் தன்மைகள். இந்தக் கேள்விகளை நீர் சித்தத்தையன்றோ கேட்க வேண்டும் என்னை ஏன் கேட்டீர்? நான் மாத்ரமன்று என்னைப்போலுள்ள ஆத்மாக்களுக்கெல்லாம் பசி தாஹம் முதலானவை இல்லையென்பதைத் தெரிந்து கொள்ளும். அடுத்தபடி உன் இருப்பிடம் எது? எங்கிருந்து வருக்கின்றாய்? எங்கே போகின்றாய்? என்று கேட்டீர். ஆத்மா, தேவ-மநுஷ்யாதி ஸகல சரீரங்களிலும் இருக்கத்தக்கவன். ஸகல அசேதனங்களிலும் வ்யாபிக்கத்தக்கவன். அவன் ஒன்றோடும் ஒட்டாதவன். இப்படிப்பட்ட ஆத்மாவைப் பார்த்து, எங்கிருக்கிறாய்? எங்கிருந்து வருகின்றாய்? எங்கே போகின்றாய்? என்னும் கேள்விகளைக் கேட்டால் என் சொல்வது? அக் கேள்விகளுக்குப் பொருளே இல்லை. ஆதலால் நான் போகின்றவனுமல்லன்; வருகின்றவனுமல்லன்; ஓரிடத்திலிருப்பவனுமல்லன். ஆனால் உனக்குப் போவதும் வருவதும் இருப்பதுமாகத் தோன்றுகிறதே அதற்குக்காரணம் என்னென்னில்: அந்த ஆத்மா தேஹத்தை ஆச்ரயித்திருக்கிறபடியால்தான் இப் போக்கு வரவுகளுக்குக் கர்த்தாவான இந்தத் தேஹம் நானன்று. ஆனால் 'உயர்ந்த அன்னம் கொடும்; 'அற்ப அன்னம் வேண்டாம்' என்று நான் ஏன் சொன்னேன் தெரியுமா? நான் சொன்னது ஸ்வபாவஸித்தமா? உபாதியைப்பற்றினதா? என்று உம்மைப் பரீக்ஷிப்பதற்குக் கேட்டேனேயன்றி, நான் உண்மையாய்க் கேட்கவில்லை. இதைப்பற்றியும் சிறிது சொல்லுகிறேன்.

சாப்பிடுகிறவனுக்கு 'இதுருசியுள்ளபதார்த்தம், இது ருசியில்லாதபதார்த்தம்' என்று பதார்த்தங்கள் நியதிப்பட்டிருக்கவில்லை. நல்ல பசியிருந்தால் தாழ்ந்த உணவுகளும் ருசிகரமாயிருக்கின்றன. பசியில்லாமலிருந்தால் அக்காரவடிசில் முதலிய உயர்ந்த உணவுகளும் ருசிகரமாகாமற்போகின்றன. இதனால் உமக்கு என்ன தெரிகிறது? மதுரமென்பதும் அமதுரமென்பதும் ஔபாதிகமேயல்லது ஸ்வாபாவிகமன்று எனத்தெரியவில்லையா? இப்படியிருக்க,

உணவு என் வேண்டப்படுகிறது காரணம் தெரியுமா? மண்ணாற் கட்டியவீடு மண்ணினலேயே உறுதிப்படுதல்போல, ப்ருதிவீமயமான தேஹமும் ப்ருதிவீஸம்பந்தமான பொருள்களாலேயே உறுதிப்படவேண்டுமென்பதினால்தான். யவம் முதலான தாங்யங்களும், நெய் முதலான ரஸவஸ்துக்களும், வெல்லம் முதலான பொருள்களும் ப்ருதிவீ ஸம்பந்தமான பொருள்களேயாம். ஆகையால், மதுரம்- அமதுரம், தேவன்-மநுஷ்யன் என்ற பேதங்களெல்லாம் கர்மத்தினால்வந்த விகாரங்களென்றும், ஆத்மஸ்வரூபத்தில் பேதம் கிடையாதென்றும் அறிந்து, இவைகளில் ஸமத்வபுத்தி செய்யவேண்டும். இந்த புத்திதான் மோக்ஷகாரணமாகும். என்று கூறி முடித்தார்.

நிதாகர்:-(குருவைத் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்வாமீ! தேவரீர் அநுக்ரஹித்த விஷயங்களால் அஜ்ஞாநம் நீங்கப்பெற்றேன். தேவரீர் யாரோ தெரியவில்லையே! விளங்க உரைக்க வேண்டும்.

ருபு:-உமக்கு ஆசார்யனை ருபு நான். உமக்கு இவ் விஷயங்களைப் போதிப்பதற்காகவே நான் இங்கு வந்தேன். மறுபடியும் சுருக்கமாய் ஒன்று கூறுகிறேன் மனத்திற் கொள்ளும். தேவ மநுஷ்யாதி சேதந ஸ்வரூபமெல்லாம் ஒன்றேயன்றி வேறல்ல. இவைகளில் பேதபுத்தி கொள்ளாதிர். இந்தப் பேதங்களெல்லாம் கர்மத்தினால் வந்தவைகள். இப்படி சேதநாத்மகமான ஸகல ப்ரபஞ்சமும் பரமாத்மாவுக்குத் திருமேனியாயிருக்கின்றன.

இப்படி ஆசார்யர் போதித்ததைக் கேட்டு நிதாகர் 'இனி அடியேன் அப்படியே நினைக்கின்றேன்' என்று சொல்லி, அவரை நமஸ்கரித்தார். ருபு தம்மிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

ஜடபரதர்:-(ஸவ்வீரராஜரை நோக்கி) மஹாராஜ! இந்தக் கதையினால், தேவ மநுஷ்யாதி பேதங்கள் கர்மமடியாக வந்தவைகளென்றும், ஆத்மாவில் பேதம்கிடையாதென்றும்தெரிந்து கொண்டாயா? இக்கதையை இன்னும் மேலே சொல்லுகிறேன்; கேள்.

ஓராயிரம் வர்ஷம் சென்றது. மீண்டும் ருபு, நிதாகருக்கு ஜ்ஞாநோபதேசம் செய்யும் பொருட்டு அவர் இருப்பிடத்தை அடைந்தார். அப்போது அந்நகரத்தரசன், தன் பரிவாரங்களோடு அந்நகரத்துக்கு வந்துகொண்டிருந்தான். அப்போது இந்த நிதாகர் கூட்டத்திற் சென்றால் தீட்டுப்படும்படியிருக்கும்' என்றெண்ணி, நகரத்துள் செல்லாமல் தூரத்தில் நின்றுகொண்டிருந்தார். பசியால் மெலிந்து நிற்கும் அந்த நிதாகரை ருபுமுனிவர் பார்த்து, 'ஓ ப்ராமணரே! ஏன் இங்கு நிற்கின்றீர்?' என்றார்

நிதாகர்:-ஸ்வாமீ! அரசன் நகரப்ரவேசம் செய்கிறான். நாநாவிதஜனங்களும் கூட்டமாய் அவனுடன் செல்கின்றனர். ஸமித்து தர்ப்பங்களுடன் நான் இருக்கிறபடியால் ஜனக் கூட்டங்களுக்குள் போகமுடியாமலிருக்கிறேன்.

ருபு:-அரசன் யார்? மற்றைச் சனங்கள் யார்? எனக்குத்தெரியவில்லைவிளங்க உரையும்.

நிதாகர்:-அதோ பாரும் மலைபோன்ற மத்தகஜத்தின்மேல் வருகிறவன் அரசன்; அவனைச் சூழ்ந்து செல்பவர் அவன் பரிவாரங்கள்.

ருபு:-ஐய! நீர் அரசன் என்றும் ஆனையென்றும் இரண்டு பொருள்களைச் சொன்னீர். எனக்கோ அவைகளுக்குள்ள பேதம் தெரியவில்லை. தெரியச்சொல்லும், யார் அரசன்? எது யானை?

நிதாகர்:-மேலே உட்கார்ந்திருப்பவன் அரசன்; அவனைத் தாங்கிக்கொண்டு கீழே செல்வது யானை. இவ்விரண்டிக்கும், சுமப்பதும் சுமக்கப்படுவதுமான ஸம்பந்தம் இருக்கிறது. தெரியவில்லையா?

ருபு:-மேலென்றாலென்ன? கீழென்றாலென்ன?

நிதாகர்:-மேல் கீழ் என்றால் உமக்குத் தெரியவில்லை. அவற்றை த்ருஷ்டாந்தத்தால் விளக்குகிறேன். (அப்போது நிதாகர், ருபுவின்மேல் ஏறிக்கொண்டு) கவனியும், நான் இருக்குமிடம்தான் மேல்; என்னைப்போல் மேலே இருப்பவன்தான் அரசன், நீர் இருக்குமிடம்தான் கீழ்: உர்மைப்போல் சுமந்து கொண்டிருப்பதுதான் யானை. இப்போதேனும் தெரிகிறதா?

ருபு:—சரிதான். நீ என்பதும், நானென்பதும் தெரிந்தாலன்றோ மற்றவை விளங்கும். அதுவே தெரியவில்லையே. அவைகளின் வித்யாஸத்தைச்சொல்லும்.

இப்படி ருபு சொன்னதைக் கேட்ட நிதாகர், அவர் திருவடிகளில் விழுந்து வணங்கி, 'ஸ்வாமீ! தேவரீரை அடியேனுக்கு ஆசார்யரான ருபுவென்று நினைக்கிறேன். தேவரீர் தவிர மற்றையோர்க்கு, மனம் அபேதஜ்ஞானத்தினுல் சுத்தப்பட்டிருக்கமாட்டாது. ஆதலின் தேவரீர் அடியேனுடைய ஆசார்யன்தான்' என்றார். அதற்கு ருபு, 'நான் உமது ஆசார்யனுன ருபுதான். உமது ஜ்ஞானம் த்ருடப்பட்டிருக்கிறதாவென்று பரிசோதித்தறிய உம்மிடம் வந்தேன். இப்போதும் பரமார்த்தத்தை உபதேசித்தேன்; போய் வருகிறேன்' என்று சொல்லிப்போனுர்.

ஜடபரதர்:—ஓ ரஹூகணமஹாராஜனே! விஷயம் தெரிந்ததா? சத்ருவென்றும் மித்ரனென்றும் வித்யாஸம் வைத்துக்கொள்ளாதே ஆத்மஸ்வரூபம் ஒருவிதமானதே. சுத்தமான ஆகாசம் ஒன்று உபாதிவசத்தால் கறுப்பாயும் வெளுப்பாயும் தோன்றுதல்போல, ஒரேவிதமான ஆத்மஸ்வரூபம் ஜ்ஞானிகளுக்கு ஒருவிதமாயும் அஜ்ஞானிகளுக்கு மற்றொருவிதமாகவும் தோன்றுகின்றது. உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் பகவத்ஸ்வரூபம். அவனின்றும் வேறுபட்ட பொருள் ஒன்றுமில்லை. இனிப் பேதபுத்தியை விட்டுவிடு' என்று போதித்தார். அந்த ராஜன் தெளிந்தமனமுடையவனுய் முன்னிருந்த பேதபுத்தியை விட்டுவிட்டான். அந்தப் பரதயோகியும் பூர்வஜந்ம ஸ்மரணத்தால் ஜ்ஞானயோகமடைந்து. அந்த ஜந்மத்திலேயே மோக்ஷமடைந்தார்.

பலச்ருதி:—மஹாநுபாவரான இந்தப் பரதயோகியின் சரித்ரத்தை எவன் சொல்லுகிறானே, எவன் பக்தி ச்ரத்தையோடு கேட்கின்றானே அவர்களெல்லாம் சுத்தஜ்ஞானமுடையவர்களாய் மோக்ஷஸாம்ராஜ்யம் பெறுதற்கு யோக்யராவார்கள்.

சுபம்

ஸ்ரீ:

இராமனை நரசிங்கமாகக்கண்ட அடையார்சீயம்

மங்கையர்கோன் பரகாலன் சோழநாட்டின்கண் அமைந்த துறைதுறைதோறும் பொன்மணிசிதறும் தொகுதிரைமண்ணியின் தென்பால் உள்ள திருவெள்ளியங்குடியென்னும் திவ்யக்ஷேத்திரத்திற்கு வருகிறார். வரும்போதே அத் திருப்பதியின் சுற்றுப்புறத்துள்ள வளம்பொருந்திய வயல்கள் வற்றாத நீர்நிலைகள் முதலியவைகளைக் களிப்புடனும் கனிவுடனும் நோக்கி வருகிறார் அடையார் சீயம் என்று பெயர்பெற்ற கலியன். ஊரினுள் புகுந்ததும் ஊரின் சிறந்த அமைப்பையும் ஊரிலுள்ளாரது பெருமைகளையும், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றையும் பரக்கக்கண்டானந்தித்துக்கொண்டு அங்கு திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களாசாஸனம்செய்ய மாளாதகாதல்கொண்டு
ரவுடன் கோயிலுக்குள்ளே எழுந்தருளிய கலிகன்றி அவ்வெம்பெருமானைக் காண்கிறார் அர்ச்சாமூர்த்தியாகவிருக்கும் பெருமானை ஊனக்கண்கொண்டு பார்த்துவிட்டு இதரவேலைகளையும் அல்பப்ரயோஜனங்களையும் நினைத்துக்கொண்டு வெளியே ஓடிவரும் ப்ராணிகள் போன்றவரோ நம் அருள்மாரி? திருமங்கை மணாளனிடமிருந்து மந்திரமந்திரார்த்தங்களை நேரில் பெற்ற பெருந்தகையல்லவா அவர்? மாதவனால் மயர்வறமதிநலமருளப்பெற்றவரல்லவா அவர்? பந்தங்களையறுத்துப் பாவங்களையெரித்துப் பரமபதத்தைப் பக்தர்களுக்குப் பாக்கியத்தால் கிடைக்கச்செய்யும் பரமஹஸ்யார்த்தங்களைப் பண்டமிழ்ப் பாக்கள் மூலமாகப் பாரெல்லாம் அறிந்து பரமனடி பணிந்து பகலவன் மண்டலத்தின் வழியாக பரமபதம் செல்ல வருள்புரிந்த பரமோபகாரியாகியவருள்மாரியல்லவா நம் மங்கையர்கோன்?

மேலும், அப்படிப்பட்ட கலியன் 'நம் கண்களால் காணவருங்கொல்' என்று ஆசையால் மண்கொண்ட வாமனன் மகிழ்ந்து காத்திருப்பானே! அண்ணல் ஆலிநாட்டுவள்ளல் வாட்கலியன் தன் திருக்கோயிலில் எழுந்தருளினால் தான் முன்னே பாரித்து அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து தனது விபவங்கள் அனைத்தையும் காட்டிக்கலந்துறவாடுவானல்லவா? அப்படியருள்புரியாவிடில் அவன் அகிலலோக ரக்ஷகனாவனோ? அப்படியவன் வாளாவிருந்துவிடினும் 'வாழ்ந்தேபோம் நீரே வாசிவல்லீர்' என்று வளங்கொண்ட தமிழ்வாயால் வசைபாடிவிட்டு வீறுகொண்டுசெல்லும் வாட்டமிலாத வாள்வேலேந்தும் மங்கையர்கோனல்லவா அவர்! ஆதலினால் அத் திருவெள்ளியங்குடியில் கோயில்கொண்ட கோலவில்லிராமன் கொற்றவேலனைக் கண்குளிரக் கடாக்ஷித்தது மன்றி அவ்வர்ச்சாவதாரத்தில் தமர்களால் தமக்கிடப்பட்ட பெயருக்குரிய ராமாவதாரமேயன்றித் தனது பரவ்யூஹவிபவாவதாரங்கள் அனைத்தையும் காட்டிக்காட்டியுகந்தார். கண்டார் கலியன். கண்டு உகந்தார். உகந்து தொண்டே நின்றார். காலம் போவது தெரியவில்லை. உள்ளமுருகிக் கண்கள் நீர்பனிப்ப நிற்கும் ஆழ்வார் தாம் கோயிலுக்குள் வரும்போது பகற்போது என்றும், தற்போது இரவு வந்தது என்றும் எங்ஙனேயறிவார்? சிந்தை, கண், வாய் முதலியன தம் வசத்திலிருந்தாலல்லவா மேலும் காலமுதலியவைகளின் பரிணாமபேதமில்லாத நித்யவிபூதியில் தனிக்கோல்செல்லவீற்றிருக்கும் வைகுண்டநாதனே அர்ச்சாவதாரமாகக் கோயில்கொண்டெழுந்தருளியிருப்பதனாலும், அவ்விடத்தில் அழிவில்லா அளவில்லாவாநந்தத்தையநுபவிக்கும் ஸூரிகளில் ஒருவரே பகவதம்சத்துடன் கலந்து, கலியனாகவவதரித்து ஆங்கே எழுந்தருளியிருப்பதனாலும் அவ்விடத்தில்—இவ்விருவர்களைப் பொறுத்தவரையிலாவது—காலபரிணாமம்ஏற்படவில்லையென்றேதான் கொள்ளவேண்டும். ஆசையால் கலியன் ப்ரக்ருதியையும் காலத்தையும் மறந்து பகவதநுபவம் பண்ணிக்கொண்டேயிருக்கிறார். அப்படியே பண்ணிக்கொண்டேயிருக்கலாம். ஆனால், கோயிலைக்காத்துக் கவனித்து வேண்டுவன செய்யும் கோயிலதிகாரிகள் இராத்திரி ஆராதநம் முடிந்தபிறகு திருக்காப்புச் சேர்த்துக் கதவுகளைப் பூட்டிக்கொண்டுவரவேண்டியவர்களல்லவா? இரவில் காவல்வேலையில்லாதவர்களை அவர்கள் கோயிலுக்குள்ளே அதுவும் பகவானுக்கு அருகில் இருக்க அநுமதிப்பார்களோ? அநுமதிக்க மனம் இடங்கொடுக்காதல்லவா? ஆகையினால் அவர்கள் இரவுநேரம் ஆகிவிட்டதை விஜ்ஞாபித்துக் கலியனை வெளியில் எழுந்தருளும்படி செய்கிறார்கள். அப்போதுதான் அவர்கள் உணர்த்தியபடியினால், ப்ரக்ருதிமண்டலத்தில்தாம் இருப்பதையுணர்ந்த ஆழ்வார், கோயிற்காரியங்களுக்கு இடையூறாக விருக்க விரும்பாது வெளியேவருகிறார். வீதிக்கெழுந்தருளிய திருமங்கையாழ்வார் ஓர் ஸந்தேஹம்கொள்ளுகிறார். 'இரவுநேரம் வந்ததாக அறிவித்தனரே. அங்கே ஆலயத்துக்குள் இருந்தபோது பகற்போது மாறி இரவு வந்ததாகத் தெரியவில்லை. ஆழியங்கையம்மானுடைய பெருமையினால் அவ்வண்ணம் இருக்கலாம் என்று நமக்குத் தோன்றிற்று. இங்கு வெளியில் வந்தபிறகும் பொழுதின்மாறு தெரியவில்லையே' என்று சங்கித்த ஆழ்வார் கதிரவன் மறைந்துவிட்டதையறிந்து இரவு வந்துவிட்டதுதான் எனத்தெளிகிறார். ஆனால் பகலில் இவ்வீதிகளில் இருந்த வெளிச்சத்திற்கு இப்போது வெளிச்சம் குறைந்தில்லையே அது எப்படி? என்று சங்கித்த ஆழ்வார் வீதியின் இருபுறமும் அமைந்த படிகளையும் அழகான மேல்தளங்களையும் உடைய பெரியபெரிய மாடங்களையும் மாளிகைகளையும் தற்செயலாக நோக்குகிறார். சங்கை சடுதியில் விலகுகிறது. 'அம்மாடமாளிகைகளைத் தாங்குகிற தூண்களில் பதித்த விலையில்லாத பலபல ரத்னங்களின் காந்தியினாலேயே இப்படி இவ்விரவுநேரம் பகலுக்குச் சிறிதும் வாசியில்லாது இருக்கிறது!' என்று தெளிகிறார். மேலும் தாம் கோயிலுக்குச் சென்ற பகற்பொழுதில் சில மாடங்களில் ஒரேயிருள்சூழ்ந்திருந்ததை நினைவுபடுத்திக்கொண்டு. அவைகள் அவ்வண்ணம் பகலிலேயே இருள்பொதிந்ததுபோல் இருந்ததற்கு அம்மாடங்களின் தூண்களில் பதிக்கப்பட்ட நீலமணிகளும் மாகதமணிகளுமே காரணம்போலும்' என்றும் நினைக்

கிறார். சற்றுமுன் திருமாலின் விபவங்களை கண்ணாரக் கண்ட கலியனுக்கு இன்னும் அவ்வநுபவங்கள் மனக்கண்முன்னே நிற்பதால் இத்தூண்களைப் பார்த்ததும் ஓர் அதிசய மனோபாவம் உண்டாகிறது. பகலைப்பகலல்லாமலும் இரவை இரவல்லாமலும் செய்யவல்லவைகளாய் எப்போதும் ஒளியை எங்கும்வீசும் நவரத்னங்கள் இழைக்கப்பட்ட தூண்கள், பகலுமல்லாத இரவுமல்லாத—ஆனால் பகலும் இரவும் சேர்ந்த-ஓர் காலத்தில் தனது திருமேனியின் ஒப்பற்ற தேஜஸினாலும், திருமேனியில்பூண்ட பூஷணங்கள் ஆயுதங்கள் முதலியவைகளின் அபரிமிதமான காந்தியினாலும் உலகம் முழுமையும் ஜோதிமயமாகச் செய்துகொண்டு ஒரு காலத்தில் தூணிலிருந்து வெளியே எழுந்தருளிய சிங்கப்பிரானை நினைவுபடுத்துவன. மேலுலகத்தின்கண்ணுள்ள தேவர்கள் தம் நிலையினின்று தாழ்ந்துவீழ்ந்துவிடாமல் அவர்களைக் காப்பாற்றிய நரசிங்கத்தைப்போல் இத்தூண்களும் மேல்மேல் மாடங்களைக் கீழே வீழ்ந்துவிடாமல் தாங்கிக்கொண்டிருப்பன. அப்போது அத் தூண்களோடு அம்மாளிகைகளின் வாயிற்படிகளும் ஆழ்வார் கண்களில் படுகின்றனபோலும். ஏனெனில்:— தூணிலிருந்து வெளிவந்த சிங்கம் ஹிரண்யனை மடியில் போட்டுக்கொண்டு அவன் மார்பகம் பிளப்பதையும் அகக்கண்களில் காண்கிறார் கலியன். தனது க்ருபைக்குப் பாத்திரர்களும், பெருமைபொருந்தியவர்களும் மணிமுடி தரித்தவர்களுமாகிய அமரர்களுக்கு இடர்செய்வதையே தொழிலாகவுடையவனல்லவா அவ்வசுரன்? தேவர்களுக்குள் சிறந்தவர்களுக்கு இடர்செய்வதைத் தமது கடமையாகக் கருதிய அசுரர்களுக்குரிய பெரிய தலைவனல்லவா அவன்? நல்லோர்க்கு இடர் செய்வதில் மிக ஸமர்த்தனும் அதில் முடிசூடியவனுமல்லவா அவன்? அவனைக்கொல்லவேண்டியது தான். ஆனால்எம்பிரான் ஓர் அஸாதாரணமான சிங்கமாகவந்து, தன் தாயின்மடியில் அடங்கிக்கிடக்கும் ஓர் பாலகனைப்போல் அம்மஹாகொடிய அசுரனையும் தம் மடியில் வைத்தருளிய பெருமைதான் என்னே! அமரர்க்கு அவன் எதிரியாகவிருப்பினும், அண்டமனைத்தினுக்கும் அவைதின்கண் அடங்கிய யாவற்றினுக்கும் தானே தாயும் தந்தையுமான தாமோதரனுக்கு ஹிரண்யனும் குழந்தைதானே. அதனால் அவனை மடியில் வைத்துக்கொள்வதும் இயல்புதானே. ஆனால் தனக்கு அவ்வளவு அடங்கியொடுங்கிக் கிடப்பவனை ஏன் மார்பைப் பிளக்கவேண்டும்? அவன் உயிரோடிருப்பதினால் இன்னும் பாபச்சுமையைச் சேர்த்துக்கொள்ளாமல் அவனிடங்கொண்ட கருணையினால் அவனை முடித்தான். தனது ஸர்வவ்யாபித்வமும், ஸர்வஜ்ஞத்வமும், ஸர்வசக்தத்வமும், பரத்வமும் செவ்வையாக உலகுக்குத் தெரியக்காரணமாக இருந்தவனைகையினால் தனது திருக்கைகளின் ஸ்பர்சம்பட்டே யிறக்கும் பாக்கியத்தையும் ஹிரண்யனுக்கு அருளினான், என்று நினைந்துநினைந்து களித்துருகும் கலியன் ஹிரண்யன்பெற்ற வரங்கள் பழுதுபடாமலும், வரங்கொடுத்தவன் வாக்கும் அஸத்தியமாகாமலும், தனி உருவமும், தனிக்காலமும், தனியிடமும், தனியாயுதங்களையுங்கொண்டு அத்துடனே ஸர்வவ்யாபியாகவுமிருந்து வெளிப்பட்டு ஒரே ஸமயத்தில் ஹிரண்யனை யனல்கண்கொண்டும், ப்ரஹ்லாதாழ்வானை அருட்கண்கொண்டும் நோக்கிய பரமபுருஷனுடைய அகடிதகடனாஸாமர்த்யத்தையும் காண்பித்துக்கொண்டிருந்த அத்யாச்சர்ய சக்திகளை வியந்து உருகி ‘மாயன்’ என்கிறார். பகலும் இரவும் அல்லாதகாலத்தில் அவதரித்துப் பரிதியாயிரம்உதித்ததுபோன்ற ஒளியை எங்கும் வீசிய பரஞ்சோதி கோயில்கொண்டிருக்கும் இவ்வூரில் பகலுக்கும் இரவுக்கும் வாசி தெரியாததும் இயல்புதானே. என நினைக்கிறார் நீலன். தமக்கேற்பட்ட அத்யாச்சர்ய அநுபவத்தைத் தாமொருவரே ஏகாந்தமாக அநுபவிப்பவரல்லவே அருள்மாரி? ஆதலால் அந்த அநுபவம் உள்ளடங்காமல் நமது தவப்பயனேயென்ன வெளிப்படுகிறது ஓர் பாசுரமாக. அப் பாசுரம் பின்வருமாறு—

முடியுடையமரர்க் கிடர்செய்யு மசுரர்தம் பெரு
மானையன்றரியாய்
மடியிடைவைத்து மார்வம்முன்கீண்டமாயனார்
மன்னியகோயில்
படியுடைமாடத் தடியிடைத்தூணில் பதித்த
பன்மணிகளினொலியால்

விடிபகலிரவென்றறிவரிதாய திருவெள்ளியங்
குடியதுவே

குறிப்பு:—முடியுடையமரர், முடியுடையசுரர், முடியுடையசுரர்தம் பெருமான்

கலியனது பாசுரங்கள் கற்பகாலங்கள்தேடினாலும் நவமணிகள் கொழித்துக்கொழித்துக் காணக்காணப் புதுமையாகத் தோன்றுங்கனிகளாயிருப்பன.

வாழ்க கலியன் வாழ்க வாட்கலியனுரைகள்

ஸ்ரீ:

ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்

முதலாழ்வார்கள்

புரட்டாசி மாதத்தில் திருவவதரித்த மஹநீயர்களைப்பற்றி எழுதினோம். இப்போது ஐப்பசி மாதத்தில் அவதரித்தவர்களைப்பற்றிச் சற்று சுருக்கமாக விளம்புவோம்.

பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள் தருமாயன் மலிந்துவருத்துதலால்
நாட்டுக்கிருள் செக நான்மறையந்தி நடைவிளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டுமிம் மெய்விளக்கே.

‘ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேச்வரன் பராங்குசபரகாலாதிரூபத்தாலே அபிநவமாகவொரு தசாவதாரம்பண்ணி மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராகவுமிழுமாப்போலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக்காட்டினான்’ என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்தி. அப்படிப்பட்ட அபிநவமான தசாவதாரத்தில் முதலாவதாக எண்ணப்படுமவர்கள் முதலாழ்வார்கள். இவர்கள் மூலமாய்த்தான் த்ரமிடவேதமானது முதன்முதலாவதாக ப்ரவர்த்திக்கப்பட்டது. ஸர்வேச்வரன் தானே இந்த தசாவதாரத்தைப் பண்ணினான் என்பதற்குத் தன் ஜந்ம நக்ஷத்ரமாகிய ச்ரவணநக்ஷத்திரத்தில் முதலாழ்வார்கள் மூவரில் முதல்வராகிய பொய்கையாழ்வாரை அவதரிப்பித்ததே போதுமான சான்று. இவர்களை இன்கவிபாடும் பரமகவிகளென்று நம்மாழ்வாரும் ‘செந்தமிழ்பாடுவார்’ என்று கலியனும் கொண்டாடியுள்ளார்கள். நம் தூப்புல்பிள்ளையும் பாட்டுக்குரிய மூவர் என்றும் ‘கவீந்த்ராஃ’ என்றும் பேசியுள்ளார். இவர்கள் மூவரும் ஓர் விசிஷ்டமாகவே எங்கும் எழுந்தருளியிருந்து தங்கள் ஸித்தாந்தம் ஓர் விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் என்று லோகத்துக்கு ப்ரத்யக்ஷமாகக் காண்பிக்கிறார்கள் என்று சொல்லலாம். இம்மூவரும் ஒன்று சேர்ந்தன்றோ முத்திக்கருள்கூட மூன்றில் ப்ரதானமாயுள்ள ஒன்றை முதன்முதலாகக் கண்டு அறிவித்தார்கள் உலகத்தாருக்கு. இவர்கள் திருவுடன் பொலியும் எம்பெருமானின் பொன்மேனியைக் கண்ட ரீதியானது மிகவும் ஆச்சர்யமானது.

ஒரு ஸமயம் தனித்தனியாக ஸஞ்சரித்துக் கொண்டிருந்த இவ்வாழ்வார்கள் திருக்கோவலூர் என்னும் திவ்யதேசத்தில் அல்பமான ஒரு இடைகழியில் ஒன்றுசேர்ந்து உட்காரவுமிடம் போராமல் நின்றுகொண்டிருக்கும் போது ஆயனார் இவர்கள் திருமேனிஸம்பந்தத்தைப் பெற ஆசைப்பட்டு அந்த இடைகழியில் பிராட்டியும் தானுமாகப் ப்ரவேசித்து இவர்களை நெருக்கிக்கொண்டிருக்க அந்த இருட்டில் ஒருவரையும் காணாமல் இவர்களில் இருவர் அதிவிலக்ஷணமான விளக்குகளை ஏற்றி புறவிருளென்ன, அகவிருளென்ன, இவ்விரண்டு இருளையும் மாய்த்தபின் மற்றொருவர் மாமலராள்தன்னுடன் துலங்கும் ஆயனை ஸாக்ஷாத்கரித்தார். இந்த பக்தஸம்மர்த்தநம்

ஏற்பட்ட ராத்ரியானது ஸர்வேச்வரனுக்கு ஓர் விலக்ஷணராத்ரியாய் ராஸக்ரீடையில் கண்ணனுக்கு கோபிகைகளுடைய ஸம்மர்த்தநத்தாலுண்டான ஆநந்தாநுபவத்தைக் கொடுத்த ராத்ரிபோலேயிருந்தது. முன்னே கரும்பு போல் இருந்த எம்பெருமான் இப்போது இவ்வாழ்வாராகிற யந்த்ரத்தினால் பிழியப்பட்டு ஓர் நூதனமான சர்க்கரையாக மாறி எல்லோராலும் அநுபவிக்கத்தக்கதாக ஆனான். இந்த அழகை—

'காஸாரபூர்வகவிமுக்யவிமர்தஜந்மா-
பண்ணாதடீக்ஷிதரஸோத்தரபாவபந்தம் ।
ஸூத்ருநவசைவயோநி க்ஷநாக்ய
ஹேம்ந நபரம் ஸம்ஶ்ரயதி நவிதந
மக்ஷதாக ॥'

என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் தேஹளீசஸ்துதியில் அநுபவிக்கிறார்.

இப்படி விலக்ஷணமாயுள்ள முதலாழ்வார்களில் முதல்வராயுள்ள பொய்கையாழ்வார் திருக்கச்சியில் வெஃகாவெம்பெருமான் கோயில்கொண்டிருக்குமிடத்திற்கு அருகேயுள்ள திருப்பொய்கையில் அயோநிஜராய் ஓர் ஐப்பசித்திருவோணத்தில் அருளே ஓர் வடிவாய் அவதரித்ததென்னலாம்படி திருவவதரித்தார். இவர் அருளிய திவ்யப்ரபந்தம் முதல் திருவந்தாதி எனப்படும். நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் முதல் ப்ரபந்தமாகுமிது. இது நூறு பாக்கள் கொண்டது. அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளது. அவதார ஸ்தலத்தில் கோயில்கொண்டிருக்கும் அர்ச்சாரூப திருமேனி ரொம்பவும் அநுபவிக்கத்தக்கது. திருவவதார உற்சவமும் வெகு அழகாக நடைபெறுகிறது.

இவர்களில் இரண்டாமவரான பூதத்தாழ்வார் திருக்கடன்மல்லையிலேகுருக்கத்திப்பூவின் நடுவே அயோநிஜராய் ஓர் ஐப்பசி மாதத்து அவிட்டநாளில் திருவவதரித்தார். இவர் அருளிய திவ்யப்ரபந்தம் இரண்டாம் திருவந்தாதி எனப்படும். 'அன்பே தகளியா' என்று தொடங்கி நூறு பாசுரங்களாலாகியது. இதுவும் அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது.

இவர்களில் மூன்றாமவரான பேயாழ்வார் திருமயிலையில் ஆதிகேசவப்பெருமாள் ஸந்நிதிக்கருகாமையிலுள்ள ஓர் கிணற்றில் அயோநிஜராய் ஓர் ஐப்பசிசதயத்தில் அவதரித்தருளினார். முதலிரண்டாழ்வார்களும் ஓர் விலக்ஷணமான தீபத்தை ஏற்றி அந்தகாரமெல்லாவற்றையும் போக்கினவுடனே இவர் அந்த வெளிச்சத்தில் நெடுமாலைக் காணப்புகுந்தவுடன் முதலில் திருவைக்கண்டார். 'துன்னியபேரிருள் நீங்கச் சோதிதோன்றச் சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத் திருக்கண்டேன் என வுரைத்த தேவே' என்றாரிறே தூப்புல் பிள்ளையும். இவர் அருளிய திவ்யப்ரபந்தம் திருக்கண்டேன் என்று தொடங்கி நூறு பாசுரங்களாலாகியது. மூன்றாம் திருவந்தாதி எனப் பெயர் பூண்டது.

பொய்கையாழ்வார் எம்பெருமானின்விபூதிகளைப் பேசினார். பூதத்தாழ்வார் அவ்விபூதிகளை நியமிக்குமவன் நாராயணன் என்றார். பேயாழ்வார் அந்நாராயணன் ஸ்ரீவிசிஷ்டன் என்று கண்டு பேசினார். பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் க்ரமேண இவ்வாழ்வார்களின் ப்ரபந்தங்களில் ஒவ்வொன்றில் ஒவ்வொன்று தலையோங்கி நிற்குமென்று நிர்வஹிப்பாருமுண்டு. இப்படி நம்மைப்பலகாலம் வருத்தும் நம்முடைய புறவிருளையும் ஹ்ருதயத்திலுள்ள எம்பெருமானைக் காணவொட்டாது தடுக்கும் இதயத்திருளையும்போக்கி கோவலுள் மாமலராள்தன்னொடு மாயனைக்காண பேருபகாரம் செய்த தமிழ்த்தலைவர்கள் இவர்கள் மூவரும். இவர்கள் திறத்து நாம் தலைமுறை தலைமுறைக்கும் தாஸ்யத்தைப் ப்ரார்த்திப்பதுதான் நமக்கு ஸ்வரூபம்.

விஷ்வக்ஸேநர்

நம்முடைய ஆசார்ய பரம்பரையில் திவ்ய தம்பதிகளுக்கு அடுத்தபடியாகவுள்ள விஷ்வக்ஸேநரின் திருநக்ஷத்ரம் ஓர் ஐப்பசிமாதம் பூராடம். இவர் பெரியபிராட்டியாரின் சிஷ்யர். இவர் நம்மாழ்வாருக்கு யோகதசையில் மந்த்ரமந்த்ரார்த்தங்களை உபதேசித்து அவருக்கு ஆசார்யரானார்.

வந்தே வைகுண்டஸேநாந்யம் தேவம்

ஸூத்ரவதீ ஸவழ | யசெதருமிவார
ஷநெ விஶ்வஜெதத்ருவஷ்டிதழ ||

திருக்குருகைப்பிரான்பிள்ளான்

மேலும் இம்மாதத்தில் திருவவதரித்தவர் திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்னும் ஆசார்யன். இவர் ஓர் ஐப்பசி பூராடத்தில் பெரியதிருமலைநம்பிக்கு குமாரராய் திருவவதரித்தார். இவருக்குநம்பிகளும் பிள்ளான் என்று திருநாமமிட்டுவளர்த்துவந்து ஸ்ரீபாஷ்யகாரர் திருவடிகளில்ஆச்ரயிக்கும்படி செய்தார். இவரும் எம்பெருமானார் திருவடிகளில் ஸகலார்த்தங்களையும் க்ரஹித்து அதிமேதாவியாய் எம்பெருமானாரின் விசேஷகடாக்ஷத்துக்குப் பாத்ரராயிருந்தார்.

ஒருநாள் எம்பெருமானார் திவ்யப்ரபந்தார்த்தங்களை மனனம் பண்ணிக்கொண்டு மடத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கும்போது பிள்ளான் வாசல் திறவுகோல் வழியாக உள்ளே பார்த்தார். ஸ்ரீபாஷ்யகாரர் அப்போது அபிநயக்ரமமாக உலாவியிருந்தபடி. அப்போது பிள்ளான் 'திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்ன' என்கிற திருவாய்மொழி அர்த்தாநுஸந்தானமோ என்று கேட்க, எம்பெருமானாரும் திகைத்து, 'நம்பிள்ளானோ' என்ன அவரும் அடியேன் என்றாராம். எம்பெருமானர் உடனே வாசலைத்திறந்து பிள்ளானை வாரி எடுத்து உச்சிமோந்து ஸ்ரீவைஷ்ணவப் பெருந்திரளில் பிள்ளானை ஓர் ஜ்ஞாநபுத்திரனாக ஸ்வீகரித்தருளி அவருக்கு 'திருக்குருகைப்பிரான் பிள்ளான்' என்றுஆழ்வாருடைய திருநாமத்தையும் கூட ஸாதித்தருளி போர உகந்தருளினர். பிறகு எம்பெருமானர் பிள்ளானை அழைத்து திருவாய்மொழிக்கு வ்யாக்யாநமிட்டருளும்படி நியமிக்க அப்படியே பிள்ளானும் திருவாய்மொழிக்கு 'ஆறுயிரப்படி' என்கிற ஓர் அழகிய வ்யாக்யாநமிட்டருளினர். ஆறுயிரப்படி வ்யாக்யாநம் சுருக்கமாயிருந்தாலும் மூலத்தின் பாவத்தை விடாது வெகு கம்பீரமான பங்க்திகளாலாகியது. பங்க்திகளை ஸேவிக்கும்போதே ஒரு தனி அநுபவம் ஏற்படும். ஸ்ரீபாஷ்யகாரரும் இந்த வ்யாக்யாநத்தைக் கடாக்ஷித்தருளி 'பகவத்விஷயம்' என்று திருநாமம் சாத்தி தம்முடைய ஸூத்ரபாஷ்யத்தைப்போலேஇதையும் காலக்ஷேபக்ரந்தமாக ஆக்கினர். ஸ்ரீபாஷ்யகாரரின் அநுக்ரஹவிசேஷத்தால் தமக்கு திருவாய்மொழியினர்த்தவிசேஷங்கள் ப்ரகாசித்தன என்பதற்கறிகுறியாக ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமாக தனியன்களையும் பிள்ளான் செய்தபடி.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்

199539

மேலும்:—

சுஷ்யதஸ்ஸந்நிநம் காவிக்ருஷ்ணௌவம் த்விஜஸ்ஸ-
ஹநு | உதந்யா நவெஶஹதெ'ஶநதம் வ
வீக்ஷதெ ||

இவர் அநுஷ்டிப்பது சாதகவ்ரதம். நீருண்ட கருத்தமேகத்தையல்லால் தன் தாஹத்தைத் தீர்க்க மற்றொன்றையும் தேடாது. கண்ணெடுத்துப்பார்க்காது. தடாகத்தையாவது ஸமுத்ரத்தையாவது அபேக்ஷியாது. கார்மேகம் பெய்த வான்ஜலத்தை நினைத்துக்கொண்டு அந்த மேகத்தின் தோன்றுதலையே பார்த்துக்கொண்டு காத்திருக்கும். அது 'த்விஜ:' பக்ஷி. முதலில் முட்டையில் உயிருடன்பிறந்து முட்டையிலிருந்து வெளிப்படுகையில் இரண்டாந்தரம் பிறக்கிறது. ப்ரஹ்மவித்யையையுடையவனும் வித்யையால் ஓர் புதுப்பிறப்புப் பெறுகிறவன். திரும்பவும் பிறப்பிறப்புக்களை யறுக்கும் பிறப்பு. இவனும் ஓர் க்ருஷ்ணமேகத்தைத்தான் தன்னுடைய, மோக்ஷாம்ருதத்தைப்பருகும் தாஹ ஆசையைத் தீர்ப்பதற்காக அபேக்ஷித்திருப்ப

வன். இந்த க்ருஷ்ணமேகம் அம்ருதத்வ மெனும் மோக்ஷப்பேறை வர்ஷிக்கும். 'காலே காலே வஹதி கருணா வாஹிநீ: க்ருஷ்ண மேக:' என்று வர்ணித்த பேரருளாளக்ருஷ்ண மேகநினைவின் தொடர்ச்சி. இவன் தாபம் தீருவது இந்த க்ருஷ்ணமேகத்தால்தான். மற்ற ஸ்வர்க்கப்ரஹ்மலோகாதிகளையாவது தெய்வங்களையாவது நோக்கமாட்டான். மேகம் இத்துப்போய் நீராகப் பூமியில் வந்துசேரும். மேகஸ்வரூபத்தோடேயே பூமியிலிறங்காது. க்ருஷ்ணமேகம் மேகஸ்வரூபத்தோடேயே அவ்யயராய் பூமியிலிறங்கி அந்த மேகஸ்வரூபத்தோடேயே 'காணவாராய்' என்று காக்ஷி தாஹத்தால் வருந்துபவருக்கு ஸேவைதரும். ரஸஸ்வரூபரான அவரைக் காணவே இவர்கள் தாஹம் சாந்தமாகும். கண்ணால் காண்பதே இவர்கள் தாஹசமநம். 'லோசநாப்யாம் பிப-ந்நிவ' 'வநதேவாஸ்ததம் த்ருஷ்டா த்ருப்யந்தி'.

தேவரீர் உடனே இவருடைய புண்யபாபங்களாகிய இருவிதவிலங்குகளும் தெரிக்கும்படி செய்யவேணும். நானும் இதோ காலே அபிகமநவிதியைச்செய்து அஹிம்ஸை இந்த்ரிய நிக்ரஹம் ஸர்வபூதங்களிடமும் தயை, பூர்ண க்ஷமை, ஜ்ஞாநம், தபஸ், த்யாநம், ஸத்யம் ஆகிய எட்டுவித புஷ்பங்களையும் சேகரித்து, உம்முடைய ப்ரபாவத்தால் முன்வினைகள் விலகி பின்பும் அறியாமல் செய்யும் வினைகள் ஒட்டாமலும் மற்றொரு தெய்வத்தையும் தொழாமலும், மோக்ஷம் சீக்ரம் வருகிறதென் கிற நிச்சயத்தால் அளவிலாவின்பமநுபவித்துக்கொண்டிருக்கும் புருஷனை லாலநம்செய்ய உம்மையே நோக்கிக்கொண்டிருக்கும் விவேக ராஜரோடுகூட வருகிறேன். (என்று சொல்லு கிறாள்.)

ஸங்கல்பர் —(சுற்றிலும் பார்த்து)
இதோ தன் எல்லையற்றமஹிமையை உள்ளேயே அடக்கி ஒளித்துக்கொண்டு ப்ரகாசப் படுத்தாமல் வேதாந்தங்கள்புகழும் 'குழந்தைத் தன்மை' என்கிற 'பால்ய'ஸம்பத்தோடும், சாந்தியும் மாதுர்யமும் நிரம்பிய கம்பீர ஆக்ருதியோடு, பரப்ரஹ்மத்தில் மனது லயிக்கும் ஸமாதிதசையாரம்பத்தில் தொடங்கும் பேரானந்தத்தையநுபவித்துக்கொண்டு உடல் முழுவதும் மயிர்க்கூச்சலெடுத்திருப்பதால் புஷ்பகாலத்தில் கதம்பவ்ருக்ஷம் நிரம்ப புஷ்ப மொக்குவிட்டிருப்பதுபோலும் தாமரைத் தண்டைப்போலவும் ஆநந்தபரவசராய், தர்சந மாத்ரத்தால் மஹாபுண்யபாக்டம் தருபவராய். காண்கிறார். இது ஆச்சர்யம், மஹாச்சர்யம்

ச்ருங்காரவீரகருணாத்புதஹாஸ்ய [illegible] வீபத்ஸரௌத்ரவிஷயாந் [illegible] | தத்வா [illegible] ஸாந்த [illegible] ||

சாந்திரஸவடிவாகவே அந்தரஸமே மூர்த்தி கரித்ததுபோல பரபக்தியெனும் ஸமாதி தசையாரம்பத்தில் இப் புருஷன் மூர்த்தி காணப்படுகிறது. முன் பக்தியோகமெனும் ஸாதநத்தை ஸாதிப்பதற்காக முயன்றுகொண்டிருந்ததசையில் 'ஜாக்ரத்ஸ்வப்ந ஸுஷுப்தி' என்கிற 9-வது அங்க ச்லோகத்தில் மற்ற எட்டு ரஸங்களும் இந்த சாந்திரஸத்தை ஸாதிப்பதற்கு அநுகூலமாக உதவிசெய்து போஷணம் செய்தனவென்று கூறப்பட்டது. இப்பொழுது அந்த அங்க ரஸங்களெல்லாம் தாண்டப்பட்டு அங்கியான சாந்திரஸமே ஸம்பூர்ணமாய் ஸாக்ஷாத்தாய் அநுபவத்திற்கு வந்துவிட்டதென்று கூறப்படுகிறது. அந்த ச்லோகத்தில் ச்ருங்காரம், ராகப்ரேமை எனும் ரஸம், 'ஸ்ப்ருஹணீயரதிம்' என்று கடைசியில் வைக்கப்பட்டது. 'பீபத்ஸம்' என்கிற வெறுப்பு 'நிர்வேதரஸம்' முதலில் வைக்கப் பட்டது. அதனுசிதத்தை அங்கே காட்டியுள்ளது. ப்ரஹ்மத்தினிடம் 'ப்ரியம்' இன்பம்' எனும் ச்ருங்காரமும் முற்றி, தனித்துத் தன் நினைப்பும் மங்கி முழுதும் சாந்திரஸம் ருத்தமான, ஒருயிரநுபவஸாரமான தானுள்பட ஸர்வமும் ப்ரஹ்மமயமாயநுபவத்திற்கு வரும் சாந்திரஸம் கைகூடுகிறது. 'ஸர்வபூதஸ்தம் ஆத்மாநம் ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சந:' என்று பகவான் பாடியபடி ஸர்வபூத ஸௌஹார்த்தம் நிரம்பிய ப்ரஹ்மத்தினுவே சத்தால்வரும் பூர்ண சமரஸம். 'ரஸோ வை ஸ:' என்றது ச்ருதி ஆநந்தமயப்ரஹ்மத்தை. (தொடரும்)

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

தாய்தந்தையர்களுக்கு உதவி செய்வோமென்று எண்ணி இப் பெண்கள் ஒரு அல்ப காரியம் செய்ய ஆரம்பித்தாலும் உடனே அவர்கள் அதை ஸஹியாது 'குழந்தாய் வெறுமனே இரு. உனக்கு கை நோகும். கால் வலிக்கும். எங்களுக்கு என்ன வேலை? நாங்கள் செய்துகொள்கிறோம். நீ விளையாடு. இதோ பெருமாள் விக்ரஹம் இருக்கு, பார்,' என்பார்கள். இவ்வளவு செல்வமாக வளர்க்கப் பட்டவர்கள் இக் கந்யகைகள். இவ்வளவு அருமையாகத் தம்மைப் போஷிக்கும் பெற்றோர்களுக்குத் தாம் செய்யும் ப்ரதிபலன் என்ன என்பதைத் தனது தோழிகள் எல்லோரும் அறியவேண்டுமென்று இந்த நாயகப் பெண் கருதினாள். தாம் எந்தக் குலத்தில் உண்டானார்களோ அந்தக் குலத்திற்குப் புகழ் உண்டாகும்படி நடந்துகொள்ளவேண்டியது எல்லோருடையவும் கடமை. செய்யக் கூடாதவற்றைச் செய்யாமலிருப்பதும் செய்யவேண்டியவற்றைத் தவறாது செய்வதுமே அவ்வித நடத்தையாகும். ஒரு குடியிற் பிறந்தவர்களின் நடத்தை இவ்விதமாக மிக ஒழுங்காய் இருக்குமாயின் 'இவரைப்பெற்றவர்கள் என்ன புண்யம் செய்தார்களோ. எவ்வளவு பாக்யமிருந்தால் இப்படிக் குழந்தைகள் பிறக்கு' மென்று ஆச்சரியப்பட்டுப் பரவசராய் உலகத்திலுள்ளோர் பேசுவார்கள். இதுவே குலத்திற்குப் புகழ். இதை உண்டாக்கும் மக்களே மக்கள். ஆகவே இப்படிப் பாரோர் புகழும்படி ச்ரத்தையோடும் ப்ரீதியோடும் நீராடவரவிரும்பும் சிறுமிகள் எல்லோரும் வாருங்களென்று கூப்பிட்டாள். 'பெண்களாவது பெண்கள். என்ன அழகு; என்ன குணம்; என்ன விவேகம்; என்ன படிமானம். குலதர்மபரிபாலனத்தில் எத்தனைஉத்ஸாஹம்; எவ்வளவு ச்ரத்தை; இவர்களைப் பெற்று மகிழ்வோரைக்காட்டிலும் வேறு பாக்யசாலிகள் உலகத்தில் எவர்' என்று உலகத்தோர் புகழுரை பொழியுமாறு படிந்து வாருங்கள் என்றாள்.

இதற்குமேல் க்ருஷ்ணவிஷயத்தில் நம் பிக்கையில்லாமல் 'நேற்று ஏதோ உதவி செய்கிறேன்' என்று சொல்லிவிட்டான். அப்படியே அவன் செய்கிறான் என்பது என்ன நிச்சயம்? அவன் பொய் பேசுகிறவன் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதிலும் ஒன்றுமறியாத சிறு பெண்கள் நாம். நம்மை லக்ஷ்யம் பண்ணி நாம் கேட்ட உதவியைத் தவறாது செய்வான் என்று எப்படி நம்பமுடியும்?' என்று சிலர் நினைக்கக்கூடுமென்று எண்ணி க்ருஷ்ணன் விஷயத்தைப் பேசுகின்றாள்.

கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்- சத்ருக்களென்று எதிரிட்டுவந்தால் சிறிதும் தயாதாக்ஷிண்யம் பாராது ஆயுதமெடுத்து அவர்களை அடியோடு தொலைத்துவிட்டே மறு கார்யம் பார்ப்பவர் நந்தகோபர். அப்படியே தன்னைச் சேர்ந்தவர்களும் வழி தப்பி நடந்தால் ஸஹிக்கமாட்டார். எல்லோரும் இவருக்குப் பயந்து அவரவர்களின் கடமையை ஒழுங்காகச்செய்துவந்தனர். க்ருஷ்ணனும்அப்படியே. இளம்ப்ராயத்திலேயே நமது குலதர்மமென்று கன்றுகளை மேய்க்கக் க்ருஷ்ணனைக் காட்டுக்கு அனுப்பினர். தந்தையின் கட்டளையென்று மிகுந்த பக்தியுடனும் ச்ரத்தையுடனும் க்ருஷ்ணன் அதை அப்படியே அநுஷ்டித்தார். 'जीवतो वाक्यकरणात्' என்கிறபடி தந்தை இட்ட கட்டளையை அப்படியே அநுஷ்டித்து அவரை மகிழ்விக்கின்றான் க்ருஷ்ணன்.

தந்தையினிடத்தில் நடத்தை இப்படி. தாயினிடத்தில்? கொஞ்சிக் கூத்தாடி கம்பீரமாய் விளையாடி அவளை மகிழ்விப்பான். லோகோத்தரமான அழகுவாய்ந்த குழந்தையின் திவ்யதிருமேனியைப் பார்த்துப்பார்த்து பரமாநந்தபரிதையாய் ஸர்வேச்வரன் கண் கொடுத்ததின்பயனைப் பெற்றேனே என்று மனம் பூரித்திருப்பாள் யசோதை. அப்படி அவளிடத்தில் நடந்துகொள்வான். இப்படி அவரவர்களுக்குத் தக்கபடி நடந்து தன்னைச் சார்ந்தவர்களைக் களிப்பிக்கும் க்ருஷ்ணன் யாரென்று நினைத்தீர்கள்? ஸாக்ஷாத் நாராயணனே. உலகத்தையெல்லாம் தாங்குகிறவன் எவனோ, உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்து

வினுடையவும் உள்ளிருந்து அதை எவ்விதத்திலும் நியமிக்கின்றவன் எவனோ, அப்படிப்பட்டவனும் அகிலஹேயப்ரத்யநீகஸமஸ்தகல்யாணகுணாகரனும் தேவர்களுக்கெல்லாம்தேவனும் ச்ரிய:பதியான ஸாக்ஷாத் புருஷோத்தமன் இவன். மனிதரில் ஒருவன் என்று நினைக்காதீர்கள். ஸாக்ஷாத் நாராயணன் தன்னைச் சேர்ந்தவர்களிடத்தில் ஒருவார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு அதை மாற்றுவானென்றாவது உதாஸீநமாயிருப்பானென்றாவது எண்ணத்தகுமோ? ஸத்யஸந்தனன்றோ அவன். பரம தயாளுவன்றோ?

ஸாக்ஷாத் பரமபுருஷனே இவன் என்று எப்படித் தெரிந்துகொண்டாயென்று கேட்பீர்களாகில் நானே அதைச் சொல்லவேண்டும். அவன் திருமேனி எப்படி இருக்கிறதென்று சாஸ்திரங்கள் கூறுவதாகப் பெரியோர்களிடமிருந்து நாம் கேட்டிருக்கின்றோமோ சிறிதும் ஸந்தேஹத்திற்கு இடமிராமல் அப்படியே ஸாக்ஷாத்தாக க்ருஷ்ணனுடைய திருமேனியைக் காண்கின்றோமல்லவா? கார்மேனி. நீருண்டமேகம்போன்று அவன் மேனியிருப்பதை நன்றாக ஸேவிக்கவில்லைபோலும் நீங்கள். செங்கண். கம்பீரமான நீரில் உண்டாகி ஸூர்யகிரணங்களால் அப்பொழுதே மலர்ந்த செந்தாமரை இதழ்போன்ற அந்தத் திருக்கண்களை ஸேவிக்கவில்லையா? கதிர்மதியம்போல் முகத்தான். முகத்தில்தான் என்ன சோதி வெள்ளம், மனிதருக்குள்ளே எவருக்காவது இது இருக்குமோ? ஒரேஸமயத்தில் வேண்டாதாரைத் தபிக்கும்படியும் ஆச்ரிதரை ஆநந்திக்கும்படியும்செய்யவல்ல இந்தமுகத்தின்தேஜஸ் வேறுயாருக்காவது ஸம்பாவிதமோ? ஆகையால் சிறிதும் ஸந்தேஹப்படவேண்டாம். ஸாக்ஷாத் பரமபுருஷனாகில் மஹாமூடாத்மாக்களான நம்மை லக்ஷ்யம்செய்து நாம் அபேக்ஷித்ததைக் கொடுத்துதவுமோ என்றும் ஆலோசிக்கவேண்டாம். நமக்கே பறைதருவான். உலகத்திற்குள்ளேயே மிகவும் தாழ்ந்தவர்களான நமக்கேவேண்டியதைத்தருவான். ஸர்வோத்க்ருஷ்டனாயிருக்கச்செய்தேயும் ஸர்வநீசர்களோடும் வேற்றுமையில்லாமல் நெருங்கிப் பழகும் ஸ்வபாவமுடையன் அவன். அவனுடைய உதவி நிச்சயமாய் நமக்குக் கிடைக்கும். நமது ஆசை நிறைவேறும். ஆகையால் வாருங்கள் என்றாள்.

2 வையத்து.

எங்கும் நிச்சப்தமாயிருந்தபடியால் இந்தக் கோபகந்யை தனது தோழிகளைக் கூப்பிட்டது நான்கு பக்கங்களிலும் வெகுதூரம் கேட்டது. அனேகமாய் எல்லாப் பெண்களுடைய காதிலும் அது விழுந்தது. உடனே அவர்கள் எழுந்திருந்து கை கால்களை அலம்பி சுத்தி செய்து முகத்தைத் துடைத்துக்கொண்டு ஓடி வந்தார்கள். இவள் அவர்களையெல்லாம் இனிய முறையில் அன்போடு வரவேற்றுப் பார்ப்பதற்கு வெகு அழகாயிருக்கும்படி வரிசை வரிசையாக நிறுத்தி ஸ்ரீக்ருஷ்ணன் திருமாளிகைக்குப்போக ஸங்கல்பம் செய்தாள். அப்போது ஒருபெண் ஒரு கேள்வி கேட்டாள்—'அடி அக்கா, நாம் ஒரு நோன்பு நோற்கவேண்டுமென்றாய்; சரி என்றோம். ஸ்ரீக்ருஷ்ணனிடம்போய் ஏதோ கேட்கவேண்டுமென்றாய்; கூட வந்தோம். இப்பொழுது கூப்பிட்டாய். வந்துவிட்டோம்.' ஆனால் எனக்கு ஒரு ஸந்தேஹம் இருக்கிறது அதை நீ தெளிவுபடுத்தவேண்டும். நோன்போ மற்றக்காரியமோ, எல்லாம் பெரியோர்கள் அநுஷ்டிக்கவேண்டுமேயொழிய குழந்தைகளான நாம் அநுஷ்டிக்கவேண்டியது என்ன இருக்கிறது? சாஸ்திரங்களில் விதித்தபடி நமக்கு அநுஷ்டிக்கத் தெரியுமோ? இப்போது இந்த வ்ரதத்தை அநுஷ்டிக்கவேண்டுமானால் அதற்காக நாம் என்னென்ன செய்யவேண்டும். அதையெல்லாம்செய்ய நமக்குச்சக்தியுண்டா?' என்பது அக் கேள்வி. ஒருத்தி இப்படிக் கேட்டவுடனே மற்றும் பலர் 'ஆமாம், எங்களுக்கும் இதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசையிருக்கிறது சொல்லு பார்ப்போம்' என்றார்கள். எவ்விதத்திலும் தோழிகளின் நன்மையையே செய்யக்கருதிய ப்ரதானப் பெண் அவர்களுக்கு இவ்வாறு விஷயத்தை தெளிவாக எடுத்துரைத்தாள்:—

'இவ்வுலகத்தில் பிறந்த நாமெல்லோரும் ஸுகமாக வாழவேண்டுமென்று விரும்புகின்றோம். இப்படி வாழவேண்டுமாயின் அவரவர்கள் அவரவர்களுக்கேற்பட்ட கடமையைச் செலுத்தவேண்டும். புருஷர்களுக்குப்போல் ஸ்த்ரீகளுக்கும் சில தர்மங்கள் உண்டு. இவர்களுக்குள் வயதானவர்களுக்குப்போல் இளம் பிராயமுள்ளவர்களுக்கும் சில தர்மங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவாஹமாகாதநம்போன்ற கந்யகைகளே செய்யவேண்டியவை இவை.

இவற்றுள் இம் மார்கழி நோன்பு ஒன்று. இதற்காக நாம் செய்யவேண்டிய க்ரியைகளைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். நமக்கு அநுஷ்டிக்கமுடியாததை சாஸ்திரமும் விதிக்காது; வழக்கத்திலும் கொண்டுவரமாட்டார்கள். ஆகையால் சிறுமியர்களான நாம் செய்யவேண்டிய வ்ரதம் ஒன்றுண்டோவென்று கலங்கவேண்டாம். அதை நாம் எப்படிச் செய்துமுடிப்போமென்று திகில்படவேண்டாம்.

யோகநித்ரை என்கிற வ்யாஜத்தினால் உலகத்திலுள்ள எல்லோருடைய யோகக்ஷேமங்களையே எப்பொழுதும் த்யானித்துக்கொண்டிருக்கிற பரமபுருஷனுடைய திருவடியைப் பாடவேண்டும். அவனுடைய திருவடியை நினைக்காமல் எந்தக்காரியம் செய்தாலும் வ்யர்த்தமாகுமென்றார்கள் பெரியோர்கள். இது ஸர்வப்ரதானமான அங்கம்.

நீராடவேண்டும். ஸ்நாநம் ஸர்வகர்மத்துக்கும் அங்கம். ஸ்நாநத்தினால் சுத்தர்களாய்ச் செய்யும் கர்மமே ஸபலமாகும். அதையும் காலையிலேயே செய்யவேண்டும். நெய் பால் உண்ணக்கூடாது. வ்ரதம் என்றால் அதில் ப்ரதானமான-அங்கியான-அம்சம் உபவாஸம்; பட்டினி. அதாவது: ஆஹாரமில்லாமலிருப்பது, ஆஹாரம் தாரகம், போஷகம், போக்யம் என்று மூன்றுவிதம். இதில் சிறு பெண்களான நாம் முற்றிலுமே ஆஹாரமில்லாமல் முழுப்பட்டினியாயிருக்க வியலாது. ஆகையால் தாரகமான வெறும் அன்னத்தை மாத்திரம் அவச்யமானால் சாப்பிடலாம். மற்றப் போஷக போக்யங்களான நெய் பால் முதலியவற்றைச் சாப்பிடவே கூடாது.

இனி அங்கங்கள்; மை இட்டுக்கொள்ளக் கூடாது. பூ வைத்துக்கொள்ளக் கூடாது. அலங்காரங்களும் போக்யவஸ்துக்களே. இவற்றையும் விடவேண்டும்.

நிஷித்தங்களைச் செய்யக்கூடாது. சரீரத்தினால் ஏற்படும் ஜீவஹிம்ஸை முதலியவற்றைத் தவிர்க்கவேண்டும். வாக்கினால் செய்யக்கூடிய கோள் சொல்லுதல் முதலிய அகார்யங்களைப் பரிஹரிக்கவேண்டும்-

இவை நிவ்ருத்திரூபமான அங்கங்கள். ப்ரவ்ருத்திரூபமான அங்கங்கள் சில உண்டு. பாத்திரர்களான அதாவது- யோக்யர்களான மஹான்களைத் தேடி இயன்றவரை தக்ஷிணை கொடுக்கவேண்டும். தாநமில்லாத ஒரு கருமமும் பயனுள்ளதாக ஆகாது. ப்ரஜைகளைப் படைக்கக் கருதிய ப்ரஜாபதி அதற்குமுன் ஸ்வர்ணத்தை உண்டாக்கி சுத்திசெய்து தக்ஷிணை கொடுக்க விரும்பினார். ஆனால் அப்பொழுது ஒருவருமே ஸ்ருஷ்டிக்கப்படவில்லையாகையால் அவர் கொடுக்கும் தக்ஷிணையைப் பெற்றுக்கொள்ள ஒருவருமில்லை. தக்ஷிணை கொடுத்தாகவேண்டும். இல்லாவிட்டால் செய்யும் காரியம் பயனற்றதாம். என்ன செய்வது என்று ஆலோசித்து முடிவில் அவர் அந்த தக்ஷிணையைத் தன் இடதுகையினால்கொடுத்து வலதுகையினால் பெற்றுக்கொண்டாராம். இப்படி வேதம் கூறுகின்றது. இப்படியே பிக்ஷுகர்களுக்கு பிக்ஷையும் கொடுக்கவேண்டும். இதுபோன்ற கர்மா அநுஷ்டிக்கும்போது எத்தனை ஆத்மாக்கள் திருப்தி அடைகின்றனவோ அத்தனை விசேஷம், அவ்வளவு ஸம்ருத்தி, அந்தக்ரியைக்கு உண்டு.

இப்படி அநுஷ்டிக்கும் அங்கியையும் அங்கங்களையும் உகந்து அநுஷ்டிக்கவேண்டும். ச்ரத்தையாய் ப்ரீதியோடு செய்யவேண்டும். அச்ரத்தையாய்ச் செய்வதெல்லாம் வீண் என்கின்றன சாஸ்திரங்கள்.

மற்றொரு விசேஷமும் கேளுங்கள். அநுஷ்டிக்கவேண்டிய க்ரியைகளில் உதாஸீநமாயிராமல் ப்ரவ்ருத்திப்பதற்கும் ப்ரவ்ருத்தித்துச் செய்யும்போது ச்ரத்தையோடும் ப்ரீதியோடும் செய்வதற்கும் மூலகாரணமாய் அதிகாரி விசேஷணம் எனத்தகுந்ததான அம்சம் ஒன்றிருக்கிறது. அது நமக்கு அவச்யம் வேண்டும். நாம் உய்யவேண்டுமென்ற எண்ணந்தான் அது. மநுஷ்யஜந்மம் உத்தமமானது. இது கிடைப்பது அரிது. இது கிடைக்கப் பெற்றவர்சள் மறுபடியும் பசு, பக்ஷி, செடி, கொடி, கல், மண் என்றிப்படி நீச ஜந்மங்கள் வராமல் உயர்ந்த ஜ்ஞாநம் யோகம் பக்தி என்ற இவையெல்லாம் பூர்ணமாயிருக்கும்படியான மேல்படிகளில் ஏறி முக்திபெறும்படியான வழியைத் தேடவேண்டும். இல்லாவிட்டால் மநுஷ்யஜந்மம் வ்யர்த்தமாகும். அஸத்து என்றும் ஆத்மாவைக்கொன்றவர் என்றும் நிந்தை உண்டாகும். இப்படியல்லாமல் நாம் உயர்ந்தபடிகளில் ஏறவேண்டுமானால் நமக்கு விதித்த கர்மங்களை நாம் செவ்வனே செய்யவேண்டும். ஆகவே மேல்படிக்குப் போவதாகிற உய்தலை நன்றாக விவேகித்து உகந்து இக் கிரியாகலாபத்தைச் செய்யவேண்டுமென்றாள்.

3 ஓங்கி.

இப்படி மிகத்தெளிவாக வ்ரதாநுஷ்டாநத்தைப்பற்றி இவள் கூறியதைக்கேட்ட எல்லோரும் நல்ல விவேகம் பெற்று மகிழ்ந்தார்கள். அப்போது ஒரு பெண் 'நோன்பைப்பற்றி நீ சொல்வதெல்லாம்தெரிந்தது. இந்தநோன்பை நாம் அநுஷ்டித்தால் உண்டாகும் நன்மை என்ன என்பதையும் நீ சொல்லவேண்டும். 'எங்களுக்கெல்லாம் நீதான் ஆசார்யை' என்றாள். 'ஆசார்யையா? அப்படிப் பெரியபேர் ஒன்றும் எனக்கு வைக்காதே. நாமெல்லோரும் பரஸ்பரம் தோழிகள். அது இருக்கட்டும் இந்த நோன்பினால் உண்டாகும் பலன் என்னவென்றல்லவோ கேட்கின்றாய். அதையும். சொல்லுகின்றேன் அவதானத்தோடு எல்லோரும் கேளுங்கள்' என்றாரம்பித்து அந்த ப்ரதானப் பெண் மேலும் சொன்னாள்—

'ஆழியெழச் சங்கும்வில்லுமெழ—திசை
வாழியெழத் தண்டும் வாளுமெழ—அண்டம்
மோழையெழ முடிபாதமெழ—அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே.'

என்றபடி வாமநஸ்வரூபம் மாறி த்ரிவிக்ரமன் என்று பேர்பெறும்படி ஓங்கியோங்கிவளர்ந்து உலகத்தை அளந்த உத்தமன் இருக்கின்றானே, மனிதருக்கு மட்டுமன்று ஸர்வ தேவர்க்குமுயர்ந்தவன், அவனுடைய இனிய நாமங்களை கீர்த்தனம்பண்ணி; எதற்காக இதைப்பண்ணவேண்டும் தெரியுமா? அவனை ஸ்மரித்துப்பண்ணுவிட்டால் எந்தப் புண்ய காரியமும் சாம்பலில் செய்த ஆஹுதியே என்று முன்பே சொன்னேன்- ஆகவே நாம் செய்யும் க்ரியை ஸபலமாவதற்காக அவனைப் பாடி நினைக்கவேண்டும்; அது தவிர நாம் செய்யும் அநுஷ்டாநத்தில் எத்தனை குறையிருந்தாலும் அவனை நினைப்பது அவற்றையெல்லாம் தீர்க்கும்; நாம் செய்வது அவனுடைய ஆராதநம் அவனுக்குச்செய்யுமுபசாரம், என்பதை ஜ்ஞாபகப்படுத்தி தத்காலத்தில் உண்டாகக்கூடிய களைப்பை நீங்கச்செய்யும்; காரியத்தில் ஊக்கத்தையும் ப்ரீதியையும் கொடுக்கும். இக்காரணங்களால் அந்த உத்தமனுடைய திவ்யநாமங்களைப் பாடி நாம் நமக்கு விதித்த வ்ரதத்திற்காக ஆதரவோடு நீராடினால்—நீராட்டம் முதலிய ஸர்வ க்ரியைகளையும் விதிப்படி செய்து வ்ரதத்தைச் செவ்வையாகப் பூர்த்திசெய்தால் மனிதர் விரும்பும் ஆயுராரோக்ய ஐச்வர்யம் மூன்றும் நம் நாட்டிலுள்ளோர்க்கு நிரம்பி இருக்கும்.

நாட்டில் ஒரு தீங்கும் உண்டாகாது. பூகம்பம், அதிவ்ருஷ்டியினால் வெள்ளச்சேதம், தீப்பற்றி எரிவது, ப்ரபலமான புயல்காற்று, காட்டிலுள்ள துஷ்டம்ருகங்கள் வந்து கொல்வது முதலிய அகாலமரணகாரணங்கள் இருக்க மாட்டாவாகையால் எல்லோருக்கும் ஆயுஸ்ஸு பூர்ணமாயிருக்கும். வியாதி ஒன்றும் உண்டாகாதாகையால் ஆரோக்யம் பூர்ணமாயிருக்கும்- இனி ஐச்வர்யம்- அதாவது: ஸம்பத்து. இது தான்யஸம்பத்தென்றும் தன ஸம்பத்தென்றும், இருவிதமாயிருக்கும். இதில் தான்யஸம்பத்தைப்பற்றி முதலில் சொல்லுகிறேன். நாடு முழுவதும் மாஸம் மூன்று மழை பெய்யும். ஆறுகள் ஏரிகள் வாய்க்கால்கள் எல்லாம் நிறைந்து நிலங்களில் ஜலம் தானாக வந்து பாய்ந்துகொண்டேயிருக்கும். எப்பொழுதும்குறையாமலே நிரம்பியிருக்கும். செந்நெல் பயிர்கள் பெரியவையாய் த்ரிவிக்ரமன்போலே ஓங்கிவளரும். ஆறுகளிலும் ஏரிகளிலுமுள்ள மீன்கள் வாய்க்கால் வழியாக நிலங்களுக்குள்வந்து பயிர்களின் நடுவேநடுவே புகுந்து ஸஞ்சரிக்கும். எப்பொழுதும் நீர் வற்றாமல் நிறைந்தே இருப்பதால் நிலங்களில் மெல்லிய நெய்தல் கொடிகள் முளைத்து வளர்ந்து பூத்திருக்கும். அப் பூக்களிலுள்ள தேனை அருந்துவதற்காகப் பொறிவண்டுகள் அவற்றில் வந்து உட்கார்ந்து மீன்கள் இங்குமங்கும் ஓடுவதினால் நெய்தல் தண்டுகளும் இவற்றின் நுனியிலுள்ள பூக்களும் அசைய தொட்டிலில்விட்டு ஆட்டப்பட்ட குழந்தைகள் போல் அப்படியே உறங்கிப்போகும். இவ்வளவு ஜலஸம்ருத்தியுள்ளவிடத்தில் தான்ய ஸம்பத்துஎப்படியிருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இனி தன ஸம்பத்து. நமக்கு தனம் கோக்களே. இவை நகரத்தின் நான்கு திசைகளிலும் செழிப்பாக வளர்ந்திருக்கும் புல்லை இஷ்டப்படி வயிறாரமேய்ந்து புஷ்டியடைந்து யானைபோல்வளர்ந்திருக்கும். மனிதர்போல வேஇவையும்பாதொரு தீங்குமின்றிகாலத்தில் கருத்தரித்து அழகாயும் புஷ்டியாயும் உள்ள கன்றுகளை ஈன்று கபடம் சிறிதுமில்லாமல் மிகுந்த ஔதார்யத்துடன் குடம்குடமாகப் பால் கறக்கும். மிக உயரமானவையாதலால்

(தொடரும்)

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

வைராக்ய பஞ்சகம்

श्रीमान्वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

(அவ) 'साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम्। मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना॥' என்கிறபடியே, இக்கலியின் கல்மஷத்தைப் போக்கடிப்பதற்காகத் திருவேங்கடமுடையானுடைய கண்டாம்சமாய் அவதரித்து பரமவைராக்யநிதியாய் விளங்கின ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் வடநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாஸனம் செய்துவிட்டு ஒரு ஸமயம் 'ஸத்யவ்ரத க்ஷேத்ரம்' என்கிற ஸ்ரீ காஞ்சீநகரத்தில் ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தங்களை ப்ரவசநம்செய்துகொண்டு எழுந்தருளியிருந்தபோது, விஜயநகரத்தரசனின் ஸபையில் அத்யக்ஷராயிருந்த 'வித்யாரண்யர்' என்கிற மஹாவித்வான், நம் தூப்புல்வள்ளலின் ஜகத்விலக்ஷணமான வைராச்யத்தை அறியாதவராய், இவர் உஞ்சவ்ருத்தியாயிருப்பதைக்கேட்டு இவரிடம் பால்யஸ்நேஹத்தினால் இந்த மஹானுக்கு விசேஷ உபகாரம் செய்யவேண்டுமென்று கருதி, தன்னைப்போல் இவரை ஒரு ஸபாத்யக்ஷராகச் செய்து அதன்மூலமாய் பெரிய ஐச்வர்யவானாகச் செய்யவேணுமென்று மஹாராஜனிடம் சொல்லி அனுமதிபெற்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுக்கு ஒரு பத்ரிகை எழுதி அனுப்பினார். அதாவது:—

'विख्यातिजलधे विद्वन्मयूरकुलवारिद । विज्ञापनमिदं चित्ते वेङ्कटेश विधीयताम् ॥

आकर्ण्य कीर्तिमतुलां तव बोधसिन्धो रस्मन्मुखेन वसुधावलशासनोऽसौ । अन्तस्समुल्लसित तावकभक्तिवेगात् आम्रेडयत्यनघधीरिदमेव पद्यम् । 'अन्तस्स्वान्तमनन्तसूरिसुकृताकूपारचिन्तामणीन् अध्यारूढहयाननाञ्चितमनः पाथोजसिंहासनान्। वाणीधोरणिवेगनिर्जितसुरस्रोतस्विनीडम्बरान् प्राणान् कानपि भाष्यकारफणितेर्भद्रान् गुणैराद्रिये ॥' इत्यालपति भूपाले वृत्त्या सकलरंजके। कटाक्षास्तवदीयन्तां करुणापरिरंभिणः ॥ प्रसूनमिव रोलम्बःपाथोदमिव चातकः। महीवलभिदेष त्वां माननीयं दिदृक्षते ॥ सह-शिष्याय भवते सर्वं च धनसंचयम्। प्रणामैस्सह साष्टाङ्गैः प्रदातुमयमिच्छति ॥ विनिस्सृते त्वद्वदनार-विन्दात् सरस्वतीसारमरन्दपूरे। निमज्ज्य रन्तुं नियताभिलाषः समुज्जिहीते नृपचित्तभृङ्गः ॥ दयनीयमिमं महीपतिं महनीयादरमेदुरं च माम्। परितोषय बोधवारिधे नगरं प्राप्य नतैर्जनैस्समम् ॥' என்று,

இதின் கருத்து:- 'மஹாக்யாதிபெற்றவரே! தேவரீருடைய கீர்த்தியை அடியேன் மூலமாய் மஹாராஜன் கேள்வியுற்று, ஸதா தேவரீரையே த்யாநித்துக்கொண்டிருக்கிறார். தேவரீரை நேராக ஸேவிக்கவேணுமென்றும் ஆவல்கொண்டிருக்கிறார். தேவரீரை ஸாஷ்டாங்கமாக ப்ரணாமம்செய்து சிஷ்யர்களுடன் தேவரீரைத் தன் ஸர்வதனத்தினாலும் ஆராதித்து தேவரீருடைய முககமலத்திலிருந்து வெளிக்கிளம்புகிற ஸாரமான வாகம்ருதத்தில் மூழ்கவேணுமென்றும் ஆசைப்படுகிறார். ஆகையினால் தேவரீர் சிஷ்யர்களுடன் இங்கு (விஜயநகரம்) எழுந்தருளி மஹாராஜனையும், தேவரீரிடம் ஆதரவுள்ள அடியேனையும் ஸந்தோஷிப்பிக்கவேண்டும்' என்று.

இந்தப் பத்ரிகையைக் கடாக்ஷித்து, அர்த்தகாமபராங்முகரான ஸ்ரீமந்நிகமாந்தமஹா

தேசிகன் தன் வைராக்யத்தைத் தெரிவிப்பதற்காக **'क्षोणीकोण'** என்கிற முதல் ச்லோகத்தை எழுதி அனுப்பினர்.

क्षोणिकोणशतांशपालनकला दुर्वारगर्वानलक्षुभ्यत्क्षुद्रनरेन्द्रचाटुरचनां धन्यां न मन्यामहे।
देवं सेवितुमेव निश्चिनुमहे योऽसौ दयालुः पुरा धानामुष्टिमुचे कुचेलमुनये दत्तेस्म वित्तेशताम् ॥१॥

க்ஷோணீகோணசதாம்சபாலநகலா துர்வாரகர்வாநல க்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ரசாடுரசநாம் தன்யாம் ந மந்யாமஹே। தேவம் ஸேவிதுமேவ நிச்சிநுமஹே யோஸௌ தயாளு:புரா தாநாமுஷ்டிமுசே குசேலமுநயே தத்தேஸ்ம வித்தேசதாம் ॥

(அர்த்தம்) (வயம்–நாம்,) க்ஷோணீ–பூமியின், கோண–ஒருமூலையின், சதாம்ச–நூற்றிலொரு பாகத்தினுடைய, பாலநகலா–ரக்ஷிக்கிற ஸாமர்த்யத்தினல், துர்வார–தடுக்க முடியாத, கர்வாநல–கர்வமாகிற அக்நியால், க்ஷுப்யத்–குழப்பமடைந்திருக்கிற, க்ஷுத்ர நரேந்த்ர–அல்பரான அரசரை, சாடுரசநாம்-ஸ்தோத்ரம் செய்வதை, தந்யாம்–உயர்ந்ததாக, நமந்யாமஹே–எண்ணமாட்டோம், தேவமேவ–ஸாக்ஷாத் பகவானையே, ஸேவிதும்–(ஸ்தோத்திரம் முதலான ஸர்வப்ரகாரத்தினலும்) ஸேவிப்பதற்கு, நிச்சிநுமஹே–நிச்சயித்திருக்கிறேம். ய:–எந்த, தயாளு:–தயாளுவான, அஸௌ–இந்த பகவான், புரா–முன்பு, தாநாமுஷ்டிமுசே–அவல்பிடியைக்கொடுத்த, குசேலமுநயே-குசேலமுனிவரின்பொருட்டு, வித்தேசதாம்-குபேரனயிருக்கும் தன்மையை, தத்தேஸ்ம–கொடுத்தாரோ!

(கருத்து) இப்பூமியின் ஏதோ ஒருமூலையின் ஏகதேசத்தை ஆளும்திறமை தனக்கு இருப்பதனல் மிகவும் கர்விதர்களாய் க்ருத்யாக்ருத்யவிவேகமற்றவர்களான அற்ப அரசர்களை அழகிய வார்த்தைகளால் ஸ்தோத்திரம்செய்து அதனல் அடையும் தனத்தை நாம் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஆகையினல் ஸர்வஜகத்ரக்ஷகனை ஸ்ரீமந்நாராயணனையே ஸ்தோத்திரம் முதலான ஸர்வப்ரகாரத்தாலும் உபாஸிக்க நிச்சயித்திருக்கிறேம். அந்த பகவான் ஆச்ரிதர்களுக்கு **'भोगांश्चैवानुषङ्गिकान्'** என்கிறபடியே ஆநுஷங்கிகமாக ஸகல ஸம்பத்தையும் கொடுப்பான். இந்த விஷயம்: கண்ணனுடைய ஐச்வர்யத்தைப்பார்த்து தன் கந்தல் உத்தரீயத்தில் முடிந்திருக்கும் அவலை உபஹாரமாக ஸமர்ப்பிக்க லஜ்ஜைப்பட்டு மறைத்து வைத்திருந்தபோதிலும் பகவானே அதை அறிந்து இழுத்தவுடன் ஒருபிடி அவலை ஸ்ரீக்ருஷ்ணபகவானுக்கு ஸமர்ப்பித்த குசேலமுனிவருக்கு குபேரஸம்பத்தை அநுக்ரஹித்ததினல் ப்ரத்யக்ஷமல்லவா! (இப் ப்ரபஞ்ச வாழ்க்கையை நச்வரமென்று நிச்சயித்த நாம் அரசர்களுடைய உதவியை எதற்காக எதிர்பார்க்கவேணும்? ஸமஸ்தபலப்ரதனன பரமாத்மாவின் க்ருபாகடாக்ஷமே நமக்கு அத்யந்தம் ஆவச்யகம்) என்று உட்கருத்து.

(1)

(அ-வ) இப்படி விரக்தசிகாமணியான நம் தூப்புல் திருவேங்கடநாதனல் அனுப்பப்பட்ட பத்ரிகையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, வித்யாரண்யர், சொஞ்சகாலம் கழித்து மறுபடியும் இம்மஹானுடைய மனோநிலையை அறியக் கருதி மறுபடியும் ஒரு பத்ரிகையை அனுப்பினர். அதைக் கடாக்ஷித்து நம் தூப்புல் பிள்ளை, அவருடைய அபிப்ராயத்தை அறிந்து தன் த்ருடமான வைராக்யத்தை ப்ரகாசப்படுத்துவதற்காக **'सिलं'** முதலான ஐந்து ச்லோகங்களை எழுதி அனுப்பினர்:—

सिलं किमनलं भवेदनलमौदरं बाधितुं पयःप्रसृतिपूरकं किमु न धारकं सारसम्।
अयत्नमलमल्लकं पथिपटच्चरं कच्चरं भजन्ति विबुधा मुधा ह्यहह कुक्षितः कुक्षितः ॥२॥

ஸிலம் கிமநலம் பவேதநலமௌதரம்பாதிதும் பய:ப்ரஸ்ருதிபூரகம் கிமு நதாரகம் ஸாரஸம்। அயத்நமலமல்லகம் பதிபடச்சரம் கச்சரம் பஜந்தி விபுதாமுதா ஹ்யஹஹ குக்ஷித: குக்ஷித: ॥

(அ-ம்) ஸிலம்—பூமியில் இறைந்துகிடக்கும் ஸ்வல்ப தான்யம், ஔதரம் அநலம்—ஜாடராக்நியை, பாதிதும்-தணிப்பதற்கு, அநலம் கிம்—போதாதா என்ன? ப்ரஸ்ருதி பூரகம்—ஒரு கையை நிரப்பக்கூடிய, ஸாரஸம் பய:-குளத்தின் ஜலம், ந தாரகம் கிமு—போஷிக்காதா என்ன? கச்சரம்—அழுக்கடைந்த, படச்சரம்—கிழிந்த வஸ்த்ரம், பதி-வழியில், அயத்ந-ப்ரயத்நமில்லாமல் கிடைக்கக்கூடிய, மலமல்லகம்—கௌபீநமாக (துணியாக) (பவதி—ஆகிறது.) விபுதா:—வித்வான்கள், குக்ஷித:—வயிற்றின் நிமித்தம், குக்ஷித:—அரசர்களை, முதா—வீணாக, பஜந்தி—அடைகிறார்கள். அஹஹ—கஷ்டம்.

(கருத்து) ஒரு மனிதன் தன்னுடைய பசி தாஹங்களைத் தீர்த்துக்கொள்ளவல்லவா அரசனையாச்ரயிக்கவேண்டும்! ஒருவரையும் யாசிக்காமல் கிடைக்கக்கூடியதாய் நிலங்களில் சிந்தியிருக்கும் தான்யங்களைப் பொறுக்கி எடுத்துவந்தானாகில் அது அவனுடைய பசியை யடக்காதா? குளங்களிலிருந்து ஒரு கை தீர்த்தத்தை அருந்தினால் தாகம் தணிந்துவிடுமே! எதற்காக அரசர்களை அண்டவேண்டும். இப்படி அங்கபாகங்கள் ஸுலபமானாலும் வஸ்திரம் மனிதனுக்கு முக்கியமாக அபேக்ஷிதமாகையால் அதற்காக ப்ரபுக்களை அடையவேண்டாவோ வென்றால்; அழுக்கடைந்த கிழிந்த வஸ்திரங்கள் யத்நமில்லாமலே வழியில் கிடைக்கக்கூடியவைகளாகையால் அதற்காகவும் அரசர்களை அண்டவேண்டாம். இப்படி பசி தாகம் முதலியவையின் நிவ்ருத்தியின் உபாயமறிந்தவர்களும் கேவலம் உதரபோஷணார்த்தமாக அரசர்களை வீணாகஆச்ரயிக்கிறார்களே! அந்தோ! என்கிறார். (2)

(அ-வ) ஸிலம் (நிலங்களில் சிந்திக்கிடக்கும் நெல்) முதலிய தான்யங்களைக் கொண்டுவருவது ஸ்வாதீனமாயிருந்தபோதிலும் தேடி அலைந்து கொண்டுவரவேண்டியிருப்பதாலும் பசிதாகங்கள் தடுக்கமுடியாதவையாகையாலும், அதைத்தணிப்பதற்காக ப்ரபுக்களை அடையவேண்டாவோவென்றால் அதற்கு உத்தரம் ஸாதிக்கிறார்—

ज्वलतु जलधिक्रोडक्रीडत्कृपीडभवप्रभाप्रतिभटपटुज्वालामालाकुलोजठरानलः ।
तृणमपि वयं सायं संफुल्लमल्लिमतल्लिकापरिमळमुचा वाचा याचामहे न महीश्वरान् ॥३॥

ஜ்வலது ஜலதிக்ரோடக்ரீடத்க்ருபீடபவப்ரபாப்ரதிபடபடுஜ்வாலாமாலாகுலோ ஜடராநல: ।
த்ருணமபி வயம் ஸாயம் ஸம்புல்லமல்லிமதல்லிகாபரிமளமுசா வாசா யாசாமஹே ந மஹீச்வராந் ॥

(அ-ம்) ஜலதி—ஸமுத்ரத்தின், க்ரோட—நடுவில், க்ரீடத்-விளையாடிக்கொண்டிருக்கிற, க்ருபீடபவ-படபாக்கியினுடைய, ப்ரபா—ஜ்வாலைக்கு, ப்ரதிபட—எதிரிடையாயும் (ஸத்ருசமாயும்)படு-மிகவும்ஸமர்த்தமாயுமிருக்கிற, ஜ்வாலாமாலா—ஜ்வாலையின்கூட்டத்தினால். ஆகுல:—பரபரப்பையடைந்த, ஜடராநல:—ஜாடராக்நியானது, ஜ்வலது—எரியட்டும், ஆகிலும், வயம்—நாம், ஸாயம்—ஸாயங்காலத்தில், ஸம்புல்ல—விகஸித்த, மல்லிமதல்லிகா—ச்ரேஷ்டமான மல்லிகைபுஷ்பத்தின், பரிமளமுசா—வாஸனை வீசுகிற, வாசா—வாக்கினால், மஹீச்வராந்—அரசர்களை, த்ருணமபி—ஒரு புல்லைக்கூட, ந யாசாமஹே—யாசிக்கமாட்டோம்.

(கருத்து) ஸமுத்ரத்தின் நடுவே வ்ருத்தியடைந்துகொண்டிருக்கிற படபாக்நி போல் வயிற்றுக்குள்ளிருக்கும் ஜாடராக்நி மேன்மேலும் வ்ருத்தியடைந்து எவ்வளவு துன்பப்படுத்தினாலும் நாம், ஸாயங்காலத்தில் தானாகவே மலர்ந்து பரிமளம் வீசுகிற மல்லிகை புஷ்பம்போல் ஸுகுமாரமான ஶப்தஸந்தர்ப்பம், பாவம் இவைகளை உடைய நம் வாக்கினால் ஸர்வேச்வரனை ஸ்தோத்திரம்பண்ணுவதைத் தவிர்த்து க்ஷுத்பாதையைமாத்திரம் நிவர்த்திக்கக்கூடிய பூமியின்ஏகதேசாதிபதியை புல்போன்ற அல்பவஸ்துவையும் யாசிக்கமாட்டோம். (3)

दुरीश्वरद्वारबहिर्वितर्दिकादुरासिकायै रचितोऽयमञ्जलिः ।
यदञ्जनाभं निरपायमस्ति मे धनञ्जयस्यन्दनभूषणं धनम् ॥ ॥४॥

துரீச்வரத்வாரபஹிர்விதர்திகா துராஸிகாயை ரசிதோயமஞ்ஜலி: ।
யதஞ்ஜநாபம் நிரபாபமஸ்தி மே தநஞ்ஜயஸ்யந்தநபூஷணம் தநம் ॥

(அ-ம்) துரீச்வர-கெட்ட அரசர்களுடைய, த்வாரபஹிர்விதர்திகா -வாசல் வெளி திண்ணையில், துராஸிகாயை-துக்கத்துடன் காத்திருக்கும் நிலைமைக்கு, அயம் அஞ்ஜலி- இந்த அஞ்ஜலியானது, ரசித:-செய்யப்பட்டது. யத்-எந்தக்காரணத்தினால், அஞ்ஜநாபம்- மைபோன்ற காந்தியை உடையதாயும், நிரபாயம்-குறைவில்லாததாயும், தநஞ்ஜயஸ்யந்தந பூஷணம்-அர்ஜுநனுடைய தேருக்கு அலங்காரமாயுமிருக்கிற, தநம்-ஸ்ரீக்ருஷ்ணனுகிற தநமானது, மே-எனக்கு, அஸ்தி-இருக்கிறதோ!

(கருத்து) ஸம்பத்தின் மதத்தினால் க்ரூரஸ்வபாவமுள்ள அரசர்களுடைய தயவுக்காக, நடன், விடன், தாஸி முதலியவர்களிருக்கக்கூடிய அரசர்களின் வாசல்திண்ணையில் வாசல்காப்போனுடைய மிரட்டுதலை ஸஹித்துக்கொண்டு மிகக்கவலையோடு காத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை நமக்கு வேண்டாம். **'शरीरमाद्यं खलु धर्मसाधनम्'** என்கிறபடி புருஷார்த்தஸாதநமான சரீரத்தைப் போஷிக்க தநம் வேண்டாமோவென்றால், இந்த அரசர்கள் கொடுக்கும் ஸ்வல்பதநம் செலவழிந்தால் நாளடைவில் அழிந்துபோகக்கூடியது. எப்போதும் அழிவில்லாததாயும், பக்தபராதீநமாய் அர்ஜுநனுக்கு ஸாரத்யம் செய்ததினால் ஸர்வஸுலபமுமான, மைபோன்று நீலநிறமுள்ள ஸ்ரீக்ருஷ்ணனுகிற தநமானது எனக்கு இருக்கிறது. அதுவே ஸகல புருஷார்த்தத்தையும் கொடுக்கக்கூடியது என்கிறார். (4)

(அ-வ) **'विधिशिवसनकाद्यैः ध्यातुमत्यन्तदूरम्'** என்கிறபடியே ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் த்யாநிக்கக்கூட விஷயமாகாத பகவானை ஸேவிப்பதைக்காட்டிலும் பூமியில் எல்லாருக்கும் ப்ரத்யக்ஷமாய் வாக்ஸ்துதிமாத்திரத்தினால் ஸிப்பிக்சத்தகுந்த பூபாலர்களை ஆச்ரயிப்பது புஷ்கலமான தநத்தைக்கொடுப்பதால் ச்லாக்யமன்றோ! என்றால் அதற்கு உத்தரமருளிச்செய்கிறார்—

शरीरपतनावधि प्रभुनिषेवणापादनादबिन्धनधनञ्जयप्रशमदं धनं दन्धनम् ।
धनञ्जयविवर्धनं धनमुदूढगोवर्धनं सुसाधनमबाधनं सुमनसां समाराधनम् ॥ ॥५॥

சரீரபதநாவதிப்ரபுநிஷேவணாபாதநாதபிந்தநதநஞ்ஜயப்ரசமதம் தனம் தந்தனம் ।
தநஞ்ஜயவிவர்த்தநம் தநமுதூடகோவர்த்தநம் ஸுஸாதநமபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம் ॥

(அ-ம்) அபிந்தநதநஞ்ஜய-ஜலத்தை உணவாக உடைய ஜாடராக்நிக்கு, ப்ரசமதம்-சமநத்தைக்கொடுக்கக்கூடியதான, தநம்-தனமானது, சரீரபதநாவதி-தேஹாவஸாநம்வரைக்கும், ப்ரபுநிஷேவண-ப்ரபுக்களை ஸேவிப்பதை, ஆபாதநாத்-உண்டுபண்ணுவதனால், தந் தநம்-வ்யர்த்தம்: தநஞ்ஜயவிவர்த்தநம்-அர்ஜுநனுக்கு மேன்மையைச்செய்கிறதும்(அக்நியை வ்ருத்திசெய்கிறதும்) உதூடகோவர்த்தநம்-வஹிக்கமாட்டாத கோவர்த்தநத்தையுடையதும் (பசுக்களைப்போஷிக்கக்கூடியதும்,) ஸுமநஸாம்-தேவர்களுக்கு (வித்வான்களுக்கு), ஸமாராதநம்-த்ருப்தியைக்கொடுக்கிறதாயும், ஸுஸாதநம்-(மோக்ஷம் முதலான எல்லா புருஷார்த்தங்களுக்கும்) நல்ல ஸாதநமாயும், அபாதநம்-தன்னையாச்ரயிப்போருக்கு ஒரு கெடுதியும்பண்ணுததாயுமிருப்பது எதுவோ அதுதான், தநம்—உயர்ந்த தநம்.

(கருத்து) இப்படி நாம் ஸம்பாதிக்கும் தநமானது தாத்காலிகமான பசி தாகங்களைத் தீர்க்கக்கூடியதாயினும், சரீரம் முடியும்வரையிலும் ப்ரபுக்களுடையமுகத்தின் தயவை எதிர்பார்ப்பதால் உண்டான மஹத்தான க்லேசத்தை உண்டுபண்ணக்கூடியது. ஆகை

பினால் இந்த தநம் ப்ரயோஜநமற்றது. நம்மாலாச்ரயிக்கப்பட்ட பகவானுகிற தனமோவென்றால், தநஞ்ஜயனுக்கு உபதேசாதிகளைச்செய்து மேன்மையை உண்டுபண்ணிற்று. முன் சொல்லப்பட்ட தநம் தநஞ்ஜயனுக்கு(ஜாடராக்நிக்கு)நாசத்தை விளைவிக்கிறது. மேலும், அது தனமுள்ளவனுக்குமாத்திரம் போஷகமாயும், தன்னையடைந்தவனுக்கு இடையூறுகளைச் செய்யக்கூடியதாயுமிருக்கிறது. நம் தநமோ கோவர்த்தநபர்வதத்தை உத்தரிப்பித்து கோக்களையும் கோபர்களையும் காப்பாற்றியது. மேலும் தன்னையாச்ரயித்த தேவர்களையும் வித்வான்களையும் த்ருப்தி செய்துவைக்கக்கூடியது. ஆகையினால் இதுதான் உயர்ந்த தநம். (5)

नास्ति पित्रार्जितं किञ्चित् न मया किञ्चिदार्जितम् ।
अस्ति मे हस्तिशैलाग्रे वस्तु पैतामहं धनम् ॥ ॥६॥

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் நமயா கிஞ்சிதார்ஜிதம் ।
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ॥

(அ-ம்) மே—எனக்கு, பித்ரார்ஜிதம்—பிதாவினால் ஸம்பாதிக்கப்பட்ட தநம், கிஞ்சித்—கொஞ்சமும், நாஸ்தி—கிடையாது. மயா—என்னாலும், கிஞ்சித்—கொஞ்சமும், ந ஆர்ஜிதம்—ஸம்பாதிக்கப்படவில்லை. ஆனால், பைதாமஹம்—ப்ரஹ்மாவினால் (பாட்டனால்) ஸம்பாதிக்கப்பட்ட, வஸ்து—வஸ்துவான தேவாதிராஜனுகிற, தநம்—தநமானது, ஹஸ்திசைலாக்ரே—அத்திகிரியின் சிகரத்தில், மே—எனக்கு, அஸ்தி—இருக்கிறது.

(கருத்து) ஸ்வார்ஜிதமாயோ பித்ரார்ஜிதமாயோ ஏதாவது கொஞ்சம் தநம் உமக்கு இருந்தாலன்றோ ப்ரபுக்களை இப்படி த்ருணீகரிக்கலாம் என்றால் அதற்குப்பதிலாக அருளிச்செய்கிறார். எனக்கு பித்ரார்ஜிதமோ ஸ்வார்ஜிதமோ கொஞ்சமும் கிடையாததுதான். ஆனாலும் பிதாமஹனால் (ப்ரஹ்மாவால், பாட்டனால்) ஸம்பாதிக்கப்பட்ட தநம் ஒருவராலும் அபஹரிக்கக்கூடாமல் அத்திகிரியின் உச்சியிலுள்ளது. ப்ரஹ்மாவின் யாகத்தில் த்ருப்தியடைந்து ஆவிர்பவித்த தேவாதிராஜனே நமக்கு உயர்ந்த தநம். அதைத் தவிர க்ஷேத்ர தநத்தை நாம் விரும்பவில்லை என்கிறார். பித்ரார்ஜிதத்தைக்காட்டிலும் பிதாமஹன் ஸம்பாதித்த ஸொத்தில் பேரனுக்கு சொந்த உரிமை' என்கிற நீதியும் இங்கு ஸூசிப்பிக்கப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள்.

कविताकिर्कसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம்

(11-வது ஸம்புடம் 11-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இன்னும் பல ரஸங்கள் இங்கே வ்யஞ்ஜநம் செய்யப்படுவதை விளக்குவோம். இந்த த்யாநப்ரகரணத்தில் 'யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்காநீவ ஸர்வச: | இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய: தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||' என்று கீதையின் இரண்டாமத்யாயத்தில் கரணங்கள் உள்ளே ஒடுங்கி வசப்படுத்தும் நான்கு படிகளில் யதமாநாவஸ்தை என்ற முதல்படியை கூறுகையில் கூர்மம் தன்னுடைய அங்கங்களை உள்ளே ஒடுக்கிக்கொள்ளும் த்ருஷ்டாந்தம் பகவானால் காட்டப்பட்டதை 'ஒடுங்க' என்று ஆழ்வார் ஸூசிக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. ஆமை தன் அங்கங்களை உள்ளே இழுத்துக்கொள்வதுபோல் இந்த்ரியவிஷயங்கள்எல்லாவற்றிலிருந்துமனத்தை உள்ளே ஒடுக்கி(ப்ரதிஸம்ஹ்ருத்ய)அதை த்யாநம்செய்யும்பொருளில் நிலைநிறுத்துபவன் ஸ்திதப்ரஜ்ஞன் என்று அங்கே பாஷ்யம். 'இப்படி அவன் பக்கலில் கரணங்களை ஒடுங்கப் பண்ணவே' என்று திருவாராயிரம் இந்த்ரியங்களை உள்ளே ப்ரதிஸம்ஹாரம் பண்ணுவதைக் கூறிற்று. ஸாஷ்டாங்கப்ரணாமத்தை வர்ணிக்கும் ச்லோகத்திலும், மனம், புத்தி, அபிமானம், இவைகளையும் அவற்றுடன் கால்கள் நான்கையும் (கைகளும் கால்களும்) ஐந்தாவதாக சிரஸையும் பூமியிலே பயபக்தி ஒடுக்கத்தோடுவைத்து வணங்குக என்று கூறுகையில் 'கூர்மாங்கவத்' என்கிற த்ருஷ்டாந்தம் கூறப்பட்டதையும் ஆழ்வார் இங்கே ஸூசிக்கிறார். வாங்மநஃகாயங்கள் மூன்றும் அத்யந்தம் பகவத்ப்ரஹ்வமாக ஒடுங்கும் நம:சப்தப்பொருளை ஸூசிக்கிறார். நமஸே ஜ்ஞாநயஜ்ஞமாகிய சிறந்த அத்வரமாகுமென்பதையும் ஸூசிக்கிறார். 'ப்ரகாரபூதரான நீங்கள் ப்ரகாரியான அவன் பக்கலிலே சென்றுசேர' என்று ஈடு ஸாதித்தது. ஸத்வித்யையில் ஜீவாத்மாக்களும் பரமாத்மாவென்னும் வஸ்துவின் ப்ரகாரங்களேயல்லாது தனித்தநிலையுள்ளவஸ்துக்களல்லவென்றும், ஜீவாத்மாவின் அஹமும் அவனுள்ளே விச்ரமித்து ஒடுங்கினால்தான் 'ஸுகீ' இருக்கிறாய் என்கிற சொல்லுக்கு உரியதாகுமென்றும், அப்படி ஒடுங்காவிடில் இலதெனப்படுமென்றும், 'தத்ஸுகீ' வாக்யத்தின் பொருளை ஸூசிக்கிறார். அந்த வித்யையில் 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' என்று ப்ரஹ்மஸம்பத்தியென்னும் ஸித்தியைக்கூறும் வாக்யத்தின் பொருளையே 'பின்னுமாக்கை விடும் பொழுதெண்ணே' என்பதால் பாடுவது ஸ்பஷ்டம். ஸ்ரீ ரங்கராமாநுஜஸ்வாமி அந்த ச்ருதியை இங்கே உதாஹரித்தார். ப்ரகாரியென்னும்வஸ்து இல்லாமல் ப்ரகாரமென்னும் விசேஷணம் தனித்துநிற்கமுடியாது. ப்ரகாரியின் ஸத்தைதான் ப்ரகாரத்திற்கும் ஸத்தையாகுமென்பர். அவனுடைய விபூதிக்குள்ளே தானும் ஒருவனாய் அந்வயித்து எல்லாவற்றிற்கும் அம்சியான அவனுக்குள் மற்ற எல்லாவற்றையும்போல் தானும் அம்சமாக அடங்கி ஒடுங்கித் தனிமைதவிர்வதை 7-ம் பாசுரத்தில் காட்டி இருப்பது முன்பே காட்டப்பட்டது. 'ஒடுங்கல்' என்கிற பதம் ஸங்கோசமென்னும் சுருக்கத்தையும், ப்ரதிபந்தகங்களான இடஞ்சல்களையும் சொல்லும். அவித்யாகர்மவாஸநாருசிகளாகிய ப்ரதிபந்தகங்களால் பூர்ணப்ரஸரயோக்யமான ஜ்ஞாநமென்னும் தர்மத்திற்கு ஒடுங்கலென்னும் ஸங்கோசம்செய்யும் கார்யகாரணபாவத்தால் ஸ்வரூப விரோதிகளைச் சொல்லுகிறதென்று இவனுக்கு ஸங்கோசத்தைப் பிறப்பிக்குமவையென்னுதல்' என்று ஈடு விளக்கிற்று. 'ஒடுங்கலும்' என்ற சொல்லை ஒடுங்கின உடனே, அவனுக்குள் நுழைந்து ஒடுங்கின க்ஷணமே' என்றும் பொருள்கொண்டு 'தததிகமே' என்கிற 7-மதிகரணஸூத்ரத்தில் பக்தியோகம் பரிநிஷ்டிதமாய் கைகூடி துவங்கும் ஆரம்பதசையிலேயே ஒடுங்கல்களென்னும் முன் பாபங்கள் இந்த பக்தியோகநிஷ்டனைவிட்டு அகன்றுவிடவேண்டுமென்று 'அஹம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'

என்று பகவான் ஸங்கல்பித்துவிடுகிறான் என்று ச்ருதப்ரகாசிகாதிகளில் காட்டப்படும் ஸூத்ரப்பொருளை ஆழ்வார் இங்கே ஸ்பஷ்டமாய் விளக்குகிறார். 'ஒடுங்கலும்' என்கிற சொல்லை இருதரம் ஆவ்ருத்திசெய்துகொள்ள வேணும். அவனுள் ஒடுங்கும்க்ஷணத்திலேயே ஒடுங்கலுமெல்லாம்விடும் என்று கருத்து. 'ஜ்ஞாநஸ்வரூபமானவாத்மாவிற்கு ஸர்வத்தையும் விஷயீகரிக்கயோக்யதையுடைய ஜ்ஞாநமென்னும் தர்மமுண்டு. அந்த தர்மமாகிய ஸ்வபாவத்திற்கு அநாதிகர்மாதிகளால் ஒடுங்கல், விரிதல் என்னும் ஸங்கோசவிகாஸங்களான விகாரங்களுண்டு. ஸுகதுக்கங்களாகிய அநுபவங்கள் அந்த தர்மத்தின் விகாரங்கள். ஆத்மா அடுத்த பாசுரத்தில் கூறப்படுகிறபடி ஒண்பொருள், ஜ்ஞாநஸ்வரூபன், அந்த ஸ்வரூபத்திற்கு விகாரம் கிடையாது. அவனுடைய ஜ்ஞாநமென்னும் தர்மத்திற்குத்தான் விகாரமுண்டு. அந்த தர்மமும் விபுவான ஸ்வபாவமுடையதே. ஆயினும் அநாதிகர்மத்தால் ஒடுங்கலென்னும் ஸங்கோசமுளது. அந்த ஒடுங்கலால்தான் ஸம்ஸாரமென்னும் பந்தமேற்பட்டிருக்கிறது.' என்கிற விசிஷ்டாத்வைதஸித்தாந்ததத்வங்களெல்லாமிங்கே ஆழ்வாரால்ஸூசிக்கப்படுகின்றன. பகவானுடைய பஜநத்தால் அவன் க்ருபையைப்பெற்று அவனருளால் 'க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி' என்றபடி ஸகல கர்மங்களாகிய ஒடுங்கல்கள் விடவே 'யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாலநாந்மணே:। தோஷப்ரஹாணாந்நஜ்ஞாநமாத்மந: க்ரியதே ததா। யதோதபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரம்। ஸதேவ நீயதே வ்யக்திமஸத: ஸம்பவ: குத:। ததா ஹேயகுணத்வம்ஸாதவபோதாதயோ குணா:। ப்ரகாச்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே॥' என்ற விஷ்ணுதர்மவசநப்படி ஜ்ஞாநதர்மத்தினுடைய ஸ்வாபாவிகமான ஆநந்த்யத்தின் அபிவ்யக்தியென்னும் ஆவிர்ப்பாவத்தைப் பெற்று முக்தி ஸித்திக்கிறதென்று 4-மத்யாயத்தின் 1-ம்பாதத்தின் முதலதிகரணத்தில் 'ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநசப்தாத்' என்கிற ஸூத்ரம் விளக்கிற்று. பரஞ்ஜ்யோதிஸ் என்னும் அவன்கண் ஒடுங்கி (உபஸம்பத்ய) முக்திபெறும் ஜீவன் ஈறிலவொண்பொருள், எண்பெருக்கந்நலமுடையதுமான ஸ்வஸ்வரூபத்தின் பூர்ணாவிர்ப்பாவத்தைப்பெறுவதை ஸூத்ரகாரர் வர்ணித்ததை இங்கே விளக்குகிறார். 'பின்னுமாக்கைவிடும்பொழுதெண்ணே' என்பதால் சாந்தோக்யம் முடிவில் 'ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே' என்று ஆயுள் முழுவதும் தேஹத்தைவிட்டு ப்ரயாணம்செய்யும்வரையில் ப்ரஹ்மோபாஸநநிஷ்டனாகவேயிருந்து ப்ரஹ்மத்தில் ப்ரவேசித்து இனித் திரும்புவதில்லை என்கிற அநாவ்ருத்திப்பேரின்பம் பெறுகிறான் என்று நிகமநம் செய்திருப்பதையும், அதை ஆதாரமாகக்காட்டும் 'ஆப்ரயாணாத் (அப்ராயணாத்) தத்ராபி ஹி த்ருஷ்டம்' என்று 6-மதிகரணஸூத்ரம் ஆக்கைவிடும் பொழுதும் ஸ்மரணம் தொடர்ந்து அவிச்சிந்நமாய் வரவேண்டுமென்று காட்டி இருப்பதையும் ஆழ்வாரிங்கே தமிழ்செய்து விளக்குகிறார். 'ஆப்ரயாணாத்' என்கிற ஸ்ரீபாஷ்ய ஸூத்ரபாடம், 'ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது:। ப்ரயாணகாலேபி ச மாம் தே விதுர்யுக்தசேதஸ:' என்கிற கீதாவசநத்திற்குப்பொருந்தும். 'அப்ராயணாத்' என்கிற பாடம் 'ப்ராயணாந்தமோங்காரமபித்யாயீத ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம்' என்கிற ப்ரச்நோபநிஷத்திற்குப் பொருந்தும். இரண்டுபாடத்திலுமர்த்தமொன்றே. ஆக்கைவிடும்வரையில் ப்ரஹ்மத்தின் இன்பஸ்மரணாவ்ருத்தி ஆவச்யகமென்று ப்ரச்நோபநிஷத்து விளக்குவதையுமாழ்வாரிங்கே ஸூசிக்கிறார். 'அந்தகாலே ச மாமேவ ஸ்மரந்முக்த்வா கலேவரம்' என்கிற கீதாச்லோகத்திற்கு இது தமிழ் உரையாகும். 'ஸ்மரந்முக்த்வா கலேவரம்' என்பது ஆக்கைவிடும்பொழுதெண்ணுவதைச் சொல்லுகிறது. 'எதை நினைத்துக்கொண்டு முடிவில் தேஹத்

தைவிடுகிருனே அதையே (அத்தன்மையையே ஜீவன் பின்பு பெறுவான் என்ற கீதாச்லோகத்திற்கு தாத்பர்யசந்த்ரிகையில் 'ஜடபரதர் தான் மிக்க ஸ்நேஹத்தோடு வளர்த்த மான் குட்டியையே தேஹம்விடும்பொழுது எண்ணியதற்கு அவருக்கு மற்றோர் மாநக ஜந்மம் வந்ததேயொழிய தான் வளர்த்த மாநகவே யாகவில்லை' என்று எடுத்துக்காட்டி கடைசியில் நினைக்கப்படும் ப்ரஹ்மத்தைப்போன்ற ஜ்ஞாநாநந்தத்தன்மையையும், எண்குணத் தன்மையையும் அடைவானேயொழிய ப்ரஹ்மமேயாகமாட்டானென்று ரஸமாகக் காட்டப்பட்டது. இதை அடுத்த பாசுரத்திலாழ்வார் அதி ரஸமாக விளக்குகிருர். ஸத்தென்னும் ப்ரஹ்மத்தின் ஸர்வாத்மத்தன்மையை உண்மையாக ஆசார்யரிடம் அறிந்து அதிலேயே விச்சேதமின்றி நிஷ்டனுய் இருப்பவன் 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' என்று ஸத்வித்யையில் 'கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ' என்று ஆழ்வார் வரப்போகும் பரமபதப்ரயாணத் திருநாளை கூஷாகூஷா என்று ஆவலுடன் ப்ரதீக்ஷிப்பதைக்காட்டுமுத்கண்டையையும், 'ஹொமெந க்ஷிதமெ க்ஷயிஷ்ணுவா அத ஸம்பத்ஸ்யதெ' என்ற இப்பாதத்தின் கடைசி ஸூத்ரம் அந்த ச்ருதியில் தேஹாவஸாநஸமயஸோத்கண்டப்ரதீக்ஷைக்கருத்தை விளக்கியிருப்பதையும் ஆழ்வாரிங்கே விளக்குகிருர். இந்த யோஜனையில் 'எண்ணே' என்பதற்கு 'அவாவுடன் ப்ரதீக்ஷித்துக்கொண்டிரு' என்று பொருள். பின்பு ஆக்கைவிடும்பொழுது என்று வருமோவென்று ஆவலுடன் எண்ணிக் கொண்டே இருவென்று உதாஹரித்த ஸத்வித்யாவாக்யத்திற்கும். அதை ஸூசிக்கும் கடைசி ஸூத்ரத்திற்கும் கருத்தென்பதை விளக்குகிருர். 'ஒடுங்கலும்' என்பதற்கு தீவினையைமட்டும் பொருளாகக்கொண்டு ஆக்கைவிடும்பொழுது முன்செய்த எல்லாத் தீவினைகளும் தீவினையல்லாத மற்ற எல்லாப் புண்யங்களும் ஆக எல்லாப் புண்யபாபங்களும் விட்டுவிடுமென்று இப்பாதத்தின் 'இதரஸ்யாப்யேவமஸம்ஶ்லேஷ: பாதே து' என்கிற 8-வது அதிகரண ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டதையுமாழ்வாரிங்கே நிபுணமாக ஸூசிப்பது ரஸிக்கத் தக்கது. பகவதுபாஸநத்திற்கு அநுகூலமான ஆரோக்யாதிபலங்களைக்கொடுக்கக்கூடிய புண்யங்களுக்கு உபாஸநத்தொடக்கத்தில் அச்லேஷம் வருவதில்லை. பலம்தராமல்மிச்சமிருக்கும் புண்யங்கள் பாதமென்கிற சரீரபாத காலத்தில்தான் (ஆக்கைவிடும்பொழுதுதான்) விடும் என்பதும் பொருள்படும்படி கூறுகிருர். 'எண்ணே' என்பதற்கு 'ஸங்கல்பம் மட்டுமே' அதாவது உபாஸகனுடைய புண்யபாபங்கள் ஆக்கைவிடும்பொழுது இவனை விடவேண்டுமென்கிற ஸங்கல்பம்மட்டும் பகவானுல் முன்பு செய்யப்படும். விடுவது பின்பு ஆக்கைவிடும் பொழுதே என்கிற ஸித்தாந்த ஸூக்ஷ்மப் பொருளையும் நிபுணமாக ஸூசிக்கிருர்.

புண்யபாபங்களாகிய ஜ்ஞாநஸங்கோசமான ஒடுங்கல்கள் இவனைவிடுவது பின்பு ஆக்கைவிடும்பொழுதுதான். 'பின்பு' என்ருல் முன்பு என்ன நடந்தது என்ற கேள்விவர, முன்பு—அதாவது உபாஸநத்தொடக்கத்தில் ஆக்கைவிடும்பொழுது புண்யபாபங்கள் இவனை விடவேண்டுமென்ற எண்—ஸங்கல்பம் மட்டுமே என்ற யோஜனையையும் கொள்ளுகிறது இப்பாசுரம். 'எண்ணே' என்றதில் ஏவகாரம் முன்பு எண் என்னும் ஸங்கல்பம்மட்டுமே. பின்புதான் உண்மையில் விடுவதென்பதை ஸூசிக்கிறது.

(தொடரும்)